# அமுது

தமிழுக்கும் அமுதென்று பேர்

AMUDHU






ஊற்று 4
துளி 06
MARCH 2002

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கையின் மாதாந்த குடும்ப சஞ்சிகை மார்ச் 2002 -30/-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதக் கடலில்


அமுத வாசல் ........ 2
மின்மினிகள் ........ 4
இதழாளர் வர்க்கம் ........ 5
**நெற்றிக்கண்** ........ 6
**அரசியல்**
பாதை திறந்தொரு பயணம் ........ 7
எழுத்து எதிர்ப்புணர்வுக்கான ஆயுதம் ........ 12
**சிறுகதை**
கொம்புத்தேன் ........ 14
**பரிசுக்கவிதை** ........ 17
**சிறுகதை**
கப்பற்கொள்ளை ........ 18
உதுவன்கந்த சரதியல் ........ 22
ஆணாதிக்கம் ........ 25
நீங்கள் தூவிய மலர்கள் ........ 26
இந்த நாளில் அன்று ........ 28
**பரிசுக்கதை**
**நான் ஒரு தனி ஆள்** ........ 30
பஸ்ஸின் கதை ........ 33
மறு காலனியாதிக்கத்துக்கு செங்கம்பளம் ........ 37
மற்றுமொரு நடிகையின் மரணம் ........ 39
தற்கொலை ........ 40
**சினிமா:**
தப்ப முடியாத கனவுலகு ........ 42
**மருத்துவம்:**
கருப்பையில் வளரும் கட்டிகள் ........ 47
நூல் அறிமுகம் ........ 48




07
**பாதை திறந்தொரு பயணம்**



33
**பஸ்ஸின் கதை**



42
**தப்ப முடியாத கனவுலகு**


**உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை அமுது வரவேற்கிறது.**
**ஆசிரியர், 'அமுது'**
**இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு 10.**
**தொலைபேசி: 429496,**
**ஃபக்ஸ்: 429270**
E-Mail: webmgr@sri.lanka.net



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்துகிடப்பது கோழி மட்டுமா?

நான் அமுது சஞ்சிகையை முதல் இத ழிலிருந்தே வாசித்து வருபவள். அமுதில் வரும் அனைத்து விடயங்களும் உண்மை யாகக் கூறுவதனால் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. எனினும் இவ்வருட ஆரம் பத்தில் இருந்து கலேவளை பகுதிக்கு அமுது வருவது தடைப்பட்டுள்ளது. கார ணங்களைகண்டறிந்து தொடர்ந்து அமுது சஞ்சிகையை பெற்றுக்கொள்ள வழிவகுக் குமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

**- நிகாஸ்,**
**கலேவளை.**

பெப்ரவரி அமுது முகப்பில் வெளிவந்த படத்தைப் பார்த்ததும் உடனே வேண்டிப் படிக்க வேண்டும் என்ற ஆவலைத் தூண் டியது. வாசலைத்தாண்டிய கடிதம் பகுதி வெளிவரவில்லை. அரசியல் தவிர்ந்த சமூக நலன் சம்பந்தமான விடயங்களைப் பற்றி எழுதினாலும் அதனை வாசலைத் தாண்டிய கடிதப் பகுதியில் சேர்த்துக் கொள்வீர்களா?
மற்றும்படி பார்த்துப் படித்து பக்குவ ப்படுத்தி வைக்க வேண்டிய இதழ் அமுது.

**- தமிழ்ச்செல்வி,**
**புசல்லாவ.**

பெப்ரவரி மாதஇதழ் வாசித்தேன். எல்லா அம்சங்களும் சிறப்பாகவே இருந்தன. சினிமாவைத் தவிர. அதற்குப் பதில் குறுக் கெழுத்துப்போட்டி புகைப்படப் போட்டி, கேள்வி-பதில் போன்றவைகளுடன் வெளி வந்தால் பயனுள்ளதாக இருக்கும்.

**- Sajjad Ahamed**
**Napawella.**

பெப்ரவரி அமுதக்கடலில் நீந்திப் பார்த் தேன். ஜொலியாக இருந்தது. அடுத்த இதழ் முதல் அமைச்சர்களின் பெயர், அமைச்சு களின் விபரம், விலாசம் போன்றவைகளை யும் இளங்கீரன் சுபைரின் நீதியே நீ கேள் என்ற தொடர் கதையும் மறுபிரசுரமாக வெளியிடும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**- இம்தியாஸ் ஹுசைன்,**
**தெரணியகலை.**

மாதாந்த இதழ் எனினும் சில அரசியல் நிகழ்வுகளை காலம் தாழ்த்திய பின்னரா யினும் ஆதாரபூர்வமாக அதன் உண்மை நிலையை வெளிப்படுத்தும் ஆற்றல் அமுதுக்கே உரிய தனிப்பாணி. தற்போது அரசியல் விடயங்களில் மாற்றம் காணப் படுவது போல் தெரிந்தாலும் ஏனைய பத் திரிகைகளை விட 'அமுது'வில் வெளிவரு வதை படிக்க ஆவலாய் காத்திருக்கிறேன். உண்மையை உண்மையாய் வெளிப்படுத் துவதில் அமுது முதலிடம் வகிக்கிறது. அதன் தரம் மென்மேலும் சிறப்புற ஆசிரிய பீடத்திற்கு என் நல்லாசிகள்.

**- S. ஆத்மநாதன்,**
**நாவலப்பிட்டி.**

அமுது வாசகர்களில் நானும் ஒருவன். அமுது தொடங்கிய காலத்தில் இருந்து இதுவரையும் இரண்டு மாதங்கள் தவிர்ந்த ஏனைய அமுது இதழ்களை நான் படித்து விட்டு மிகவும் பத்திரமாக பாதுகாத்துவரு கின்றேன். குறித்த இருமாத அமுதும் போக்குவரத்தில் யாழ்ப்பாணம் கொழும் புக்கிடையே சீரின்மை நிலை காணப்பட்ட தனால் கிடைக்கவில்லை. பல கடைகளி லும் விசாரித்து பலன் கிடைக்கவில்லை. கிடைக்காது விட்ட இரு மாதத்தினையும் குறித்து அனுப்பி அதற் கான பெறுமதியையும் அனுப்பினால் எனக்கு அமுது கிடைக்குமா? அத்துடன் அமுதில் எனது ஆக்கமும் வரவேண்டும் எனும் ஆசை. அமுதில் பிரசுரித்து என்னை மகிழ்வித்து ஊக்குவிக்குவிப்பீர்களா?






**- கி. தீப்திகா,**
**அல்வாய் மேற்கு.**

அமுது மாதாந்த குடும்ப சஞ்சிகை சிறப் பான வெளிப்பாடுகளால் வாசகர்களின் மனங்களைக் கவர்ந்துள்ளதோடு தொட ரும் நல்ல இலக்கிய ஆக்கங்களை வெளி யிட்டு எழுத்தாளர்களையும் ஊக்குவிக்கும் தங்கள் பணி தொடர வாழ்த்துகின்றேன். சமூக, குடும்ப ஆக்கபூர்வமான சிறுகதை களையும், கவிதைகளையும் பிரசுரிப்பதன் மூலம் மேலும் அமுது சஞ்சிகையை ஜன ரஞ்சகமாக வாசகர்களுக்குத் தந்து நிலை த்திருக்க வேண்டுகின்றேன்.

**- நெடுந்தீவு மகேஷ்.**

எல்லா தரப்பினரையும் கவர்ந்துள்ள அமு துவில் இடம்பெறும் ஒவ்வொரு அம்சங்க ளும் நன்று. ''அதிகாரப் பகிர்வே தீர்வின் திறவுகோல்'' கட்டுரை, யுத்தநிறுத்தம் ஏற் படப் போவதை விரிவாக விளக்கியது. கேள்வி-பதில் போட்டி நிகழ்ச்சிகள் ஆரம் பித்தால் மேலும் சிறப்புறும் அல்லவா!

**- ஏ.சீ.எம். முஸம்மில்,**
**குளியாபிட்டிய.**

அமுதில் வெளிவரும் அத்தனை அம்சங் களுமே வரவேற்கக்கூடியவை. சிறுகதை கள், நீங்கள் தூவிய மலர்கள், அரசியல் கட்டுரை, எஸ். ராமகிருஷ்ணனின் ஆலி ஸின் அற்புத உலகம், காதலர் தினத்தை மறவாமல் ஆங்காங்கே வடித்திருப்பது சிறப்பாய் அமைந்திருக்கிறது.
தொடர்ந்து அதன் தன்மையில் குறைவி ல்லாது வெளிவர வேண்டும் என்பதே என் அவா!

**- S. ரஜினி,**
**மடுல்சிமை.**

காதலர் தினத்தை முன்னிறுத்தி அமுது தந்த சின்னச்சின்ன கவிதைகள் அபாரம். பாராட்டுக்கள்.

**- சிவன்,**
**வவுனியா.**

'ஒரு மணமான விசயம்' சிறுகதை இறந்துகிடப்பது கோழி மட்டுமா? என்று யோசிக்கவைத்தது.
ஆசிரியர் தலையங்கம் வழமையானதாக இருக்கவில்லையே!

**- வி. எஸ். சிகாமணி,**
**மட்டக்களப்பு.**

'இந்த நாளில் அன்று' தொடங்கியிருப்பது மன மகிழ்ச்சியை உண்டாக்குகின்றது. எனது அபிமான அமுது என்றென்றும் தமிழ் பேசும் மனங்களை வெல்லும்.

**- பி. ஆனந்தகுமார்**
**கொட்டகலை.**

வழமையாக அமுதில் வெளிவரும் படைப்புகளைவிட சில மாற்றங்களையும் காணக்கூடியதாக இருக்கிறது. பல வரலா ற்றுக் குறிப்புகளை அடக்கிய 'இந்த நா ளில் அன்று' பத்திரப்படுத்தி வைக்க வே ண்டிய பகுதியாகும். சஞ்சிகை தொடர்ந்து அதன் பணிகளில் மேலும் சிறப்புற வாழ்த் துகிறேன்.
அமுது வெளியாகி விற்பனைக்கு வருவ தை தினகரன் பத்திரிகையில் பார்த்த ஒரு வாரத்தின் பின்பும் கூட கிடைப்பதில்லை. விற்பனை முகவரிடம் கேட்டால் இல்லை என்றே பதில் வருகிறதே. எமக்கு இலகு வில் கிடைக்க ஆவன செய்வீர்களா?

- இரா. அன்பரசன்
நோர்வூட்.

சின்ன சின்னக் கவிதைகளும், காதலர் தினப் படங்களும் அருமை. ஒவ்வொரு இதழிலும் தரலாமே!

**- பா. வானதி,**
**வவுனியா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 MAR 2002
யாழ்ப்பாணம்

இலங்கையின்
முதலாவது
தேசிய தமிழ் சஞ்சிகை

# நல்லதோர் வீணை செய்தே....



## பட்டதாரிகளின் போராட்டம்!

கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன், வேலை தருமாறு கோரி நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். வேலையற்ற ஒற்றிணைந்த பட்டதாரிகளின் அமைப்பு இந்த தொடர்ச்சியான சத்தியாக்கிரகத்தை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கையில் இப்போது சுமார் 30,000 பட்டதாரிகள் வேலையற்றிருக்கின்றார்கள். இவர்களுக்கு ஒரு மாத காலத்துக்குள் வேலை வாய்ப்பு வழங்கும் உருப்படியான திட்டமொன்றை உருவாக்க வேண்டும் என்பது இந்த உண்ணாவிரதிகள் முன்வைத்துள்ள பிரதான கோரிக்கையாகும். அரசியல் சாயம் பாராது பொதுவான ஒரு திட்டத்தின் கீழ் தொழில் வழங்கும் திட்டமொன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதும், இதற்கான தேசிய கொள்கை ஒன்றை வகுக்க வேண்டும் என்பதும், தொழிலற்ற பட்டதாரி பிக்குகளுக்கு தொழில் வழங்க வேண்டும் என்பதும் இவர்களது ஏனைய கோரிக்கைகளாகும்.

இலங்கை போன்ற வளர்முக நாடொன்றில் சமூகத்தின் முதுகெலும்பான இளைஞர்களில் 30,000 பேர் படித்துவிட்டு வேலையற்றிருப்பதென்பது வேதனையான விடயம். வளர்முக நாடொன்றில் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பில்லை என்றால் அதற்கு காரணம் நாட்டின் தேவைக் கேற்ப அவர்கள் உருவாக்கப்படவில்லை என்பதாகும். கடந்த காலங்களில் பதவியிலிருந்த அரசாங்கங்கள் அமுல்நடத்திய கல்விக் கொள்கைகள் காரணமாக உருவான பட்டதாரிகளே இவர்கள். இன்று இந்த நாட்டின் தொழிநுட்பத்துறையில் ஆயிரக்கணக்கான வெற்றிடங்கள் இருக்கின்றன. அதேபோன்று பல உலக நாடுகளில் இத்துறைகளில் வேலைவாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் அவற்றை ஈடு செய்யக் கூடிய வகையில் நாம் எமது பட்டதாரிகளை உருவாக்கத் தவறியதன் காரணமாக இந்த அவல நிலையை எதிர்நோக்கியிருக்கின்றோம்.

பட்டதாரிகளை உருவாக்குவதற்காக அரசாங்கம் இந்நாட்டு மக்களின் பணத்தில் இலட்சக்கணக்கான ரூபாய்களை செலவு செய்துள்ளது. ஒரு பட்டதாரியை உருவாக்க அரசு ஐந்து இலட்சம் ரூபாவை செலவு செய்கின்றது. இது நாட்டுக்காக செய்யப்படுகின்ற பெரு முதலீடாகும். ஆனால் இந்த முதலீட்டின் பயனை நாடு பெற்றுக்கொள்ள முடியாத வகையில் இப்பட்டதாரிகள் உருவாக்கப்படுகிறார்கள். இதனால் நாட்டுக்கு நஷ்டமேற்படுவது மட்டுமன்றி இந்த இளைஞர்கள் நாட்டின் அரசியல் முறைகளையே அச்சுறுத்துகின்ற மாற்று வழிகளை நாடிச் செல்வதற்கும் வாய்ப்பிருக்கின்றது. இன்று வடக்கிலே ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைக்கு, பல்கலைக்கழகத் தெரிவில் தரப்படுத்தல் முறையை அறிமுகப்படுத்தியதும் ஒரு காரணமாகும்.

இது ஒரு தேசிய பிரச்சினை என்பதால் ஆளும்கட்சி எதிர்க்கட்சி என்ற வேறுபாடின்றி ஒன்றுபட்டு ஒரு தேசிய கொள்கையை வகுத்து பட்டதாரிகளின் பிரச்சினைக்கு தீர்வுகாண முன்வரவேண்டும். தற்போதைய பிரதமர் இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சராக இருந்த போது இதற்கான ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி செயற்படுத்தியிருந்தார். அன்று கட்சி பேதம் பாராது பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்புக்கள் கிடைத்தன. அப்படியானதொரு திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டும். அத்தோடு புதிதாக உருவாகும் பட்டதாரிகளை நாட்டினதும், சர்வதேச நாடுகளதும் தேவைக்கு முகம்கொடுக்க கூடிய வகையில் உருவாக்கினால் இந்த பிரச்சினை தொடர் பிரச்சினையாக இருக்காது.

- ஆர்.

நிர்வாக ஆசிரியர், தமிழ் பிரசுரங்கள்
என். எம். அமீன்

பக்க வடிவமைப்பு (கணனி):
ஜெரால்ட் எஸ். நடேசன்
எழுத்தமைப்பு (கணனி):
எஸ். எம். பிரேம்குமார்

அச்சிட்டு வெளியிடுவோர்:
அசோஸியேடட் நியூஸ் பேப்பர்ஸ் ஒ:ப் சிலோன் லிமிடெட்
இல. 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
Phone: 429496, Fax: 429270
E-Mail: webmgr@sri.lanka.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்வெட்டிலும் வெட்டும் மின்மினிகள்

வெய்யிலின் அருமை நிழலில் தெரியும் என்பார்கள். மின்சாரத்தின் அருமை இரவில் தெரிய வேண்டும். மின்சாரம் வெட்டு அமுலிலிருக்கும் இந்த நேரத்திலாவது.

ஆனால் கட்பண்ணப்படாமல் பிறந்தது முதல் மரணிக்கும் வரை மின்சாரம் வழங்கப்பட்ட உயிரினம் ஒன்று உண்டு என்றால் நீங்கள் ஆச்சரியப்படமாட்டீர்கள். உங்கள் கண்கள் அகல விரிய மாட்டாது. அதுதான் மின்மினி என்று உங்களுக்குத் தெரியுமே?

ஏனெனில் மின்சாரம் வெட்டப்பட்டு உலகமே இருளில் மூழ்கி இருக்கும்போது மின்மினிப் பூச்சிகள் மட்டும் ஒளியைப் பரப்பிக் கொண்டு செல்வதை நாம் கண்டு பொறாமைபட்டிருக்கின்றோம்.

இந்த மின்மினிகள் 50-60 ஐ சேர்த்தால் நிச்சயமாக அந்த ஒளியில் புத்தகம் படிக்கலாம். ஆதிவாசிகள் இவ்வாறு இரவு நேரங்களில் மின்மினிகளை சேர்த்து விளக்காகப் பயன்படுத்தியிருக்கின்றார்கள். அவர்கள் மழைக்காலங்களில் எங்கேயாவது செல்ல நேர்ந்தால் மின்மினிப் பூச்சிகளை கால்களில் கட்டிக்கொண்டு செல்வார்களாம்.

கானகத்து இளம் கன்னிகள் இவற்றை தமது கொண்டையில் சூடிக் கொள்வார்களாம். நாகரிக மங்கைகள் முத்து, வைரம் அணிவது போல அது ஜொலிக்குமாம்.

சுமார் இரண்டாயிரம் வகை மின்மினிகள் உள்ளன. உருவத்தில் மிகச் சிறியவையும் உண்டு. பெரியவையும் உண்டு.

இலங்கையிலுள்ள மின்மினிகள் அரை அங்குலம் நீளமாக இருக்கும். இதன் கால்கள் பெரியவை. நீளமானவை. இற கள் சிறியவை. சாம்பல், பழுப்பு நி ளைக் கொண்டவை. இந்த மின்மினி கையில் பிடித்தால் வழவழவென்று வ கிக் கொண்டே போகும். இதன் எதிரிக ளுக்கு கணக்கு வழக்கு இல்லை. காரணம் ஒளிதான். ஒளிபாய்ச்சி தன்னைக் காட்டிக் கொடுத்து விடும்.

சிலந்தி, தவளை, ஆகியவற்றிற்கு மின்மினியைக் கண்டால் குஷி. அவற்றுக்கு அதில் அப்படியொரு ருசி.

என்றாலும் எதிரிகளிடமிருந்து பாது காத்துக் கொள்ள எத்தனையோ வழி கள் அதற்குத் தெரியும். சட்டென்று ச வளவு எளிதில் அது மண்டியிட்டு விட முதலில் எதிரிகளைக் கண்டவுடன் ஒளி... கட்பண்ணிவிடும். தன் இறக்கைகளை கவசமாக பயன்படுத்திக்கொள்ளும். அதனையும் மீறி எதிரி தன்னை விழுங்கிவிட்டால் அதன் வயிற்றினுள் சென்ற பின்னரும் ஒளி வீசும். தவளைத் தோல் மிகவும் மெல்லியது. வெங்காயச் சருகு போல. தவளை இதைச் சாப்பிட்டால் பெரும் அவஸ்தைப்படும். பயத்திலேயே தவளையின் பாதி உயிர் போய்விடும்.

மின்மினி அசைவம் உண்ணும். அட்டை, நத்தை, நண்டு, புழு போன்றன இதற்கு மிகவும் பிடிக்கும். ஈரலிப்பான சேற்று நிலங்களிலேயே இவை காணப்படுவதால் மின்மினியும் அங்குதான் தமது குடியிருப்பை அமைத்துக்கொள்ளும்.

வேட்டையாடும் முறையும் ருசிகரமானதுதான். இதற்கு எந்த வேட்டைக் கருவியையும் இயற்கை கொடுக்கவில்லை. ஆனால் 'சயனைட்' போன்ற ஒருவகை விஷம் இதனிடம் சுரக்கும். அதனை



கச்சிதமாகப் பயன்படுத்துவதில் மின்மினி கெட்டிதான். ஓசைப்படாமல் தன் இரையை நெருங்கும். தன் இளம் மீசையினால் அதற்கு வருடி கிச்சுகிச்சுமூட்டும். அப்படி கிச்சு கிச்சு மூட்டும்போதே தன் நஞ்சை அதன் உடல்மேல் பாய்ச்சி விடுகின்றது. இரை மயங்கி, உணர்விழந்து விடுகின்றது. அந்த இரையை உருக்கி பாகுபோலாக்கி... பிறகென்ன ஜின்ஜிபீர்தான்.

புல்லிலோ நிலத்தின் கீழோ முட்டையிடுகின்றது. முட்டைகளிலிருந்து மின்மினிக் குஞ்சுகள் வெளிவர சுமார் பதினைந்து நாட்கள் பிடிக்கும்.

ஒரு ரகசியம் தெரியுமா? மின்மினிக்கு வெளிச்சத்தைக் கண்டாலே பிடிக்காது! செயற்கை ஒளி, வெய்யில் இதன் எதிரிகள்.

இது தன் ஒளிவீச்சைப் பலவழிகளிலும் பயன்படுத்துகின்றது. இரையைத் தேடுவதற்கு, ஆணும் பெண்ணும் கண்ணடித்து கட்டிப்பிடித்து இணைசேர இந்த ஒளிதான் கைகொடுக்கின்றது. ஒரு பெண் சமிக்ஞை காட்ட கண்ணடித்து ஒளியைப் பாய்ச்சினால் அது 80-90 மீட்டர் வரைகூட பாயுமாம்.

அதிக ஒளிபடைத்த மின்மினி 'பைரோ போரஸ்' இனத்தைச் சேர்ந்தது. அதில் 'அல்ட்ரா வயலட்' 'இன்ஃபிராரெட்' போன்ற கதிர்கள் கிடையாது. இதனால் அதில் ஏதும் எரிச்சல் தோன்றுவது இல்லை.

இந்த குளிர் தீ மின்மினிகளில் எப்படித் தோன்றுகின்றன என்று நீண்டகாலம் விஞ்ஞானிகள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முன்னர் இதற்குக் காரணம், சில அணுக்களில் உள்ள 'பொஸ்பரஸ்' என்றும் அது ஒட்சிசனை ஏற்கும்பொழுது சுடர் விடுகின்றது என்றும் கருதப்பட்டு வந்தது.

ஆனால் அது அப்படி அல்ல, 'லூஸிஃபெரின்' புரதச் சத்தே ஒட்சிசனையும் ஈரத்தையும் ஏற்று ஒளிக்குக் காரணம் ஆகின்றது என்கிறது புதிய கண்டுபிடிப்பு.

- விஷ்மிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாளர் வர்க்கம்

- ஜெயமோகன்

அறிவுத்திமிரும், அகங்காரமும், அராஜகமளவு போகும் சுயேச்சையான போக்குகளும், ஒழுங்கற்ற அந்தரங்க வாழ்வும், பிறருக்கு அசட்டுத்தனமெனப் படுமளவுக்கு கொள்கைப் பிடிப்பும் இதழாளர் வர்க்கத்தின் இயல்புகள்.

கார்ட்டூனிஸ்ட் சங்கரை இந்திய இதழாளர்களில் முக்கியமான முன்னுதாரணமாகச் சொல்வார்கள். அத்தனை அரசியல்வாதிகளையும் அவர்கள் வீட்டுப் பெயர் சொல்லி கூப்பிடுமளவுக்கு தெரிந்தவர். ஆனால் எவரையுமே அவர் எதற்கும் அணுகியதில்லை. நேருவை மிகக் கடுமையாக கிண்டல் செய்து கார்ட்டூன்கள் வரைந்து தள்ளியவர் சங்கர். அவருக்கு நேரு மார்க்சியத்தை கொச்சைப்படுத்துகிறார் என்று எண்ணம். ஒருமுறை ஏதோ உலக நிகழ்ச்சிகள் சார்ந்து ஏற்பட்ட கவன நகர்வால் சங்கர் மூன்று வாரம் நேருவை வரையவில்லை. நேரு எழுதிய கடிதத்தில் இது குறித்து குறிப்பிட்டு ''என்னை விட்டுவிட வேண்டாம் சங்கர்'' என்றாராம். பின்பு சங்கரின் கார்ட்டூன்கள் நூலாக வந்தபோது அவ்வரியே தலைப்பாக ஆயிற்று - **Don't leave me Sangar!** அந்த நூலும் சங்கரின் நெருங்கிய நண்பரான நேருவுக்குத்தான் சமர்ப்பணம் செய்யப்பட்டிருந்தது.

பலவகையிலும் சங்கர் முன்னுதாரணமானவர். உலக நிகழ்வுகளை துல்லியமாக அறிந்து வைத்திருக்கும் கவனம் அவரிடம் உண்டு. நுட்பமான இலக்கிய ரசிகர். அவருக்கு வாழ்க்கையில் ஒரு தனி இலக்கும் இருந்தது. குழந்தைகளுக்காக சங்கர் பெரும் பணச்செலவில் விடாப்பிடியாக நடத்திய 'சங்கர்ஸ் வீக்லி' முக்கியமான கலாசார சக்தியாக இருந்தது. அதன் ஓவியப் போட்டிகள் பிரபலமானவை. மலையாளிகளில் ஒரு தலைமுறையை இதழியலுக்கு இழுக்க சங்கரால் முடிந்தது. அவர்களின் மனப்பதிவுகளின் மூலமே சங்கர் இன்று நினைவுகூரப்படுகிறார்.

சங்கரின் பல குணாதிசயங்கள் - சுதந்திரம், அராஜகம், அரட்டை - எல்லாம் இவர்களிலும் உண்டு. கூடவே சங்கரின் விசேஷ குணமான குடியும்... சங்கரின் மூன்றாம் தலைமுறையிலும் சங்கரின் பாதிப்பு தொடர்ந்ததை கண்டிருக்கிறேன்.

இவர்கள் நேரடியாகவே வாசக சமூகத்துடன் உரையாடும் அறிவுஜீவிகள். ஏதாவது பிரசுரத்தின் ஊழியர்கள் அல்ல. அப்பிரசுரங்கள் அவர்களையும் அவர்கள் அப்பிரசுரங்களையும் பயன்படுத்திக் கொண்டார்கள். (தொடர்ந்த சமரங்களை இரு தரப்பும் செய்வதன் வழியாகவே இது நடைபெற்றது என்று சொல்ல வேண்டியது இல்லை). அவர்களது எழுத்தாற்றலை, ஆளுமையின் நம்பகத்தன்மையை தொடர்புகளை இதழ்களால் தவிர்க்க முடியவில்லை. கேரள இதழாளர்களில் இத்தகையோர் மிகப் பெரும்பாலும் மார்க்ஸியர்கள் என்பது இப்போது சற்று பலமாகவே சுட்டிக்காட்டப்படுகிறது. (ஒரு பத்திரிகை அதிபர் சொன்னாராம், 'சம்பளம் நான் தருவேன், வேலை இ.எம்.எஸ் கொடுப்பார்' என்று.)
அது அன்றைய அறிவுச் சூழலை வைத்துப் பார்த்தால் இயல்பானதுதான். இவர்களுடைய கருத்துக்கள் இவர்கள் தனியடையாளத்துடன் பிரசுரமாகும். ஒரு சமீபகால உதாரணம், அணுகுண்டு சோதனையின் போது கேரள வலதுசாரி இதழான மாத்ருபூமி நாளிதழ் அதை வரவேற்று தலையங்கம் எழுதியது, அதன் செய்தியாளரும் இடதுசாரியுமான வி.கெ. மாதவன் குட்டி அதை கடுமையாக விமர்சித்து எழுதிய செய்தி அறிக்கையும் அதே இதழில் வெளிவந்தது.

இதழாளனின் தன்னம்பிக்கை அந்நிறுவனம் அவனுக்கு அளிக்கும் முக்கியத்துவம் மற்றும் ஊதியம் சார்ந்தது. அந்த ஊதியமிருந்தால்தான் ஒரு முக்கியமான ஆளுமை அவ்வேலைக்கு வரவும் முடியும். நரேந்திரனைப்பற்றி ஒரு கதை உண்டு. அவர் டைம்ஸ் ஆஃப் இந்தியாவிற்கு வேலை செய்யும்போது ஒருமுறை இந்திரா காந்தியைப்பற்றி மிக கடுமையாக எழுதநேர்ந்தது. விமான நிலையத்தில் நரேந்திரனை பார்த்த இந்திரா 'நான் மட்டும் பிரதமராக இல்லாமல் இருந்தால் உங்களை முகத்தில் அடித்திருப்பேன்' என்றாராம். உடனே நரேந்திரன் 'நான் இதழாளனாக இருந்தாலும் திருப்பி அடித்திருப்பேன்' என்றாராம். சிவந்த முகத்துடன் காருக்கு போன இந்திராவுக்கு அவர் நேருவின் மகள் என்பது நினைவுக்கு வந்திருக்க வேண்டும். உடனே திரும்பி நரேந்திரனை அழைத்து 'அது ஒரு நல்ல பதில் நரேந்திரன். மன்னியுங்கள்' என்றாராம். இந்திராவுடன் நரேந்திரனுக்கு கடைசி வரை நல்லுறவு இருந்தது.

என் நண்பரான பாலச்சந்திரன் மலையாள மனோரமாவின் கோவை நிருபராக இருந்த போது தமிழ் நாளிதழ் நிருபர்கள் அவரிடம் செய்தி பெற்று போவதை பலமுறை கண்டிருக்கிறேன். (மற்ற இடங்களில் இந்து நாளிதழின் நிருபரை சார்ந்திருப்பார்களாம்) தமிழ் செய்தியாளர்கள் போக முடியாத இடங்களுக்கு பாலகிருஷ்ணன் போக முடியும். சந்திக்க முடியாதவர்களை சந்திக்கவும் முடியும். காரணம் பாலச்சந்திரன் தோரணையாக வருவார், ஆங்கிலம் பேசுவார். அவரது ஊதியமும் சமூக நிலையும் ஒரு மாவட்ட ஆட்சியரை விட மேலானது. மலையாள மனோரமா தன் ஊழியரை பாதுகாக்க எந்த எல்லை வரைக்கும் போகும் என்பதும் அனைவரும் அறிந்த உண்மை. தமிழ் நிருபர்கள் அதே அலுவலக கடைநிலை ஊழியர்கள் போல இருப்பார்கள். அதைவிட முக்கியமாக பலருக்கு வாழ்க்கைக்காக குறைந்தபட்ச வருமானத்துக்காக அந்த அலுவலர்கள், அரசியல்வாதிகள் தரும் சிறு பரிசுகள் அவசியமானவை என்பது. தன்னிடம் சில்லறை பெறும் ஒருவனாகவே நம் அரசியல்வாதிகள் தமிழ் இதழாளர்களை அறிந்திருக்கிறார்கள். சினிமா வெளியீட்டு விழாவில் செய்தியாளர்கள் பரிசுத் தொகைக்காக முண்டியடிக்கும் கேவலம் குறித்து ஒரு சினிமா நண்பர் ஒருமுறை சொல்லி சிரிக்க வைத்தார்.


ஆகவே தமிழ் இதழியல் என்பது சந்தை விதிகளால் மட்டுமே இயக்கப்படுகிறது. சந்தையுடன் சமரசமின்றி அது இயங்க முடியாது என்பது உண்மைதான். ஆனால் இங்கு சந்தைக்கு எதிர்விசையாக செயல்படும் இலட்சியவாத அம்சம் இம்மி கூட இல்லை. சந்தைக்கு தேவையான தொழில் திறன் கூட இல்லை.

தமிழ் சிற்றிதழ் சூழலின் தளக்குறுகல் மூச்சுத்திணறச் செய்வது. வாசகர்களை கண்டடைந்தே ஆக வேண்டுமென்ற கட்டாயம் எல்லா சிற்றிதழாளர்களுக்கும் உள்ளது. ஆகவேதான் சுந்தர ராமசாமி கூட பிரபல இதழ்களுக்கு வருகிறார். என் முதல் சிறுகதை தொகுப்பின் முன்னுரையில் நான் ஒருபோதும் பிரபல இதழ்களில் எழுத விரும்பவில்லை என்று சொல்லியிருந்தேன்... ஆனால் இப்போது வேறுவழி தெரியவில்லை. சிற்றிதழ் சார் எழுத்து நவீனத்துவத்தின் குறுகிய, எதிர்மறைத் தீவிரம் கொண்ட தளத்துக்கும், சிறிய படைப்புகளுக்கும்தான் சரி. நான் எழுதுவது நவீனச் செவ்வியல் வடிவங்கள், கலாசாரம் மீது விரிவான எதிர்வினை செய்பவை. என் எழுத்தை எல்லா தளமக்களும் படிக்க வேண்டும் என இப்போது அறிகிறேன்.

ஆனால் பிரபல ஊடகங்களில் எந்த அளவுக்கு சமரசம் செய்து கொள்வது? விஷ்ணுபுரத்தையும், பின் தொடரும் நிழலின் குரலையும் இன்றும் கூட எந்த பிரபல இதழிலும் எழுத முடியாது. தமிழ் சராசரி வாசகன் விரும்புவதை எழுதவே பிரபல ஊடகங்கள் எதிர்பார்க்கும். அதை எழுதினால் பிறகு எழுதுவதற்கே பொருளில்லை, அது ஒரு பிழைப்புத் தொழில் மட்டுமே.
இப்போதைக்கு செய்யக்கூடுவது ஒன்று மட்டுமே. கூடியவரை ஒரு மாற்றுஎழுத்தை காட்டி சற்று கவனத்தை ஈர்க்கலாம். அப்படி ஈர்க்கப்படுபவர்களுக்கு அளிக்க தரமாக எழுதலாம். அவ்வளவுதான். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தின் அத்திவாரத்திலேயே சமாதானத்தை கட்டியெழுப்பமுடியும்



நக்கீரன்

புதிய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் விடுதலைப் புலிகளால் ஒருதலைப்பட்சமாக அறிவிக்கப்பட்ட யுத்த நிறுத்தமும் பதிலுக்கு அரசாங்கம் அறிவித்த மோதல் தவிர்ப்பும், நோர்வேயின் முயற்சியால் இப்பொழுது கால வரையற்ற போர் நிறுத்தத்தை உள்ளடக்கிய 'புரிந்துணர்வு உடன்படிக்கை' யாக பரிணமித்துள்ளது.

இந்தப் போர் நிறுத்தம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு உறுதியான அடித்தளம் ஒன்றை இட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் தெரிவித்துள்ளனர்.

தலைவர்கள் இருவரும் கூறுவதுபோல சமாதானவழியிலான தீர்வுக்கான அடிப்படை அமையுமானால் இந்த நாட்டின் அனைத்து(இன) மக்களும் அளவிலா மகிழ்ச்சி அடைவர் என்பதில் எள்ளத்தனையும் சந்தேகமில்லை.

ஏனெனில் 20 வருடகால உள்நாட்டு இனத்துவப்போரின் பின்னர் முன்னெப்போதையும் விட மக்கள் இன்று சமாதானத்தையே பெரிதும் வேண்டுகின்றனர். யுத்தத்தால் தமிழ் மக்கள் மோசமான நேரடிப் பாதிப்புக்குள்ளானது ஒருபுறமிருக்க, நாட்டின் பொருளாதாரம் முழுமையாகச் சீரழிந்து நாடு அதல பாதாளத்தை நோக்கியும் சென்று கொண்டிருந்தது.
தற்பொழுது ஏற்பட்டுள்ள சமாதானம் நல்லதொரு தொடக்கம் எனினும் அதன் நீடிப்புக்கும் நிரந்தரத்திற்கும் அடிப்படையான தேவை இனப்பிரச்சினைக்கான தீர்வாகும். அந்தத் தீர்வு தமிழ் மக்களின் நீண்டகால குறைபாடுகளைத் திருப்திகரமான முறையில் தீர்த்துவைப்பதுடன் ஏனைய சிறுபான்மை இனங்களின் ஆதரவையும் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் அங்கீகாரத்தையும் பெற்றால் மட்டுமே நீடித்த சமாதானத்தை அடையமுடியும்.

அந்த வகையில் புதிய அரசாங்கம் பல ஆக்கபூர்வமான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையையும் போக்குவரத்துத் தடையையும் நீக்கியதுடன் மீன்பிடித்தடையில் தளர்வு, சோதனைச் சாவடிகளின் குறைப்பு, பொலீஸ் பதிவுமுறைகளை நீக்குதல், ஏ-9 பாதையைத் திறத்தல், கோவில்கள், பாடசாலைகளிலிருந்து இராணுவத்தை அகற்றுதல், கிழக்கிற்கான புகையிரதச் சேவையை நீட்டுதல், கட்டுப்பாடற்ற பகுதிகளில் புனர்வாழ்வு அபிவிருத்தி வேலைகளை ஆரம்பித்தல் போன்ற பல்வேறு விடயங்களை அரசாங்கம் துரிதமாக முன்னெடுத்து வருகின்றது.

இவையாவும் தமிழ் மக்களின் குறிப்பாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி மக்களின் வாழ்வில் சில மாற்றங்களை ஏற்படுத்தி நம்பிக்கையை துளிர்விடச் செய்துள்ளது.

காலாகாலமாக சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தைக் கக்கிவருகின்ற தீய சக்திகள் போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்து விஷமப் பிரச்சாரம் செய்து வருகின்ற போதிலும், பிரதான எதிர்க் கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜனாதிபதியும் ஒப்பந்தத்திலுள்ள சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவ்வப்போது சிறு சலசலப்பை ஏற்படுத்தினாலும் பொதுவாக ஒப்பந்தத்தையும் சமாதான முயற்சிகளையும் வரவேற்றுள்ளமை நம்பிக்கையூட்டுவதாகும். விடுதலைப் புலிகளுடன் மாற்றுக் கருத்துள்ள ஏனைய தமிழ் கட்சிகளும், ஐக்கிய தேசிய முன்னணியுடன் முரண்பாடுள்ள இடதுசாரிக் கட்சிகளும் மற்றும் மதகுருமார், சமாதான அமைப்புகள், பல உலக நாடுகள் என்பனவும் ஒப்பந்தத்தை வரவேற்று ஆதரித்துள்ளமையும் குறிப்பிடக் கூடிய விஷயங்களாகும்.

எனவே இத்தகையதொரு நல்ல புறச் சூழ்நிலையில் முன்னைய அனுபவங்களிலிருந்து படிப்பினைகள் பெற்றுக் கொண்டு சமாதானமுயற்சிகளை உறுதியுடனும் தடையின்றியும் முன்னெடுத்துச் செல்வது அரசாங்கத்தின் கடமையாகும்.
மறுபக்கத்தில் பலர் பலவாறு வாதிட்ட போதிலும் கடந்தகால சமாதான முயற்சிகள் சீர்குலைந்ததிற்கு விடுதலைப் புலிகள்மீதும் பல விமர்சனங்கள் இருந்து வந்துள்ளதை அவர்கள் தரப்பும் கவனத்தில் கொள்ள வேண்டும். மாற்றுக் கருத்துள்ள தமிழ்கட்சிகள், புத்திஜீவிகள், மனித உரிமை-மத அமைப்புகள் என்பனவும் முஸ்லீம் சிறுபான்மை மக்களும், அவர்கள் மீது தமது நம்பிக்கையீனத்தையும் அதிருப்தியையும் வெளிப்படுத்தி வந்துள்ளனர். இதுவும் தொடரக் கூடாது.

அத்தோடு புலிகள் தவறு விடுவார்கள் என்ற தங்களது எதிர்பார்ப்பையே தங்கள் அரசியலுக்கான மூலதனமாக்கிக் கொண்டு பேரினவாத நெருப்பில் குளிர் காய முனைகின்ற தீய சக்திகளின் நினைப்பையும் பொய்யாக்க வேண்டும்.

சமாதானம் என்பது ஜனநாயகத்தின் அத்திவாரத்தில் உருவாக்கப்படுவது என்ற உண்மையை, இன்றைய புதிய சூழ்நிலையில் ஆயினும் சகல தரப்பினரும் மனப்பூர்வமாக ஏற்றுச் செயற்பட்டால் மட்டுமே கிடைத்துள்ள இந்த சந்தர்ப்பத்தை அர்த்தமுள்ளதாக்கமுடியும். தமிழ் மக்களின் தேசிய உரிமைகள் நிலைநாட்டப்படுவதும், ஜனநாயகத்தை நிலைநாட்டுவதும், அதேபோல முஸ்லீம் சிறுபான்மை இனத்தவரின் ஜனநாயக உரிமைகளை உறுதி செய்வதும் முக்கியத்துவம் வாய்ந்த தேவையாகும். இந்த உண்மைகளை மனம் கொள்வதே சமாதான முயற்சிப் பங்காளர்களின் இன்றைய தேவையாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதை திறந்தொரு பயணம்

**பாதை திறப்பென்பது பொதுமக்களின் பயணச் சிரமங்களைக் குறைப்பதோடு, பொருட்களின் தட்டுப்பாட்டை நீக்கவும், சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தவும் முக்கியமான ஒன்றாக அமைகிறது. இந்த யதார்த்தம் ஒருபுறமிருக்க, யாழ்ப்பாணம் - கண்டி வீதி பழையபடி போக்குவரத்துக்குத் திறந்து விடப்படுவதானது தமிழ் மக்களின் உணர்ச்சிகரமான ஈடுபாட்டோடும் தொடர்புடையது. குறிப்பாக வன்னி, யாழ்ப்பாண மக்களுக்குத் தாங்கள் ஒரு சிறைக்குள்ளிருந்து விடுபடுவது போன்ற மனக்களிப்பைத் தரக்கூடியது.**

**அந்த மகிழ்ச்சிக்குரிய பாதை திறப்பின் நிகழ்வுகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டு திரட்டிய செய்திகளை அமுது வாசகர்களுக்காகத் தருகிறோம்.**

**கட்டுரையும் படங்களும்: ஆர். ராஜகுமார்**

நாட்டில் தற்போது யுத்த மேகங்கள் அகன்று சமாதான காற்று வீசத் தொடங்கியுள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி, அரசுப் பொறுப்பை ஏற்ற பின் புலிகள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்த அறிவித்தலை விடுத்தனர். பின்னர் அதற்கு சாதகமாக அரசும் போர் தவிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டது. இதுவே சமாதான முன்னெடுப்பின் அத்திவாரக் கல்லாக அமைந்தது.

ஒரு மாதகாலம் யுத்தம் நிறுத்தப்பட்டதோடு பொருளாதாரத் தடைகளும் தளர்வு செய்யப்பட்டது. இராணுவ கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு பொது மக்கள் கொண்டு செல்லத் தடைவிதிக்கப்பட்டிருந்த பல்வேறு பொருட்களில் வெடி பொருட்கள் அடங்கலாக 06 பொருட்களுக்கு தடையும் மேலும் 10 பொருட்களுக்கு தடைத்தளர்வும் செய்யப்பட்டது. அத்துடன் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை அனுப்பும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாண்டிக்குளம் சாவடியில்
பிரதமரும் அமைச்சர்களும்

இப்பொருட்கள் அனைத்தும் பிரமணாலங்குளம் பாதையூடாகவே அனுப்பப்பட்டு வந்தன. அமைச்சர்கள் ஜோன் அமரதுங்க, மிலிந்த மொறகொட, டொக்டர் ஜயலத் ஜெயவர்தன, நூர்டீன் மசூர் ஆகியோர் நேரடியாக பிரமணாலங்குளம் சென்று, தடை நீக்கப்பட்டு பொருட்களை அனுப்பும் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு பொருட்கள் அனுப்பப்படுவதை ஆரம்பித்து வைத்தனர். அதுமுதல் கட்டுப்பாடற்ற பகுதிக்கு மக்கள் பொருட்களை தடையின்றி கொண்டு செல்கின்றனர்.

சமாதான முன்னெடுப்புகளின் அடுத்த கட்டமாக ஏ-9 நெடுஞ்சாலை அண்மையில் மக்களின் பாவனைக்காக திறந்து விடப்பட்டது. அத்துடன் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து மன்னாருக்கான உயிலங்குளம் வீதியும் திறந்து விடப்பட்டது.

இதற்கு முன்னர் பிரமணாலங்குளம் ஊடாக வன்னிப் பகுதிக்கு சென்றோர் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே பிரயாணம் செய்தனர். ஆனால் தற்போது ஏ-9 வீதி பாவனைக்கு விடப்பட்ட பின்னர் இலகுவாக அவர்களது பிரயாணத்தை மேற்கொள்கின்றனர்.

முன்னர் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வருவோர் கடும் இராணுவ சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அனுமதிக்கப்பட்டனர். தற்போது சோதனைக் கெடுபிடிகள் தளர்வு செய்யப்பட்டு இலகுவாக இப்பகுதிகளுக்கு வரக்கூடியதாக உள்ளது என ஓமந்தை ஊடாக வரும் மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வவுனியா வருவோர் பொலீஸாரின் அனுமதி பெற்றே தங்கியிருந்து திரும்பிச் சென்றனர். ஒருநாள் அனுமதி, மூன்றுநாள் அனுமதி, ஏழுநாள் அனுமதி என அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்தே தங்க அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால் தற்போது வருவோருக்கு 15 நாள் அனுமதி வழங்கப்படுவதால் தினமும் அனுமதி பெற அலைய வேண்டிய நிலை நீங்கியுள்ளது. இதற்குமுன் வவுனியாவில் தங்கும் நாட்களில் அதிக நாட்களை இந்த அனுமதிப்பத்திரம் பெறுவதற்கே செலவு செய்யும் நிலை இருந்தது.

அது தற்போது நீங்கியிருப்பது மகிழ்ச்சி தருவதாக லொட்ஜ்களில் தங்கியிருக்கும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

முன்னர் ஒருவருக்கு 40 கிலோ வீதம் பொருட்கள் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இப்போதெல்லாம் அவ்வாறில்லாமல் தேவையான அளவு பொருட்களை கொண்டு செல்ல முடிகிறது. பொருட்கள் தாராளமாக கொண்டு செல்ல முடிவதால் வன்னிப் பகுதியில் தற்போது பொருட்களின் விலைகள் கணிசமான அளவு குறைந்துள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் தெரிவித்தார்.

முன்னர் 350 ரூபாவிற்கு விற்பனையான ஒரு போத்தல் மண்ணெண்ணெய் தற்போது 40 ரூபாவரை குறைந்தும்



வவுனியாவிலிருந்து வன்னிக்குச்
செல்வோரை சோதனையிடும் சாவடி

14,000 ரூபாவிற்கு விற்கப்பட்ட சைக்கிள் ஒன்று இப்போது 7,000 ரூபாவுக்கு கிடைப்பதாகவும், ஏ-9 நெடுஞ்சாலை மக்களின் பாவனைக்கு திறந்து விடப்பட்ட பின்னர் இன்னும் பொருட்களின் விலைகள் குறைந்துள்ளதாகவும் பொருட்கள் தட்டுப்பாடில்லாது கிடைப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



வன்னிக்கு அனுப்பப்படும் பொருட்களுக்கான தடைகள் நீக்கப்பட்ட அன்று சைக்கிள்கள், ரயர்கள் மற்றும் உணவுப் பொருட்கள் லொறிகளில் அனுப்பப்படுவதற்காகத் தயார் நிலையில்.



சுகவீனமுற்ற மற்றும் நடக்க மாட்டாதவர்களை மட்டும் ஐ.சி.ஆர்.சி. வாகனத்தில் ஏற்றிச் சென்று விடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து வெளியிடங்களுக்கு செல்வோர் புலிகளின் அனுமதி பெற்றே செல்ல வேண்டும். 5 வயதுக்கு மேற்பட்டோர் 200 ரூபா செலுத்தி பெற்ற அனுமதிப்பத்திரத்தை பூர்த்தி செய்து வழங்குவதன் மூலம் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

50 வயதுக்கு உட்பட்டோர் செல்வதென்றால் பிணை ஒரு வரை வழங்கிய பின்னரே செல்ல அனுமதிக்கப்பட்டனர். பிணை நிற்கும் ஒருவர் தனது அடையாள அட்டையை புலிகளிடம் ஒப்படைத்த பின்னரே பயண அனுமதி மற்றவருக்கு வழங்கப்படுகிறது.

இவற்றைவிட முற்றுமுழுதாக கட்டுப்பாட்டுப் பகுதிக்கோ அல்லது வெளிநாட்டுக்கோ செல்வதென்றால் அவ்வாறு செல்பவர்கள் தம் காணி உறுதிப்பத்திரம் போன்ற அனைத்து தஸ்தாவேஜுகளையும் புலிகளிடம் ஒப்படைத்துவிட்டே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர் என தர்மபுரத்தில் இருந்து வந்த ஒருவர் எமக்கு தெரிவித்தார்.

இவ்வாறு அனுமதி பெற்ற ஒருவர் கிளிநொச்சியிலிருந்து வவுனியா வருவதென்றால் கிளிநொச்சியிலிருந்து புளியங்குளம் வரை பஸ் கட்டணம் 180 ரூபா. புளியங்குளத்திலிருந்து- புலிகளின் சோதனைச் சாவடியிலிருந்து வவுனியாவர 40 ரூபா என... 350 ரூபா போக்குவரத்து செலவு ஏற்படுவதாகவும் சொன்னார்.

முன்னர் பிரமணாலங்குளம் ஊடாக பயணம் செய்வதென்றால் 800ரூபா அளவில் செலவு ஏற்படும். அது மட்டுமல்ல பிரயாணமும் இரண்டு நாட்களாக அமையும். ஆனால் தற்போது இந்த ஏ-9 பாதையூடாக ஒரே நாளில் பிரயாணம் செய்யக் கூடியதாக இருக்கிறது. இதனால் வெய்யிலில் அலைய வேண்டிய நிலையும் கால விரயமும் ஓரளவு குறைந்துள்ளதாக ஸ்கந்தபுர வாசியான மார்க்கண்டு (53) என்பவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.





விடுதலைப்புலிகளின் சோதனைச் சாவடி

கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து மன்னார்ப் பகுதிக்கு மக்கள் செல்வதென்றால் பிரமணாலங்கும் வந்தே மன்னாருக்குச் சென்றனர். இதனால் மேலதிகமாக 60 கிலோ மீற்றருக்கு மேல் பெரும் சிரமங்களுடனும், சகல விபரத்துடனுமே பிரயாணம் செய்தனர்.

இந்த சிரமங்கள், கஷ்டங்களைக் கவனத்தில் கொண்டு கடந்த 15ம்திகதி முதல் உயிலங்குளம் ஊடாக மன்னாருக்கான போக்குவரத்து பாதையும் திறந்து விடப்பட்டிருக்கிறது. இப்பாதை திறந்து விடப்பட்டது மன்னார் செல்லும் மக்களுக்கு பெரும் ஆறுதல் அளிக்கும் விடயம்.

முன்னர் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பிரமணாலங்குளம் ஊடாக பயணம் செய்த மக்கள் தற்போது இலகுவாகவும் விரைவாகவும் பிரயாணம் செய்கின்றனர்.

குறைந்த செலவில், மன்னாரில் கிடைக்கும் மீன்வகைகளைக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு அனுப்பக்கூடியதாக இருப்பதாகவும் அங்கிருந்தும் பொருட்களை இலகுவாகக் கொண்டு வரக்கூடியதாகவும் இருப்பதாக மன்னார் மீன் வியாபாரிகள் கூறுகின்றனர்.

மன்னார் மாவட்டத்திலுள்ள கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் பலரும் தமது தேவைகளின் நிமித்தம் மன்னார் நகருக்கு வந்து செல்கின்றனர். முன்னர் காலையில் தமது பயணத்தை தொடங்கினால் மாலையே நகரை வந்தடையும் நிலை இருந்தது.
ஆனால் தற்போது உயிலங்குளம் ஊடாக பாதை திறந்திருப்பதால் ஒரே நாளில் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு திரும்புகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிலங்குளம் ஏ-9 பாதையை மக்கள் பாவனைக்கு திறந்து விட்டதன் மூலம் இவ்வளவு காலமும் பயணத்தின்போது பல இன்னல்கள், துன்பங்களை அனுபவித்த மக்கள் இப்போது விடிவு கிடைத்திருப்பதாகத் திருப்தி கொண்டிருக்கின்றனர்.

ஆனாலும் கூட நேரடி பஸ் சேவை இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. வவுனியாவில் இருந்து செல்வோர் இராணுவத்தினரின் சோதனைச் சாவடியான ஓமந்தை வரை சென்று இராணுவத்தினரின் தீவிர சோதனையின் பின் பொருட்கள் அனைத்தையும் 500 மீற்றர் தூரம்வரை தாங்களே காவிச் செல்ல வேண்டும். எரிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாது பெரியோர், சிறியோர் என்றில்லாமல் எல்லோரும் நடந்தே இந்த தூரத்தை கடக்க வேண்டும்.

இப்பகுதியைக் கடந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்று புலிகளின் அனுமதிப் பத்திரம் பெற்றே பிரயாணத்தை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். இந்த நடைமுறை இன்னமும் தளர்வு செய்யப்பட்டபாடில்லை. இதனால் மக்கள் இப்போதும் கஷ்டங்களையே அனுபவிக்கின்றனர்.

கொழும்பிலிருந்து கிளிநொச்சி வரை நேரடி பஸ் சேவை மேற்கொள்வதாக கூறப்பட்டிருந்தபோதும் இதுவரை மேற்கொள்ளப்படாமலேயே இருக்கின்றது. ஆனாலும் அது விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும், விரைவில் ஏ-9 பாதை யாழ்ப்பாணம் வரை திறந்துவிடப்படும் என்றும் கடந்த 22ம் திகதி ஓமந்தைக்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். நீண்டகாலத்தின் பின் இப்பகுதிக்கு விஜயம் செய்த ஒரே ஒரு பிரதமரும் இவரே.

12 ஆண்டுகளுக்குப் பின்னர் வவுனியா வந்திருந்த பிரதமர், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கையையும் சமர்ப்பித்து சென்றனர்.

விரைவில் மக்களின் இந்த கஷ்டநிலை நீங்கி சுலபமாக போக்குவரத்து செய்ய வகை செய்யப்படும் என புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன அங்கு தெரிவித்தார்.

ஆம்! விரைவில் இந்த கஷ்டங்கள் நீங்க வேண்டும் என அரசையும் புலிகளையும் மக்கள் வேண்டிக் கேட்கின்றனர். நீங்கிவிட வேண்டும் என்பதே எல்லோரதும் பிரார்த்தனையும் கூட.



கடந்த 22ம் திகதி வவுனியா சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள், ஏ-9 பாதையின் சோதனைச் சாவடியான தாண்டிக்குளம் வரை சென்று பார்வையிட்டபின், வவுனியா திரும்பி விமானப்படைத்தளத்தில் படையினருடன் கலந்துரையாடினார். அப்போது பிரதமர் முப்படையினருக்கும் ஆற்றிய உரையின் சுருக்கத்தை அமுது வாசகர்களுக்காகத் தருகிறோம்...

"இந்த யுத்த நிறுத்தம் தோல்விகண்டால், நாங்கள் முகம் கொடுக்க வேண்டிய பிரச்சினைகள் பல இருக்கும். போர் நிறுத்தம் இருக்கும்போது படையினர் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்பதால் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும், எமது குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும்.

இப் பாதையிலே நான் தனியே செல்லவிரும்பவில்லை. எல்லோரும் இச் சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தரவேண்டும். தனியே செல்வது இயலாது. சர்வதேச கருத்துக்கள் எங்களுக்கு ஆதரவாக இருக்கும்போது நாங்கள் இந்த போர்நிறுத்தத்தை செயற்படுத்தியிருக்கின்றோம். இதற்கான கண்காணிப்புக் குழுக்கள் இப்போது வவுனியாவுக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் எப்படி இந்த யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பது என்று அறிவிப்பார்கள். போர் நிறுத்தத்தின் கடமைகள் பொறுப்புகளை அவ்வாறே நிறைவேற்றுவதுதான் எங்களது பொறுப்பு. இச்சந்தர்ப்பத்திலே போர் நிறுத்தத்தை முறிப்பவர்கள் உலக நாடுகளின் அழுத்தத்திற்கு முகம்கொடுக்க வேண்டியேற்படும்.

இது நூற்றுக்குநூறு வீதம் வெற்றியளிக்கும் என்று கூற முடியாது. பாதுகாப்பமைச்சும் அதற்கான திட்டங்களைத் தயாரித்து வருகிறது. யுத்தநிறுத்தத்தை பலப்படுத்தும் அதேசமயம் படையினரையும் தயார் நிலையிலேயே வைத்திருப்போம்.

உலகின் வேறு பல நாடுகளிலே இவ்வாறான உடன்படிக்கைக்குப் பின் எவ்வாறு செயற்பட்டார்கள் என்பது பற்றியும் பார்க்க வேண்டும். அங்கெல்லாம் பொறுப்புக்களை அரசுகள் எடுத்தார்களா அல்லது பொறுப்புக்களை மற்றவர்களிடம் கையளித்தார்களா என்பதையும் நாம் ஆராய்ந்து அவர்களது அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

யுத்தத்தை ஒழிப்பதற்குத் தான் நாம் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்துகிறோம். ஆயுதங்களை எடுத்து எதனையும் செய்ய முடியாது. உலகில் ஒவ்வொரு நாடும்




*இன்னும் இரண்டாயிரம்*
*ஆண்டுகள் கழித்து*
*எனது கவிதைகளை*
*எவனேனும் ஒரு தமிழன்*
*கண்டெடுப்பான்*
*இலக்குமிகுமாரன் ஞானதிரவியம்*
*என்ற என் பெயர் பற்றி*
*ஆச்சர்யம் அடைவான்*
*எனது இந்தக் காலத்தில்*
*பெண்களெல்லாம்*
*ஆண்களுக்கிணையாகக்*
*கருதப்பட்டனரென்றும்,*
*பெயர்களின் முன்னால்*
*தாயின் பெயரைப் போட்டுக் கொள்ளும்*
*வழக்கமிருந்ததென்றும்*
*ஒரு வரலாற்று விளக்கம் சொல்லி*
*பல்கலைக் கழகமொன்றில்*
*முனைவர் பட்டம் பெறுவான்...*
*எனது தாய் எனது தந்தையிடம்*
*சவுக்கடி பட்டதறியாமல்!*

- இலக்குமிகுமாரன் ஞானதிரவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு முறையில் செயல்பட்டிருக்கிறது. அவை எவ்வாறு செயற்பட்டன, செயற்படுகின்றன என்பதை அறிந்து அவற்றிலிருந்து எமக்குத் உகந்ததைத் தெரிவுசெய்து அத்திட்டம் குறித்துக் கலந்துரையாடி அதனை முன்வைக்கவுள்ளோம். மாற்றுத்திட்டங்கள் குறித்தும் பரிசீலிப்போம்.

இந்த போர் நிறுத்தத்தின் பிரதான நோக்கம், அரசியல் தீர்வு ஒன்றுக்கு ஏற்பாடு செய்வதாகும். மோதல் தவிர்ப்புக்கான நிபந்தனைகள் தான் இதில் இருக்கின்றன. மோதல் தவிர்ப்பு செயல்படுத்தப்படும் காலகட்டத்தினுள் நோர்வே அரசாங்கத்தின் மூலமாக எவ்வாறு பேச்சுவார்த்தைகள் நடத்துவது சம்பந்தமாகப் பேசப்படும்.







மோதல் தவிர்ப்பின் கீழ் யுத்த நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதோடு பயங்கரவாதம், ஆட்களைக் கொலை செய்வது, பொதுமக்கள் வாழும் பகுதிகளில் குண்டுகளைப் போடுவது போன்ற யாவும் தடைசெய்யப்பட்டவைகளாக இருக்கும். இலங்கையின் முப்படையினருக்கும் நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் அதிகாரம் இருக்கின்றது. இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்கும், இந்த நாட்டுக்குள் 'சட்டவிரோத'மாக ஆயுதங்களை கொண்டு வருவதைத் தடுப்பதற்கும் இராணுவத்தினருக்கும் கடற்படையினருக்கும் விமானப்படையினருக்கும் பூரண அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த நிபந்தனைகளின் கீழ் மோதல் தவிர்ப்பினை செயற்படுத்துவதற்கு நாங்கள் இணக்கத்திற்கு வந்திருக்கிறோம்.

இந்த யுத்த தவிர்ப்பின் மற்றைய நோக்கம் என்னவென்றால் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் தெற்கிலிருந்தாலும் வடக்கிலிருந்தாலும் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதாகும். மக்களைப் பாதிக்கும் எல்லா நடவடிக்கைகளையும் நிறுத்துவது. அதாவது கப்பம் வாங்குவது கடத்திச் செல்வது, ஏனைய பலவந்தப்படுத்தும் செயல்கள் என்பன இதனுள் அடங்குகின்றன.

மக்களுக்கு பாதிப்பு ஏற்படாது தங்கள் ஜீவனோபாயத்தை மேற்கொள்ள முடியும். எல்லோரும் சமாதானத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த போர் நிறுத்தம் மூலம் மோதல் இல்லாத நல்லதொரு சூழலை உருவாக்கலாம். ஆனால், மோதல் தவிர்ப்புடன் மட்டும் யுத்தம் முடிவடையவில்லை. அடுத்தகட்டமாக பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும்.

இன்று யுத்தம் நெருக்கடி என்பன இலங்கையில் மட்டுமல்ல. சர்வதேச மட்டத்திலும் வியாபித்திருக்கிறது. அந்த சர்வதேச கருத்துக்களையும் மதித்து நாங்கள் செயற்பட வேண்டியிருக்கிறோம். எனவே எல்லா சந்தர்ப்பங்களிலும் எல்லா நாடுகளுடனும் பேசி கருத்துக்களைப் பெற்று ஒத்துழைப்பினைப் பெற்று முன்செல்வதற்கு நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம். சர்வதேச கருத்தின் அடிப்படையில் அரசியல் தீர்வு குறித்து கவனம் எடுத்து செயற்படுவோம்.

இன்று சர்வதேசத்தின் கருத்துக்கள் இலங்கை அரசின் பக்கம்தான் சாதகமாக இருக்கிறது. எனவே நாம் போர்நிறுத்தத்தை சரிவர செய்வோம். எங்களுடைய கடமைகளை நாங்கள் சரியாகச் செய்வோம். மோதல் தவிர்ப்பினை செயற்படுத்துகின்ற அதேவேளை எதற்கும் நாங்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும். கண்களைத் திறந்து கொண்டு இந்த பாதையிலே நாங்கள் செல்ல வேண்டும்.

இந்த போர்தவிர்ப்பு ஒப்பந்தம் முற்றாக செயற்படுத்தப்பட மூன்று மாதங்கள் செல்லும். முதல் இரண்டு மாதங்களில் வவு னியா-யாழ்ப்பாண வீதி சாதாரண மக்கள் உபயோகிக்கும் நிலையில் முன்னேற்றம் கண்டுவிடும். ஆயுதங்கள் இல்லாமல் எவரும் இப்பிரதேசங்களுக்குள் நடமாடும் உரிமையும் இன்றிலிருந்து உண்டு.

நோர்வே, சுவீடன், டென்மார்க், பின்லாந்து நாடுகளிலிருந்து கண்காணிப்புக்குழுக்கள் வர இருக்கின்றன. அரசினதும், எல்.ரி.ரி.ஈ.யினதும் பிரதிநிதிகளும் கண்காணிப்புக் குழுவில் இடம்பெறுவார்கள். குழுவின் தலைவர் நோர்வேயினதோ வெளிநாட்டவர் ஒருவரோ இருப்பார். ஒவ்வொரு பிரதேசத்திலும் இருக்கின்ற குழுக்களின் தலைவராக ஸ்கண்டிநேவிய நாடுகளின் பிரதிநிதி ஒருவர் இருப்பார். மோதல் தவிர்ப்பு நிபந்தனைகளை இரு தரப்பினரும் செயற்படுத்த வேண்டும்.

இந்த பொறுப்பை நிறைவேற்றும்போது எங்கள் தரப்பில் எந்த தவறும் ஏற்படமுடியாது. மோதல் தவிர்ப்பு என்பது யுத்தத்திற்கு முடிவுகாணும் முதல் நடவடிக்கை.

இந்த பேச்சுவார்த்தையின்போது பிரச்சினை ஏற்பட்டாலும் மக்கள் விருப்பத்தின்படி மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு செல்வதற்கு நடவடிக்கை எடுப்போம். இப்போது இருக்கும் நம்பிக்கை குறைவதாக இருந்தால் எங்களுடைய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள முடியும். இந்த காலகட்டத்திலே எங்கள் குறைபாடுகளை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

அரசியல் தீர்வின் மூலம் இந்த நாட்டின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என நாம் எல்லோரும் முன்வந்துள்ளோம். எனவே இந்த மோதல் தவிர்ப்பை வெற்றிகரமாக்க எல்லோரும் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும்." ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழுத்து எதிர்ப்புணர்வுக்கான ஆயுதம்

## - பாமா

**கருக்கு, சங்கதி ஆகிய நாவல்களின் மூலம் பரவலான கவனிப்பைப் பெற்றுக் கொண்டவர் பாமா. புதிய கதாபாத்திரங்களையும், எதிர்ப்புணர்வையும் அறிமுகப்படுத்தியிருக்கும் முறையில், படிக்கும் வாசகர்களிடமும் அந்தத் தாக்கம் வந்துவிட, தனது கலகக் குரலைப் பதிவு செய்து வருபவர். தலித் மொழி, தலித் பெண்ணிய மொழியை நோக்கிப் பயணப்பட்டிருப்பவர். இரண்டாயிரமாம் ஆண்டிற்கான 'கிராஸ் வேர்ட்புக்' விருதைப் பெற்றிருக்கும் பாமாவின் 'கருக்கு' நாவல் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தான் பார்த்து வந்த ஆசிரியத் தொழிலை உதறிவிட்டு கன்னியாஸ்திரியாக மாறியவர். பின்னர் அங்கிருந்தும் கருத்துமுரண்பாடு கொண்டு வெளியேறி எழுத்தையே தனது எதிர்ப்புணர்வுக்கான ஆயுதமாக எடுத்துக் கொண்டிருப்பவர். பிரபல விமர்சகர் ராஜ்கௌதமனின் தங்கை பாமா. 'தலித் முரசு' இதழில் வெளியான அவரது பேட்டியிலிருந்து சில பகுதிகள்...**

◊ உங்களுக்குள் தலித்திய சிந்தனை வந்ததற்கான பின்னணி என்ன?

☆ தலித்திய சிந்தனை என்பது இறக்குமதி செய்யப்படுவதில்லை. நான் ஒரு தலித் அதைவிட வேறென்ன வேண்டும். நான் பிறந்ததிலிருந்து என்னோட ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒடுக்கப்பட்டுதான் வருகிறேன். நான் படித்து வேலை பார்க்கிறேன் என்பதாலேயே எனக்கு விடுதலை கிடைத்து விடவில்லை எல்லோரும் சமம் என்று சொல்லிதான் நான் வளர்க்கப்பட்டிருக்கிறேன். எனக்குள் தலித் சிந்தனை முனைப்போடு வந்ததற்கு என்னுடைய அண்ணன் ராஜ்கவுதமனும் ஒரு காரணம். சின்ன வயசிலிருந்தே அவர் என்னிடம் சொல்வார் "*பிறப்பால நாம இந்த ஜாதின்னு ஆகியாச்சு. அதை மாற்ற முடியாது. ஆனால் படித்து முன்னேறிட்டோம்னா நம்மைத் தேடி வருவாங்க*" என்பார்.

◊ பேச்சு மொழி - ஒடுக்கப்பட்டவர்களுக்கான மொழி எனப் பழைய இலக்கியங்களிலிருந்து மீடியா வரை சித்திரிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் அதை ஏற்றுக்கொள்கிறீர்களா?

☆ எனக்கு அதில் உடன்பாடு இல்லை. முதலில் இந்தப் பழைய இலக்கியங்கள் முதல் 'மீடியா' வரை அனைத்தையும் கையில் வைத்திருந்தவர்கள் தலித் அல்லாதவர்கள். (அதாவது பார்ப்பனர்கள், வெள்ளாளர்கள்) மதிப்பீடுகள், பழக்க வழக்கங்கள் என எல்லா விசயத்திலும் கடைசியில் அவங்க சொல்வதுதான் தீர்மானமா வந்திடும். அவங்க என்ன சொல்றாங்களோ அதைத்தான் நாம செய்ய வேண்டும். அவங்க சொல்றாங்க என்பதற்காக, இது இழிவான மொழியாகிவிடாது. பார்ப்பனர்கள். 'அவாள்', 'இவாள்', 'வர்றச்ச', 'போறச்ச'ன்னு பேசுறாங்க. அதை 'மாஸ் மீடியா'வில் காட்டுகிறார்கள். அதையும் நாம் பார்த்து ரசிக்கிறோம். அது மாதிரி நானும் என்னுடைய மொழியை கவுரவமாக மதிக்கிறேன். இது மக்கள் மொழி. நல்ல மொழின்னு நினைக்கிறேன்.

◊ தமிழ் இலக்கியச் சூழலில் பாமாவின் இடம் என்ன?

☆ தவிர்க்கமுடியாதது. என்னை ஒதுக்கணும்னு சொன்னாக்கூட ஒதுக்க முடியாது.

◊ எழுத்து உங்களுக்கு என்னவாக இருக்கிறது?

☆ எதிர்ப்புணர்வைக் காட்டுகிற ஆயுதமாக - விடுதலைக்கான வழியாக இருக்கின்றது. சமூகக் காழ்ப்புணர்ச்சிகளை, முரண்பாடுகளை மனதுக்குள் அடைத்து வைத்துக் கொள்வது மிக கடினமாக இருக்கின்றது. எழுத்து அதற்கெல்லாம் வடிகாலாக உள்ளது.

◊ தலித் விடுதலையை எழுத்து மட்டும் தான் தீர்க்குமா?

☆ எழுத்து மட்டும் தீர்க்காது. எழுத்தும் தீர்க்கும்.

◊ தலித் அரசியலில் பெண்களின் பங்களிப்பு எந்தளவுக்கு உள்ளது?

☆ அவ்வளவாக இல்லை. தலித் அரசியலைப் பொறுத்தவரை, ஆண்களே இப்பொழுதுதான் நுழைஞ்சிருக்காங்க. பெண்களைக் கொஞ்சம் கொஞ்சமாக உள்ளிழுக்க வேண்டும்.






***பறவைகள் கூட்டமாய்***
***வந்தமர***
***கிளைகள் ஆடிப்பாடுகின்றன;***
***பின் அவை நடுங்குகின்றன***
***ஏகோபித்த முடிவோடு***
***பறவைகள் வானம் தேடிச்***
***செல்கையில்.***

- குட்டி ரேவதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

◊ சாதியே இல்லாமல் போகணும் என்றால் என்ன வழி?

☆ இப்ப வர்ற 'அல்டிமேட்' எல்லாமே சாதி ஒழிப்புதான் என்றாலும் கூட, தமிழகச் சூழலில் சாதியைத் தவிர்க்க முடியவில்லை. நான் விரும்பி இந்தச் சாதியில் வரவில்லை. இவங்க இழிவு என்று சொல்வதால் நான் இழிவாகிவிட மாட்டேன். பார்ப்பனர், நாயுடு, ரெட்டியார் என்று சாதிப் பெயர் போட்டுக் கொள்கிறார்கள். அதைப் போல் நானும் சாதியை ஒத்துக் கொள்கிறேன். சாதியை ஏத்துக்கும்போது ஒரு வீம்பு, வைராக்கியம் வரத்தான் செய்யுது. யாராவது சாதியைக் கேட்கும்போது, எஸ்.சி.ன்னு சொல்றதா, அரிஜன்னு சொல்றதான்னு கஷ்டமாக இருக்கும். ஏதோ தப்பு செய்துவிட்டதுபோல உணர்வு வரும். அதையே, என்ன சாதி என்று கேட்டால் - பறையன் என்றோ, பள்ளன் என்றோ, சக்கிலியன் என்றோ சொல்லிப்பாருங்க. கேட்டவனுக்குப் பட்டுன்னு போயிடும். அதிர்ச்சியை ஏற்படுத்தும் இதுகூட ஒரு கலகக் குரல்தான்.

◊ பெண்ணிய எழுத்து, பெண்மொழி என்பது எந்த அளவுக்கு உணரப்பட்டிருக்கிறது?

☆ பெண்களுக்கான மொழியே நமக்கு கிடையாது. தொல்காப்பியத்திலிருந்து எடுத்துக் கொண்டீர்கள் என்றால், மொழி என்பது, ஆண்கள் தங்களுடைய அதிகாரத்தைக் கட்டமைப்பதற்காக உருவாக்கப்பட்டதாக இருக்கிறது. எல்லா இலக்கியங்களிலும் ஆணை மையப்படுத்திய மொழியே உள்ளது. ஆங்கிலத்தில் பெண் எழுத்தாளர்கள், பெண் எழுத்து எல்லாம் 'ஸ்ட்ராங்கா' வந்துவிட்டது. ஆனால், இங்கு இப்பொழுதுதான் அதைப்பற்றிய சிந்தனை, தெளிவு, கவனம், தேவை உணரப்பட்டிருக்கிறது. அப்படி பெண்மொழி தோன்றும் போது கருத்தாடல், கதை சொல்கிற முறை எல்லாவற்றிலும் வேறுபாடு இருக்கும். இப்பொழுது இருப்பது ஆண்மொழி என்றால், அதற்கு நேரெதிரே அதிகாரக் கட்டமைப்பில் தலைகீழ் மாற்றத்தை ஏற்படுத்துவதாகப் பெண் மொழி இருக்கும்.

◊ பெண் எழுத்தாளர்கள் நிறையபேர் எழுத வந்ததும் - ஏன் பெண்மொழி உருவாக்கப்படவில்லை?

☆ பெண் எழுத்தாளர்கள் நிறைய பேர் எழுத வந்ததும் - ஆண் மொழியைத் தான் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். குடும்பம், இலக்கியம் எல்லாமே ஆணை மையப்படுத்தி இருப்பதுதான் அதற்குக் காரணம். பெண் எழுத்தாளர்களும் ஆண் எழுத்தாளர்களையே முன்மாதிரியாக வைத்து எழுதியிருக்கிறார்கள். இப்பதான் வேறு மாதிரியாக சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

◊ தலித் சினிமா, தலித் கலை, தலித் எழுத்து இவற்றைப் பரவலாக மக்கள் மத்தியில் எடுத்து போவதில் உள்ள சிக்கல் என்ன?

☆ வர்ணாசிரம அடிப்படையில் பார்ப்பனர்கள் என்ன வைத்திருக்கிறார்களோ, அது உயர்வாகத்தான் கருதப்படுகிறது. பறையை பார்ப்பனர்கள் அடித்திருந்தார்கள் என்றால், அதுவே உயர்வாக இருந்திருக்கும். கர்நாடக சங்கீதத்தை தலித் மக்கள் வைத்திருந்தார்கள் என்றால், அது இழிவானது என்று ஒதுக்கியிருப்பார்கள். கலை, அடிப்படையில் சாதியை வைத்து தானே தீர்மானிக்கப்படுகின்றது.
மொழிச் சிக்கல்ன்னு சொல்றாங்க. சென்னை மொழி, கோவை மொழி, தேவர், கவுண்டர், பார்ப்பனர் மொழியெல்லாம் மக்கள் மத்தியில் சென்று சேருகின்றது. ஆனால் 'தலித்மொழி' பேசினால் மட்டும் சிக்கல் வருவதாக நினைக்கிறார்கள். ஏன் நம்ம மொழி போய்ச் சேராதா?

◊ அந்த மொழிகள் எல்லாம் காலங்காலமாக இருப்பதால் அதற்கு அங்கீகாரம் இருக்கிறதா?

☆ காலங்காலமாக இருந்தால் மட்டும் நீங்கள் அங்கீகாரம் கொடுப்பீர்கள். புதிதாக வந்தால் கொடுக்கமாட்டீர்கள். அப்படியானால் நாங்களும் ஆரம்பித்து அதையே காலங்காலமாகக் கொண்டு வருவோம்.

◊ குடும்ப அமைப்பு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

☆ இப்ப சமுதாயத்தில் இருக்கிற குடும்ப நிறுவன அமைப்பில் எனக்கு உடன்பாடு இல்லை. மறுபடியும் ஆண் தலைமை. எல்லாவற்றையும் தீர்மானிக்கிறவர்களாக ஆண்களே வருகிறார்கள். பெண்கள் இரண்டாம் பட்சம்தான். குடும்ப அமைப்பே வேறு மாதிரி இருக்க வேண்டும். அது எப்படி இருக்க வேண்டும் என்று என்னிடத்தில் கேட்காதீர்கள். ஆனால், இது சரியில்லை என்று மட்டும் தெரியும்.

◊ ஒரு பெண்ணுக்குத் திருமணம் கண்டிப்பாகத் தேவையா?

☆ கண்டிப்பாகத் தேவையில்லை. திருமணம் இல்லாமலும் வாழலாம். ஒரு கணவனுக்கு நல்ல மனைவியை உற்பத்தி செய்கின்ற இடமாக மட்டுமே குடும்பம் இருக்கிறது. அது மாறவேண்டும். ஒரு குடும்பத்தில் ஆண் மாதிரியே பெண்ணும் வளர்க்கப்பட வேண்டும். ஆண் மனிதனாக வளர்க்கப்படுகிறான். பெண் அடிமையாக வளர்க்கப்படுகிறாள். இந்த வளர்ப்பு முறையில் மாற்றம் வரவேண்டும்.

திருமணம் வேண்டாம் என்று சொல்வதால், சமூகத்தை விட்டு ஒதுங்குகிறேன் என்று அர்த்தம் இல்லை. நான் சமூகத்துக்குள்ளேதான் இருக்கிறேன். சில விசயங்களில் அவர்களுடன் ஒத்துப் போக முடியாது. அப்போது நான் விலகிப் போயிடுவேன். ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. சில விஷயங்களை அலட்சியப் படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் அடிபட்டுப் போயிடுவோம். ●




*காரணங்கள் இல்லாத காட்டில்*
*திரிந்து வளரும்*
*சிறுமியின் கதையொன்றை*
*பாட்டி சொல்லக் கேட்டாள்*
*அவள் கேள்விகளால்*
*அவளுடன் வளர்ந்தது*
*கதையின் காடு*
*விநோதங்களும்*
*அற்புதங்களும் நிறைந்த அதில்*
*சாகசங்கள் புரிந்து வந்தாள்*
*எப்பொழுதும் எங்கும்*
*காட்டைச் சுமந்து திரிந்தாள்*
*வசந்த காலங்களில்*
*அவள்*
*முகமெல்லாம் பூப்பூக்கும்*
*கண்ணசைவிற்குக்*
*கட்டுப்படும் மிருகங்கள்*
*ஏவல் செய்யக்*
*காத்திருப்போர் ஏராளம்*
*காட்டினுள் நுழையும் தந்திரத்தை*
*மட்டும்*
*ரகசியமாய்க் காக்கின்றாள்*

— குவளைக்கண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கொம்புத் தேன்

- எம்.ஐ.எம்.தாஹிர் -

"உம்மா... நாளக்கி தாத்தாவ மாப்புள ஊட்டுக்காரங்க பாக்க வாறதாச் செல்லி இரிச்சிறாங்க... சாப்பாடு எல்லாம் ஆயத்தம் பண்ண வேணுமில்லையா?..."

முளாபர் தன் தாயிடம் கூறிக் கொண்டே பக்கத்தில் அமர்ந்தான். சமையல் வேலையில் மூழ்கிப் போயிருந்த தாய் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"ஆரு தம்பி அந்த போஸ்ட் ஒப்பிஸ்ல பியோன் வேல பார்க்கிற ஆள்ற ஆக்கள் தானே வாறாங்க?" என்று மகனிடம் கேட்டாள்.

"ஓம் உம்மா... அதப்பத்தி தாத்தாக் கிட்டக் கதச்சிங்களா?..."

"இல்ல... இப்ப கதச்சிப் பாத்திட்டுச் சாப்பாடு ஆயத்தம் பண்ணுவம்..." என்று கூறியவளாய் உள்ளே இருக்கும் மகள் முனீராவை அழைத்தாள்.

"என்னாம்மா கூப்பிட்டீங்களா?" எனக் கேட்டுக்கொண்டே வெளியே வந்தாள் முனீரா.

"ஓம் உம்மா... நான் அன்டக்கிச் சென்னேனே.. அந்த ஆளப்பத்தி... நீ ஒரு முடிவும் செல்லாம இருந்திட்ட. இப்ப அவர்ட ஆக்கள் பாக்க வரப் போறாங்களாமே..: என்னா செல்லுவம்?..." என மகளிடம் கேட்டாள்.

"வர வாணாம் என்டு செல்லுங்க... போயும் போயும் ஒரு பியோனையா நாங் கட்டிக்கணும்?..."

"அப்புடியா?... அன்டக்கி உம்மா ஒனக் கிட்ட செல்லக்கிட்ட நீ பேசாம இருந்திட்டா அதான் நான் நெனச்சன் ஒனக்கி விருப்பம் தானாக்கும் என்டு... அந்த மாப்புளயும் ஒனக்கிப் புடிக்கலயா?..." என்றான் முளாபர்.

"நான்தான் அப்பவே செல்லிட்டேனே... நீங்க பேசிறதெல்லாம் என்ட மனசில இரிச்சிராப்போல பொருத்தமாப்படலல்ல. நான் எண்ணியிரிச்சிராப் போல மாப்புள கெடச்சாட்டி, வாழ்றதில்ல என்டு முடிவு பண்ணிட்டன்..."

அவள் பேச்சில் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் தொனித்தது. அதைக் கூறி விட்டு வெடுக்கென வீட்டிற்குள் போய்விட்டாள்.

அதைக் கேட்ட தாயும் மகனும் சிலையாகி இடிந்து போய் இருந்தனர். நீண்ட மௌனம் ஆட்சி புரிந்தது.

"புள்ள முனீரா இஞ்ச வாம்மா..." என்று தாய் அந்த மௌனத்தைக் கலைத்தாள்.

"என்னம்மா கூப்பிட்டீங்களா?..." என்று கேட்டுக்கொண்டே வெளியே வந்தாள் முனீரா.

"பேசிறதையெல்லாம் வாணாங்.... வாணாங்... என்டா ஒரு முடிவில்லையாம்மா?... ஏதாச்சும் ஒண்ணுக்குச் சம்மதிச்சா நாங்களும் முடிச்சிப் போட்டு நிம்மதியா மூச்சு உட ஏலுமே!...." என்று ஆதங்கத்தோடு கூறினாள்.

"எனக்கிப் புடிக்கல்ல என்டா... எப்புடிம்மா சம்மதிச்சிறது?... நாந்தான் அப்பவே செல்லிட்டேனே... நாங் கட்டிற மாப்புளயப் பாத்து நாலுபேர் நல்ல உத்தியோகம் பாக்கிறார், நல்ல எடுப்பான ஆம்புள என்டு செல்லணும்... கண்ட நின்ட நோஞ்சானெல்லாம் மாப்புள என்டு ஏத்துக்கல ஏலுமா?..." என்று கூறும்போதே அவளது தொனியில் ஓங்காரம் ஒலித்தது.

"இனி எங்களாலே ஏலாது உம்மா... காக்காவும் நானும் எத்தன மாப்புளயத் தாங் பாத்துப் பேசிட்டோம். ஒண்ணுக்கும் சம்மதிக்கல என்டா... இனி எங்கதாங்க போறது?... அவ செல்லறப்போல மாப்புள தேடுறது என்டா நம்மக்கிட்ட லெச்சக் கணக்கில பணம் இரிச்சணும்... அவட வயசயும் பாக்கணும் இல்லையா?..."

அவன் இவ்வாறு கூறிவிட்டு எழுந்து போய்விட்டான்.

"பாத்தியா உம்மா... பொம்புளப் புள்ளக்கி வயசி போனா மாப்புள தேடுறது கஷ்டமாத்தாங் இரிச்சிம். வயசி கூடிட்டா ஆரும் வந்து பாரம் எடுக்க மாட்டாங். ஆராச்சிம் பொண்டாட்டிய உட்டவன், பொண்டாட்டி செத்தவன்கள்தாங் வருவான்... நாம நெனச்சிறப்போல மாப்புள தேட நம்மட கையிலையும் நெறய இரிச்சணும். அன்டன்டக்கித் தின்றதே பெரிய கஷ்டத்தில கெடக்கு... என்னாவோ யோசின பண்ணி நடந்துக்க..." எனத் தன் மனக்குமுறலைக் கொட்டித் தீர்த்தாள் அன்னை.

அன்னையின் வேதனையில் தோய்ந்த வார்த்தைகள் முனீராவைக் கொஞ்சமும் அசைக்கவில்லை. அன்னையின் நெஞ்சத்தில் நிறைந்திருந்த வேதனை கரை புரண்டு கண்களில் திரண்டிருந்தது.

மீண்டும் அன்னைதான் கூறினாள்.

"பாத்தியாம்மா... கூடப் பொறந்தவனோளே இப்புடிக் கையுட்டுட்டுப் போனா... என்னால என்னாம்மா செய்ய ஏலும்?... நம்மலுக்கு வாப்பாட ஒதவியும் இல்லாமப் போச்சி... என்னாத்தச் செஞ்சாலும் அந்த ஆண் குஞ்சு ரெண்டுந்தாங்... அவனொளும் கையுட்டா... நாம் ரெண்டு பேரும் கடல்லதாங் போய் உளனும். ஒன்ன நெனச்சி... நெனச்சித்தாங் அவனோளும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியாணம் முடியாம இன்னங் இரிச்சானோள்..." என்று தன் ஆதங்கத்தை அள்ளிக் கொட்டினாள்.

''தேவயிண்டா அவனோளக் கலியாணம் முடிச்சிக்கிட்டுப் போவச் செல்லுங்களேங். நாங் என்னா வாணாங் என்டா தட செய்யிறன்..." என்று தன் வெறுப்பைக் கொட்டினாள் முனீரா.

''அப்படிச் செய்றது ஊருக்கு நல்லா இரிச்சாது புள்ள. ஊட்டில கொமர வெச்சிக்கிட்டுத் தம்பிமார் கலியாணம் பண்ணிக்கிட்டுப் போட்டானோள் என்டு ஊரவங்க மொகத்தில துப்புவாங்க... அதாங் அவனோள் ஒனக்கி மாப்புள தேடித் தேடி ராப்பவலா அலையிறானோள். நீ என்னான்டா ஒண்ணுக்கும் ஒத்துவாறால்ல..."

''அப்படின்டா எல்லாரும் என்னக் கையுட்டுட்டீங்களா..."

''இப்புடி நடந்தா என்னாதாங் செய்றது?... கையுடத்தாங் வேணுங். நீ கதப் பொஸ்தவத்திலயும், டீவியிலயும் வாற நடிகைமாரப் போல ஒன்னையும் நெனச்சிக்கிட்டு நடக்கிறா? நாம் நெனச்சிறதெல்லாம் நடக்கிறதில்ல. நம்மட தகுதிக்கு தக்கதாப் பாத்துக்கிட்டுப் போவணும். எல்லாத்திலயும் புடிவாதங் கூடாது... எதுக்கும் நல்லா யோசின பண்ணி ஒரு முடிவச் சொல்லு..."

''சரி பாப்போம்..."

அவ்வளவோடு பேச்சை முடித்துக் கொண்டு அறைக்குள் புகுந்து விட்டாள். தாயும் அப்படியே அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்தாள்.

* * *

திருகோணமலை-கண்டி பெரும் பாதையை அண்டிய முள்ளிப்பொத்தானைக் குடியேற்றப் பகுதியில் வாழும் விவசாயக் குடும்பங்களில் இஸ்மாயிலின் குடும்பமும் ஒன்று. அவரது மூன்று மக்களில் முனீரா மூத்தவள். முசாதிக்கும், முளாபரும் இளையவர்கள்.



ஒவ்வொரு போகத்தின் போதும் கடன்பட்டு விவசாயம் செய்து, முதலாளி முதலைகளுக்கு விளைச்சலை அள்ளிக் கொடுத்துவிட்டு, பதரும் மண்ணும், கந்து முறியுமாக மிஞ்சுவதை அள்ளிக்கொண்டு வீட்டுக்கு வரும் பாரம்பரிய வாழ்க்கையில் இஸ்மாயில் குடும்பமும் உட்பட்டிருந்தது.

பரம்பரைச் சொத்தாகக் கிடைத்த வண்டி மாடு இல்லாவிட்டால், அவரது குடும்பம் என்றோ நடுத்தெருவுக்கு வந்திருக்கும். அதன் உதவியால்தான் ஆண் மக்கள் இருவரையும் உத்தியோகம் பார்க்கும் அளவுக்கு உயர்த்திவிட்டார். அவர்களின் ஊரில் அப்போது சாதாரண தரத்திற்கு மேல் படிக்கப் பாடசாலை இல்லாததால் முனீரா வீட்டோடு இருந்துவிட்டாள். எனினும் பக்கத்துச் சிங்களப் பாடசாலையில் நடந்த மாலைநேரத் தையல் வகுப்பில் பயின்று தேர்ச்சி பெற்றிருந்தாள்.




முனீரா பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே வித்தியாசமான போக்குடன் நடந்து கொள்வாள். தான் ஒரு இலட்சியவாதியாக நடப்பதாகக் கூறிக்கொள்வாள். தனக்கு வரப்போகும் கணவன் பெரிய உத்தியோகம் பார்ப்பவனாகவும், கொழுத்த சம்பளம் வாங்குபவனாகவும், ஆணழகனாகவும் இருக்க வேண்டும் என்று கற்பித்துக் கொண்டு அந்த ஆசை வட்டத்தை இன்றுவரை தழுவிக் கொண்டிருக்கிறாள். மற்றவர்கள் தன்னைப் பார்த்துப் பாராட்டிப் பேச வேண்டும். அதைக் கேட்டுத்தான் இறுமாப்படைய வேண்டும் என்று ஆசையை வளர்த்துக் கொண்டாள்.

அந்த இலட்சிய புருசனுக்காகவே தேடி வரும் வரன்களை எல்லாம் தனக்குப் பொருத்தமில்லை என்று தட்டிக் கழித்து வருகிறாள். இஸ்மாயில் பாரிசவாதத்தால் முடங்கி மூலையில் கிடக்கும் வரை அவளுக்கு வரன் தேடிக் களைத்தார். அவருக்குப்பின் தம்பிமார்களும் வரன் தேடிக் களைத்துவிட்டனர். கடைசியாக நேற்றுத் தேடிவந்த வரனையும் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டாள்.

விரக்தியின் விளிம்பில் நிற்கும் தாயும் சகோதரர்களும் அவளுக்கு வரன் தேட முடியாது என அலுத்துவிட்டனர்.

முனீராவின் நிலை இப்போது இக்கட்டாகிவிட்டது. தனக்குச் சாதகமாகப் பேசி



*தேவை மிகவென*
*தேடினேன் பலமுறை*
*அசந்துபோன நேரத்தில்*
*அழகாய்த் தெரிந்தது உன் முகம்*
*இப்போது*
*தெரியாமல் போனதென்னவோ*
*என் முகம் முடிவாய்.*

- கி. விஜயலட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த தாயும் இப்போது தன்னைக் கோபிக்கத் தொடங்கிவிட்டாள். யாராவது ஒருத்தனுக்குக் கண்ணை மூடிக்கொண்டு கழுத்தை நீட்ட வேண்டியதுதான். இல்லாவிட்டால் தன் இலட்சியத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு வாழாவெட்டியாகக் காலத்தைக் கடத்த வேண்டியதுதான். இன்னும் சில வருடங்கள் போனால் கிழவி என்று பட்டம் சூட்டிவிடுவார்கள். இப்போது கிழட்டுக் குமரியெனக் கூறுகிறார்கள்.

ஒரே மனப் போராட்டம். சில நாட்களாக அவள் யாரோடும் சரியாகக் கதைப்பதில்லை. அறைக்குள் அடைபட்டே கிடந்தாள். தையல் வேலை, கதை படிப்பது, ட.வி பார்ப்பது என்பவற்றோடு காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தாள். எல்லோரும் அவளைத் தன் பாட்டில் போக விட்டுவிட்டனர். கடைசியில் ஏதாவது ஒரு முடிவுக்கு வருவாள் என எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால், அவள் தன் இலட்சியத்திலிருந்து சற்றும் கீழிறங்கவில்லை. நாட்கள் மாதங்களாகிக் கருகிக் கொண்டேயிருந்தன.

ஒருநாள் முஸாதிக் யாருக்கும் தெரியாமல் தன் உறவுப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான். தாய் வீட்டுக்கு வருவதையும் நிறுத்திக் கொண்டான். அதுவும் எல்லாரும் எதிர்பார்த்ததுதான். அன்னையைத் தவிர மற்றவர்கள் அலட்டிக் கொள்ளவில்லை.

அன்னைதான் இரண்டொரு நாட்களாகக் கவலையால் அலைக்கழிந்தாள். கண்ணீர் சிந்தினாள்.

காலம் கடந்து கொண்டே போவதை எண்ணிய தாய்தான் அன்று முனீராவிடம் கேட்டாள்.

"என்னம்மா இப்புடியே காலத்தைக் கடத்திக்கிட்டே போனா ஒரு முடிவு இல்லையா?... இரிச்சிறவங்க எல்லாம் மவுத்தாப் போயிடுவாங்க கடைசியில கண்கலங்க வேண்டிவரும்..."

"எது எப்புடி நடந்தாலும்... எத்தன வருசம் போனாலும் என்ட முடிவு ஒண்ணுதாங் உம்மா... நான் நெனச்சிறது நடக்காட்டி அப்புடியே கொமரா இருந்திட்டுப் போவன்..." எனத் தன் பிடியிலிருந்து மாறாமலே கூறினாள்.

"நீ என்னாம்மா... புதுமையான பொம்புளையா இரிச்சா?... பொம்புளப் புள்ளக்கி இப்புடிப் புடிவாதம் கூடாது. எல்லாம் எங்கட பொழ. ஒன்ன அப்பவே செல்லங் குடுத்து விருப்பப்படி நடக்க உட்டுட்டம். அந்தா ஒருத்தன் செல்லாமக் கொள்ளாமக் கலியாணம் முடிச்சிட்டுப் பெய்த்தான். மத்தவனும் அப்புடித்தாங் ஒரு நாளக்கி ஒதுங்கிடுவான்... வாப்பாவுங் கண்ண மூடிட்டா... நான் மட்டும் தனிய ஒன்ன வெச்சிக்கிட்டு என்னாம்மா செய்யேலும். ஒனக்கிண்டு ஒரு ஆம்புளத் தொண வேணுங் உம்மா.... இப்பவாச்சிம் ஒன்ட புடிவாதத்த மாத்திக்கில மாட்டியா?..." எனக் கவலைகளால் கசங்கிப் போன இதயத்தை பிழிந்து வந்த வார்த்தைகளைக் கொட்டித் தீர்த்தாள் தாய்.

"போறதெல்லாம் போவட்டும்... நடக்கிறதெல்லாம் நடக்கட்டும். ஆம்புளத் தொண வேணுங் எண்டு எனக்கிம் தெரியுது... அதுக்கு மனம் புடிச்சணுமே...

சரியான ஆம்புள வாச்சாட்டி நாங் இப்புடியே வருசக்கணக்கில இருந்திட்டுப் போவன். அதப் பத்தி எனக்கிக் கவல இல்ல. எனக்கிச் சாப்பாடு போடுறதுக்கு என்ட தையல் மிசின் இரிச்சி. வேணும் எண்டா முளாபரையும் கலியாணம் முடிச்சிக்கிட்டுப் போவச் செல்லுங்க..... நாங் கவலப்படமாட்டங்...... இனிமே நீங்க ஆரும் எனக்கி மாப்புள பேசித் திரியாதயங்க.. ஆராச்சிம் தன்னால வருவாங்... நாங் பாத்துக்கிலுவன்....."



*பாலியல் உணர்வு*
*மட்டுமா எம்மில் கலந்துள்ளது?*
*பார்த்தல், கேட்டல்*
*ருசித்தல், மணத்தல்*
*உணர்தல் இவற்றுடன்*
*பகுத்தறிதல் என்பனவும்*
*எமக்கு உண்டு*

*கண்களும், மூக்கும்*
*செவிகளும், நாவும்*
*உணர்மிகக் கொண்ட தோல்முடியும்*
*எம்மைக் காவலிட்டுள்ளன:*
*இவற்றினுள்ளே*
*இப் பிரபஞ்சத்தின் உயிர்ப்பே*
*உறைந்து கிடக்கின்றது.*

- சுல்பிகா

அவளது பிடிவாதமும், வைராக்கியமும் பின்னிய வார்த்தைகள் அன்னையின் வாயில் முத்திரை பதித்துவிட்டன. அவள் தனக்குள் எழுப்பி வைத்திருந்த உயர்ந்த எண்ணத்திலிருந்து இறங்கவே இல்லை. அவளோடு கதைப்பதிலும் பயனில்லை என்ற முடிவில் தாய் அமைதியானாள்.

இருந்தும் அவளது மனம் பொறுக்க முடியாமல் புழுங்கிக் கொண்டது.

முப்பத்தாறு வயதுக்கு மேலாகிவிட்ட பின்னரும் அவளுக்கு ஏற்ற இலட்சிய மாப்பிள்ளை எங்கே வரப்போகிறான்?

பணம், வீடு வாசல், நகைநட்டு என்று அள்ளிக் கொடுத்து அவள் கனவு காணும் மாப்பிள்ளையைத் தேடிக் கட்டி வைக்க இஸ்மாயில் குடும்பத்திற்கு வக்கில்லை.

முனிராவின் இலட்சியக் கனவு எங்கே இந்தக் காலத்தில் நிறைவேறப் போகிறது?

முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டால் நடக்கிற காரியமா?..

முந்தானைச் சீலையைப் பாயாக விரித்து மல்லாந்து படுத்துக்கொண்டு வீட்டின் முகட்டை விரக்தியோடு நோக்கிக் கொண்டிருந்தாள், அந்த அப்பாவித் தாய்!

(யாவும் கற்பனை)



உன்னைப் பற்றிய என் அபிப்பிராயங்கள்
என்னுள்ளே வளர்த்தெடுக்கும்
உலகில் மிச்சமிருக்கும்
ஏனைய ஆண்களின்
மோசமான பிம்பங்களை.

- சல்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதல் பரிசுக் கவிதை

NIPU அமுது படைப்பாற்றல் போட்டி

# ஒற்றை நட்சத்திரம்

சமீலா யூஸுப் அலி

பனை மரங்களிடையே,
நிலவு
முகிழ்க்கிறது!

.........
எங்கோ
ஒரு அழுகுரல்...
உயிர் பிழிகிறது!

இருளின் மடியில்...
எப்போதேனும்
எரியும்,
உன்
ஞாபக வெளிச்சத்தில்
குளிர் காய்கிறேன்!

பட்டுப்போன
இந்த
பாலை அழுகிறது...
ஒரு
பனித்துளிக்காய்!

யுத்தத்தின் சாலையில்
இளமைக் கனவுகள்
நீர்க்குமிழிகளாய்...
.........
பீரங்கி முனையில்
வானம்பாடிகள்
கானம் பாடலாமா?
.........
நிலவு முகிழ்க்காத
வானமும்....
மழைத்துளி சிலிர்க்காத
மேகமும்....
அமைதி துளிர்க்காத
தேசமும்
நீ இல்லாத
நானும் ....
.........

துப்பாக்கியைத்
தூக்கும் போதெல்லாம்
நினைவுக்கு வருவது,
தொலைத்து விட்ட
தேசமும்....
எனக்குள் மழை பெய்த
உன்
நேசமும் தான்!

ஓரத்தில்
கண்சிமிட்டும்
'ஒற்றை நட்சத்திரம்'
என்
கண்களை உறுத்துகிறது!

உன்
கண்களின் கேள்விக்கு
என்
அன்பிடம் விடையில்லை!

யுத்தத்தின் புத்தகத்தில்,
'காதல்' என்பது...
தோட்டாவும் தோட்டாவும்
தொட்டுக் கொள்ளும்
கணங்கள் தான்!

எரிந்து கொண்டிருக்கும்
இனவாதத் தீ
என்
உணர்வு வேர்களில்
நீரூற்றுகின்றது!

மூங்கிலின் சங்கீதம்...
மேகத்தில் பனித்துளி...
.........
போருக்கு
புதுக்கவிதை புரியாது!

இனியவளே!
என்
உயிரின் முகவரியே!
உன் கனவுகளை
புதைத்து விடு!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கப்பற் கொள்ளை

சித்தப்பா செத்துப்போனார். இனி மேல் சாய்மனைக்கதிரை வெறுமையாய் இருக்கும். சிகரெட் புகையை வளையம் வளையமாக பார்க்க முடியாது. சிறுகதை எழுத்தாளர்களை விமர்சித்து பேச முடியாது. நான் எப்போதும் சித்தப்பாவைப் பார்த்துப் பயமடைபவனாகவே இருந்தேன். என் சிறுவயதில் அவர் சிகரெட் பிடிப்பதை முதன்முதலில் பார்த்ததில் இருந்து அவரைக்கண்டு பயந்தேன். அவர் அப்போது நெருப்புத்தின்னும் மனிதனாகவே எனக்கு காட்சியளித்தார். இளமைப் பருவத்தில் என் படைப்புக்களைக் கடுமையாக விமர்சிக்கும் ஒருவராக இருந்தார். இனி நெருப்புத்தின்னும் மனிதனையும் பார்க்க முடியாது. இரக்கமற்ற விமர்சகனையும் பார்க்க முடியாது.

''சித்தப்பா! என்ர சிறுகதை பேப்பரில் வந்திருக்கு''

நான் எனது முதல் சிறுகதை பத்திரிகையில் பிரசுரமானபோது மிகப்பெரிய சந்தோசத்தோடு அவரிடம் ஓடிப்போய் சொன்னபோது அவர் எந்த உணர்ச்சியையும் முகத்தில் காட்டாதவராக ''உன்னால் சிறுகதை எழுதமுடியாதே'' என்றார்.



ஊதிவைத்திருந்த பலூனில் ஊசி குத்திவிட்டார் சித்தப்பா. நான் படாரென உடைந்தேன். ''எங்கே கொண்டு வா பாப்பம்'' அவர் வேண்டாவெறுப்பாகக் கேட்பதுபோல் இருந்தது. நான் பத்திரிகையை அவர் கையில் கொடுத்தேன். அவர் என் சிறுகதையின் தலைப்பை கொஞ்சம் உரத்து வாசித்தார். ''எல்லை...'' வாசித்துவிட்டு என்னைப் பார்த்துக் கேட்டார். ''இதென்ன எல்லை.. வேலிப்பிரச்சினையா?''

இம்முறை பலூன் உடையவில்லை.

ஏற்கனவே உடைந்து போனதை ஊதக்கூடியதாக முடிச்சுப்போட்டு நான் ஊதிவைக்கவில்லை. எனக்குத்தெரியும் சித்தப்பா திரும்பத்திரும்ப ஊசியால் குத்துவார் என்பது. நான் அவர் கேள்விக்கு பதில் சொல்லாமல் மெல்லச் சிரித்தேன். அவர் கதையை வாசிக்கத் தொடங்கினார்.

நான் அவருடைய வாயைப்பார்த்துக் கொண்டிருந்தேன்.

''இதைச் சிறுகதையாக ஏற்றுக்கொள்ள முடியாது''. கதை வாசிப்பதை இடையில் நிறுத்திவிட்டு சொன்னார். நான் ஏன்? என்பதைப்போல அவர் முகத்தை பார்த்தேன். நீ திருமணமாகாதவன் திருமண வாழ்க்கையைப் பற்றி உன்னால் சொந்த அனுபவமாக்க முடியாது. நீ திருமணம் புரிந்தவனாக இருந்திருந்தால் உன்னால் சொந்த அனுபவத்தில் எழுதியிருக்க முடியும். மற்றவன் அனுபவத்தில் கதை எழுதமுடியாது. உனக்கு நான் ஒரு உதாரணம் சொல்கிறேன்.

எனக்கு நெருப்பு சுட்டதைப்பற்றி நான் விபரிக்கும் விதமும் எனக்கு நெருப்பு சுட்டதைப்பற்றி நீ விபரிக்கும் விதமும் உணர்வூரீதியாக நோக்கும்போது நிறைய வித்தியாசம் இருப்பதை உணர்கிறாயா?'' நான் ''ஓம்'' என்று தலையாட்டினேன்.

அப்ப எனக்கு நெருப்புச் சுட்டதைப் பற்றி நானோ அல்லது நீயோ அச்சொட்டாக உணர்வுகளை வெளிப்படுத்தி எழுதமுடியும் எண்டு நினைக்கிறாய்? அவர் மீண்டும் கேட்டார்.

''என்னைவிட உங்களால்தான் எழுத முடியும்'' என்றேன் நான்.

அதுமாதிரித்தான் இதுவும். நீ திருமணம் செய்து மணவாழ்வின் அனுபவங்களை சுயமாக அனுபவிக்கும்போதுதான் மணவாழ்வை மையமாக வைத்து உன்னால் நல்ல சிறுகதையை எழுத முடியும் என்றார் கடுமை நிறைந்த குரலில்.

என் மனம் சோர்வடைந்தது. ஏன் இவரிடம் சிறுகதை பிரசுரமானதைக் காட்டினேன்? என்றிருந்தது எனக்கு. இனிமேல் சிறுகதை பத்திரிகையில் பிரசுரமானால் இவரிடம் காட்டக்கூடாது என்று சொன்னது என் மனம்.

''உன்னுடைய சொந்த அனுபவத்தை ஒருக்கால் சிறுகதையாக்கிப் பார். எவ்வளவு திறமாக எழுதலாம் எண்டது உனக்கே அனுபவத்தில் தெரியும். அதை விட்டுட்டு மற்றவன்ர அனுபவத்தை சிறுகதையாக்க வெளிக்கிடாதை. அது உன்னை முன்னேற விடாமல் தடுத்துப்போடும்''

அவர் மீண்டும் கடுமையான குரலில் சொல்லிக்கொண்டு சாய்மனைக் கதிரையை விட்டு எழுந்து எதுவும் சொல்லாமல் உள்ளே போனார்.

நான் எழுந்து வந்துவிடலாமா? எனச் சிந்தித்தேன்.

பத்து நிமிடங்கள் அமைதியாய் கழிந்திருக்கும். பதினோராவது நிமிடம் நான் குரலினை உயர்த்தி ''சித்தப்பா! நான் போட்டு வாறன்'' என்றேன்.

''இரடாப்பா வாறன். அவசரப்படாதை'' அவர் வீட்டுக்குள்ளிருந்து குரல் கொடுத்தார். நான் அமைதியானேன். மேலும் சில நிமிடங்கள் கழிந்த பின்னர் சில பத்திரிகை நறுக்குகளோடு வந்து மீண்டும் சாய்மனைக் கதிரையில் சாய்ந்து கொண்டு அவற்றை ஒவ்வொன்றாய் பிரித்துப் பிரித்து கவனமாகப் பார்த்து ஒழுங்குபடுத்தினார்.

- இராகவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இதெல்லாம் நான் பொடியனா இருக்கேக்க எழுதிப் பத்திரிகையில் பிரசுரமான கதையள். இதெல்லாமல் எனக்கு நடந்த அனுபவங்களின்ரை பிரதிபலிப்பு. நான் நேரடியாக அனுபவிச்சவை. எனக்கு நெருப்புச் சுட்டதைக்கூட வடிவா எழுதியிருக்கிறன். நான் கலியாணம் செய்தாப் போலதான் மணவாழ்க்கையைப் பற்றி எழுதியிருக்கிறன்.

## "நீ இலங்கையர்கோன் எழுதிய 'வெள்ளிப் பாதசரம்' வாசிச்சிருக்கிறியோ?"

அதையும் வாசிச்சுப்பார். நான் நினைக்கிறன் மணவாழ்க்கையைப் பற்றி ஒரேயொரு சிறுகதைதான் எழுதியிருக்கிறன். இதுதான் நான் எழுதின கடைசிச் சிறுகதை. அதுக்குப் பிறகு என்னால எழுதேலாமப் போச்சு. நான் எதையும் அனுபவிச்சாலும் அனுபவிக்காத மாதிரியே இருக்குது. சுருக்கமாச் சொன்னால் நெருப்புச்சுடுறது எனக்குத் தெரியும். ஆனால் சூட்டை என்னால உணரமுடியாமல் இருக்கு. உணர்ச்சியில்லை. நான் ஒரு சடப்பொருளாயே இருக்கிறன்'' சொல்லி நிறுத்திவிட்டு நீண்ட பெருமூச்சு விட்டார்.

எனக்கு அவர் சொன்னது எதுவும் விளங்கவில்லை. அமைதியாக இருந்தேன். அவர் திரும்பவும் சொன்னார். ''நீ வளர்ந்தபிள்ளை இந்தக் கதையள ஒருக்கா வாசிச்சாலே விளங்கும் எண்டு நினைக்கிறன். அப்பிடி விளங்கேல்ல எண்டாத் திருப்பித் திருப்பி வாசி. கொஞ்சமெண்டாலும் விளங்கும்''.

அப்பிடி என்ன விளங்காதமாதிரி இதில எழுதியிருக்கப் போறார் என்று என்னை நானே கேட்டுக்கொண்டு அவர் சொன்னதற்கு தலையாட்டினேன்.

''நீ இலங்கையர்கோன் எழுதிய 'வெள்ளிப் பாதசரம்' வாசிச்சிருக்கிறியோ?'' சித்தப்பா கேட்டார். வாசிக்கவில்லை என்பதற்கு அடையாளமாக இல்லை என்று தலையாட்டினேன். ''அதைத்தான் நீ முதல்ல தேடி வாசிக்கவேணும். அந்தக் கதையில வாற ஓரிருவரிகள்தான் அந்தக் கதையின்ர இதயத்துடிப்பு. எனக்கு இப்பவும் ஞாபகத்தில் இருக்கு.

எப்பவோ வாசிக்க அந்த கதையின்ர வசீகரவரிகள்... ''கொஞ்சம் கவனமாய் வாறதுக்கென்ன? உனக்கு ஆட்டம் மெத்திப் போச்சு. ஊதாரி நாய்!'' மறுகணம் செல்லையா தன் நாக்கைக் கடித்துக் கொண்டான்..... செல்லையாவின் இடக்கை அவன் மனைவியின் இடையை நோக்கி நகர்ந்தது... அவனுடைய மனம் வல்லைவெளிபோல் விரிந்தது. மெய்மறந்து ஒரு மகிழ்ச்சி அவனை ஆட்கொண்டது. தன்குரலை எழுப்பி ''ஞானகுமாரி'' என்ற தேவகாந்தாரி ராகப் பாட்டைப் பாடினான்... அவனுக்கு பசியில்லை. தாகம் இல்லை. தூக்கம் இல்லை. எத்தனை கொள்ளிவாய்ப் பிசாசுகள் சேர்ந்தும் அவனை என்ன செய்துவிடமுடியும்?..''

நான் சொன்ன இந்த வரிகள் எல்லாம் நீ இந்தக் கதையை வாசிச்சால்தான் உனக்கு முழுக்க விசயம் விளங்கும். ஆனால் குடும்ப வாழ்க்கையில் நீ இருக்கேக்க வாசிச்சால் நீயே இந்தக் கதையின்ர பாத்திரமா மாறி



விடுவாய். நான் என்ர அனுபவத்தை உனக்குச் சொல்லுறன்.

நான் குடும்ப வாழ்க்கையில் நுழைஞ்சாப் போலதான் இந்தக் கதையை வாசிச்சனான். உண்மையிலேயே நான் செல்லையாவாக வே இருந்தனான் இந்தக் கதையை வாசிச்சு முடியும் வரைக்கும். ஆனால் இப்ப அந்தக் கதையை வாசிக்கேக்குள்ள என்னால செல்லையாவாய் இருக்க முடியுமோ? தெரியேல்ல'' சொன்னபோது அவர் கண்கள் கலங்கியிருந்தன.

அவர் தந்த கதைகளை வீட்டுக்கு வந்து ஒவ்வொன்றாய் வாசித்தேன். அதிலே ''என்னை நெருப்பு சுட்டபோது...'' என்றொரு கதை என்னைக் கவர்ந்து விட்டது. வார்த்தைகள் வசீகரமாய் இருந்தன. ஆனால் அந்தக்கதையின் கருப்பொருள் என்னவென்பது கொஞ்சம் விளங்கியும், கொஞ்சம் விளங்காமலும் இருந்தது. ஏனைய கதைகளிலும் சில என்னைக் கவர்ந்தன. ஆனால் முழுமையாக விளங்கிக் கொள்ள முடியவில்லை. திரும்பவும் ஒரு தடவை 'என்னை நெருப்பு சுட்டபோது...' என்ற கதையை வாசித்தேன்.

''நான் நெருப்பை தீண்டியிருக்ககூடாது. பாரதி கவிஞன் அவனால் கற்பனைச் சிறகடித்துப் பறக்க முடியும். தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலாவைத் தீண்டும் இன்பம் தோன்றுதல் அவனுக்கு மட்டும் சாத்தியம். நான் பாரதியில்லை. என்னால் கற்பனைச் சிறகடித்துப் பறக்க முடியாது. தீக்குள் விரலை வைத்தபோது நந்தலாலாவைத் தீண்டும் இன்பம் தோன்றவில்லை. சுள்ளெனச் சுட்டது. தோல் வெந்து கருகி எனக்கே மணத்தது. விரலை மெல்லமெல்லவே எடுக்க முடிந்தது. அதற்குள் எல்லாம் முடிந்துவிட்டது. மழைநீரும் கைவசம் இல்லை. மைப்போத்தலும் இல்லை. கொப்புளம் மெல்லிய சாம்பல் நிறத்தில் முட்டைவடிவில் தோன்றிவிட்டது. நிரந்தர எரிவு, உயிர்போகிற எரிவு. எனக்கது தெரிந்திருக்க வேண்டாம். நீ சொல்லியோ அல்லது யார் சொல்லியோ...."

கதையை வாசித்துக் கொண்டிருந்தபோது ''நிச்சயமாக உன்னால் இவ்விதம் எழுத முடியாது'' என்றது உள்மனம்.

சித்தப்பா வியத்தகு மனிதராகப் புன்னகைத்துக் கொண்டிருந்தார். அப்போதுதான் அனுபவப்படாமல் வார்த்தைகளால் கதையை வசீகரிக்க முடியாது என்பதுணர்ந்தேன். சித்தப்பா சொன்ன கருத்துக்கள் எல்லாம் கொஞ்சமும் மறுதலித்துரைக்க முடியாதவை. வெறுங்கற்பனை நல்ல கதையைப் பிரசவிக்கும் என்பது சந்தேகத்திற்குரிய விடயந்தான். கற்பனையோடு அனுபவம் கலக்கின்றபோது வார்த்தைகளுக்கு வரட்சி நிலவுவதில்லை. மழைத்துமிபோல தொடர்ந்து வார்த்தைகள் வந்து விழுந்துகொண்டேயிருக்கும் என்பதை உணர்ந்துகொள்ள எனக்கு அதிக காலம் பிடித்தது.

* * * * *

''தங்கச்சியவையின்ர எதிர்காலத்தை நினைச்சுப்பார்'' அம்மா சொன்னா. நான் அமைதியாக இருந்தேன்.

''இருபத்தைந்து லச்சம் கேக்கினம். பெட்டையும் நல்ல சிவப்பி வடிவானவள். தேப்பன் டொக்ரர். தாய் ரீச்சர். பெரிய இடம். உன்ரை படிப்பைத் தொடரவும் வசதி. மூத்தவள் சுகந்திக்கு வாற சித்திரையோட இருபத்தி நாலு முடியுது.




*...அங்கு எனக்கென*
*ஓர் பிரபஞ்சம் உருவாகும்*
*அப்போது உயிர்பெறும்*
*எனக்கான வரிவடிவங்களுடன் கூடிய*
*என் மொழி.*
*அதன் பின்*
*தேமல் படர்ந்த எவனாயினும்*
*என்னோடு உரையாடட்டும்*
*அப்போது கூறுகிறேன்*
*பதிலை,*
*என் மொழியில்;*
*என் ஆதித்தாயின்*
*பெண் மொழியில்.*

*அதுவரை நீ காத்திரு.*

- ஆழியாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவள் சுமதிக்கு வாற புரட்டாதியோட இருபத்திரண்டு முடியுது. நீ ஓமெண்டு சொன்னால் அவளவை இரண்டுபேரையும் வடிவாக் கரைசேர்த்துப் போடலாம். அப்பா வின்ர பென்சன் முச்சுவிடக்காணாது. உன க்கே தெரியும் இங்க சேமிப்பெண்டு பெரிசா ஒண்டுமில்லை. எல்லாம் உங்கள் மூண்டு பேரின்ரை படிப்புக்கு செலவழிச்சுக் கொண் டிருக்கவே காணாமல் இருக்கு" அம்மா விடாமல் பொழிந்தாள்.

நான் அமைதியாய் இருந்தேன். சுகந்தி யன்னலூடாக என்னையும் அம்மாவையும் எட்டிப்பார்த்துவிட்டு மறைந்தாள். எல்லோ ரும் என் மௌனம் கலைய வேண்டும் என் பதில் ஆவலாய் இருப்பதை புரிந்துகொள்ள முடிந்தது. ''உனக்கு கிளினிக்கும் போட் டுத் தாறதா சொல்லியிருக்கினம்". என் மௌனம் கலையும் வரை அம்மா விடமாட் டாள் என்றே தோன்றியது.

ஆனால் என்னால் மௌனத்தைக் கலை க்க முடியவில்லை. சீதனம் வாங்கிக்கொ ண்டு கலியாணம் செய்தால் அந்த வீட்டில் எனக்கு மரியாதை இருக்குமா? என்னை விலைக்கு வாங்கிய மனிதனாகவே அவர் கள் கருதுவார்கள். அவர்களுக்கு பணிந்து நடக்க வேண்டும் என்ற மனநிலையே எப்போதும் என்னிடம் மேலோங்கி நிற்கும். சுயமரியாதை கேள்விக்குறியாகும்...

ஆனால் அவளை நேரில் பார்க்க நேர்ந்த போது என் மனநிலை முற்றிலும் மாறிப் போய் விட்டது. செல்வச்சந்நிதி தீர்த்தத்தில் அவளைப் பார்க்க நேர்ந்தது. எந்தவிதப் பூசல் மினுக்கங்களும் இல்லை. அப்படியிரு ந்தும் எவ்வளவு வசீகரமானவளாக இருந் தாள் அவள். குடும்பத்தோடு வந்திருந்தாள். நான் சிவகாந்தனோடு போயிருந்தேன். ''மச்சான் ரேவதி உன்னை வடிவாப் பாக் கிறாள். என்ன இருந்தாலும் வருங்காலக் கணவன் எல்லோ" சிவகாந்தன் காதைக் கடித்தான். நான் என்னையறியாமல் வெட் கப்பட்டேன்.

''டேய் சும்மாயிரடா வெங்காயம்". அவன் சொன்னது எனக்குப்பிடிக்கவில்லை என்பது போல் அவனைக் கடிந்து கொண்டேன். ஆனால் அவன் திரும்பத் திரும்ப அவ்விதம் சொல்ல வேண்டும் போலிருந்தது. கடிந்து கொண்டதும் வருத்தமாக இருந்தது. ''டேய்! எனக்கு இதில விருப்பமில்லை மச்சான். வீட்டுக்காரர்தான் விடாப்பிடியாய் நிக்கினம். நீயும் எனக்கு எரிச்சலைக் கிளப்பாதை" அவனைச் சமாளிக்கும் வகையில் இவ்வி தம் சொல்ல வேண்டியிருந்தது.

''நீ எந்த உலகத்திலயடா மச்சான் இருக் கிறாய்? கரும்பும் தந்து கைக்கூலியும் தரே க்குள்ள மடையன் மாதிரிக் கதைக்கிறாய். நான் எண்டா உடனும் ஓம் எண்டு சொல் லிப் போடுவன்" சிவகாந்தனின் குரலில் ஏக்கமும் கலந்திருப்பதாகத் தோன்றியது. நான் ''மாட்டன்" என்று சொல்லிவிட்டால் அவளைச் சிவகாந்தனுக்கு நிச்சயம் பண் ணிவிடுவார்களோ என்று புதிய பயம் ஒன்று எழுந்தது.

ரேவதியை பார்த்தேன். நான் பார்ப்பது தெரிந்தோ என்னவோ தலைகுனிந்து நின்றி ருந்தாள். மயில்பச்சை நிறத்தில் பாவாடை தாவணி. அவள் நிறத்திற்கு எடுப்பாக இருந் தது. அவள் எந்தக் கோணத்திலும் அழகா கவே தெரிவாள் என்று தோன்றியது. அவ ளுடைய தகப்பன் என்னைப் பார்த்து புன்ன கைத்தார். மொத்தக் குடும்பமுமே என்னை ஒரு முக்கிய பிரமுகரைப் பார்ப்பதுபோல மரியாதையோடு நோக்கியதை உணர்ந்தேன். நான் ஒரு மகாராஜாவாகி விட்டதைப்போல எனக்கு தோன்றியது. நிரந்தரமாகவே மகா ராஜாவாகிவிட்டால்!..." என்ற எண்ணம் மனத் தில் தோன்றி என்னை இன்பக்கடலில் மிதக்க விட்டது.

* * *

அம்மா மீண்டும் ஆரம்பித்தாள். ''தம்பி! தங்கச்சியவையின்ர எதிர்காலத்தை நினை ச்சுப்பார்...."

அவள் அவ்விதம் ஆரம்பிக்கமாட்டாளா எனக் காத்திருந்தேன் நான். அது எனக்கு நல்ல சந்தர்ப்பமாக அமைந்தது. ''காற்று வருகிறது தூற்றிக்கொள்" என்றது மனம். ''அம்மா எனக்கிதிலை விருப்பமில்லைத் தான் எண்டாலும் தங்கச்சியவையின்ர எதிர் காலந்தான் முக்கியம். நீங்கள் உங்கடை விருப்பப்படியே செய்யுங்கோ" ஒரு தியாகி போல் என்னைக் காட்டிக் கொண்டேன்.

வீட்டினருக்கு தலைகால் தெரியாத புளு கம். எனக்குந்தான். இதன்பின்னர் 'ரேவதி' வீட்டில் நான் மகாராஜாவானேன். அந்த அனுபவம் ஒரு சுகானுபவமாக இருந்தது. போதையில் மிதந்தேன். அவளையும் என்





அக்கினிப் பிரவேசம்
என் சத்தியத்தை
நிருபிக்கவல்ல,
நீ தொட்ட
கறைகளைக் கழுவ.

*- கனிமொழி*

னையும் பார்த்தவர்கள் பொறாமைப்பட்டதை யும் ஆச்சரியப்பட்டதையும் உணர்ந்தேன். இதைப்போலத்தான் சித்தப்பாவையும் சித்தி யையும் பார்த்து மற்றவர்கள் பொறாமைப் பட்டதையும் ஆச்சரியப்பட்டதையும் எனக்கு சொல்லியிருக்கிறார். அப்படிச் சொன்னபோது சந்தோஷம் வெளிப்பட்டதோ வேதனை வெளிப்பட்டதோ என்னால் உணரமுடியவில் லை. எனக்கு ரேவதியுடன் ஏற்பட்ட சுகானு பவமும் சித்தப்பாவுக்கு சித்தியுடன் ஏற்பட்ட சுகானுபவமும் ஒன்றாகவே இருந்தது என நான் நினைத்துக் கொண்டேன்.

ஆனால் காலப்போக்கில் அந்த சுகானுப வம் கேள்விக்குறியானபோது நான் கண் கெட்ட பிறகு சூரியனை கைகூப்பித் தொழு வதற்கு விரும்பியவனானேன். தென்னைமரம் என்பது தூரத்தில் இருந்து ரசிப்பதற்குரிய ஒன்றே என உணர்ந்து கொண்டேன்.

உடனே 'தென்னைமரம்' என்று தலைப் பிட்டு சிறுகதை எழுதினேன். வார்த்தைகள் உணர்ச்சியோடு தடையில்லாமல் வந்து விழுந்தன. ''கண்ணுக்கெட்டிய தூரத்தில் தெரிந்தது தென்னை மரம். பார்க்க எவ்வ ளவு அழகாயிருந்தது. கீற்றுக்கள் பரப்பி பசுமையோடு கொத்துக் கொத்தாய் குலை கள் தாங்கி கண்ணுக்கு குளிர்ச்சியாய் இரு ந்தது. அழகிலே சில கணம் வாய்பிளந்து நின்றேன். அப்படியே விலகிப் போயிருக்க வேண்டும். ஆனால் அழகின் மோகம் என் னைத் தென்னையின் பால் இழுத்துச் சென் றது. அருகே மிக அருகே சென்றேன். கண் ணுக்கு குளிர்ச்சியளித்த தென்னை மரத் தைக்காண முடியவில்லை. கண்கள் வரட்சி யடைந்தன. தண்டிலே கறையான் பிடித்தி ருந்தது. அங்கங்கே நத்துக் கடித்திருந்தது. வட்டிலே குப்பை கூழங்களின் தேக்கம். ஓவியங்களில் காணும் தென்னை மரத்தைக் கூடக் காணமுடியாமல் போயிற்று. என் நிலை பரிதாபத்திற்குரியதாயிற்று. நான் தவறிழைத்துவிட்டேன். தூரதரிசனத்தோடு திரும்பிப்போயிருக்க வேண்டும்...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் கனகாலத்திற்கு பிறகு ஒரு நல்ல சிறுகதையை வாசிச்சிருக்கிறன்'' சித்தப்பா மனந்திறந்து முதல் தடவையாகப் பாராட்டினார். ஆனால் அப்போது நான் மகிழ்ச்சியடையும் நிலையில் இருக்கவில்லை.

''எப்பிடியிருக்கிறியள் எல்லாரும் சுகம் தானே?'' திரும்பிப் பார்த்தேன். வசந்தியக்கா சிரித்தபடி நின்றிருந்தார்.

''ஓமோம் எல்லாரும் சுகமாய் இருக்கிறம்'' என்றேன் சிரித்தபடி.

''உம்மடை படிப்பு முடிய எத்தினை வரிசம் இருக்கு?''

''இன்னும் இரண்டு வரிசம் இருக்கு.''

''அது சரி நீங்கள் எப்பிடியிருக்கிறியள்? அம்மா, அப்பா, தம்பியவை எப்பிடியிருக்கினம்.''

''சுகமாய் இருக்கிறம்.. நாங்கள் முந்தி இருந்த இடத்தில் இப்ப ஆர் இருக்கினம்?''

''இப்ப இடம்பெயர்ந்த ஆக்கள் இருக்கினம். அது சரி உங்கடை அவர் எந்த நாடு? எத்தினை பிள்ளையள்?''

''அவர் தம்பி முந்தி பிரான்சில இருந்தவர். இப்ப இலண்டனில் இருக்கிறார். இரண்டு பிள்ளையள். மூத்தவனுக்கு ஏழுவயது. இளையவனுக்கு அஞ்சு...'' உரையாடல் தொடர்ந்தது. நான் திரும்பிப் பார்த்தேன்.

ரேவதி சந்தைக்கு வெளியே வந்து காய்கறிக்கூடையை வைத்துவிட்டு என்னைப் பார்த்தபடி நின்றிருந்தாள். எனக்கு நெஞ்சு 'பக்' என்றது. ஒருவித பய உணர்வு எழுந்தது. கூடவே ஏன் பயப்பட வேண்டும்? என்ற கேள்வியும் எழுந்தது.

''சரி வசந்தியக்கா எனக்கு நேரமாச்சு. என்ர அவவும் சந்தையில சாமான் வாங்கிப் போட்டு என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறா. நான் போட்டுவாறன். வசதியெண்டா வீட்டை ஒருக்கால் வந்திட்டுப் போங்கோவன்'' என்றபடியே சைக்கிளைத் திருப்பினேன்.

''யாரவள்?'' ரேவதியின் முதல் கேள்வியே கோபக்கொதிப்போடு வந்து விழுந்தது. ''என்ன ரேவதி மரியாதையில்லாமல். அவ முந்தி எங்கடை வீட்டுக்கு பக்கத்தில இருந்த வசந்தியக்கா கனகாலத்துக்குப் பிறகு சந்திச்சதால...'' நான் முடிக்கு முன்பே ''முன்பின் தெரியாதவருக்கெல்லாம் நான் மரியாதை குடுக்க வேணுமோ? நான் அரை மணித்தியாலமா கால்வலிக்க இந்த வெய்யில்ல நிண்டு காயுறன். நீங்கள் கனகாலத்துக்கு பிறகு சந்திச்சவளைக் கொஞ்சிக் கொண்டு நில்லுங்கோ'' அவள் மீண்டும் வெடித்தாள். எனக்கு இதயம் கிழிபட்ட வேதனை எழுந்தது. கூடவே அவளை அறையலாம் போலிருந்தது.

அடக்கிக் கொண்டேன். நானாகவே காய்கறிக் கூடையை எடுத்துக் கேன்டிலில் மாட்டிவிட்டு அவள் சைக்கிளில் ஏறுவதற்காக காத்திருந்தேன். அவள் முன்னுக்கு ஏறாமல் பின் கேரியரில் ஏறிக்கொண்டாள். எனக்கு அந்த இடத்திலிருந்து நகர்ந்துவிட வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி நின்றது.

எல்லோரும் எங்களையே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். புறப்பட்டோம். அவளும் நானும் வழிநெடுகிலும் ஒரு வார்த்தையேனும் பேசிக்கொள்ளவில்லை.

என்னவோ தெரியவில்லை. சித்தப்பாவின் நெருப்புச்சுட்ட கதையை வாசிக்கவேணும் போல் இருந்தது. எடுத்து வாசித்தேன். கண்கள் பனித்தன. கதையே நல்ல அனுபவமாக மாறி என்னை உணர்ச்சியின் வசப்படுத்தியது. மூக்குளைந்து தும்மியது. ''அச்சும்...''

''வசந்தியக்கா நினைக்கிறாவாக்கும்'' ரேவதியின் குரல் கெட்டது.

''ஏன் ரேவதி இப்பிடி என்ரை மனத்தைப் புண்படுத்திறீர்?'' நான் மெல்லக் கேட்டேன்.



***அவள் உழைத்த காசில்,
தினம் குடித்துவிட்டு வந்து
அவளை அணைக்கும் கணவனை
பத்தினிமார் வரிசையில் இடமின்றி
போகுமோ என நிதம்
பொறுத்துக் கொள்வாள்.***

**கனிமொழி**

''நான் ஒருத்தரின்ரை மனத்தையும் புண்படுத்தேல்ல. உள்ளதைச் சொன்னனான்'' அவள் மீண்டும் தாக்கினாள்.

நான் மௌனமானேன்.

* * *

எனக்கு அதை எடுத்துப்பார்க்க வேண்டும் போலிருந்தது. 'ச்சீ! இதென்ன அநாகரிகமான வேலை' வேண்டாம். நான் தேடிய பொருள் இலாச்சியில் இருக்கிறதா என்பதை மட்டும் கவனிப்போம் என்று உள்மனம் தடுத்தாலும் அதைப்பார்க்க வேண்டும் என்ற ஆவல் மேலோங்கியது. 'மற்றவர் டயறியைப் பார்ப்பது கேவலமான வேலை' என்ன மற்றவர் டயறி. ரேவதி என் மனைவி. அவளின்ர டயறியை நான் பாக்கிறது அப்பிடியென்ன கேவலம்? அதைப்பார்க்கத்தான் வேண்டும். பார்த்தேயாக வேண்டும்'' இறுதியில் தோற்றது என் உள்மனம்.

டயறியை எடுத்துப் புரட்டத் தொடங்கினேன். எல்லாப் பக்கங்களிலும் ''விஜிதரன்'' என்ற பெயர் வரிக்கு வரி எழுதப்பட்டிருந்தது. ஒரு பக்கத்தில் எழுதியிருந்த வரிகள் என்னை நிலைதடுமாற வைத்தன. ''விஜி! முதல் காதலும் முதல் முத்தமும் மறக்கமுடியாதவையடா...!'' தொடர்ந்து புரட்டினேன். டயறியின் பின்பகுதியில் ஒருநாளில் ''இருவரும் உணர்ச்சிவசப்பட்டு விட்டோம். எனக்கு நீ - உனக்கு நான் என்று நாங்களே தீர்மானித்த பிறகு இதில் என்ன தவறு இருக்கிறது'' என எழுதப்பட்ட வரிகளை வாசித்தபோது என் தலையில் இடி இறங்கியது. டயறியை கைகள் நடுங்க எடுத்த இடத்திலேயே வைத்தேன். இதயம் பலமாக அடித்தது. கடுமையாக வியர்க்கத் தொடங்கியது. தலை சுற்றியது. அருகில் இருந்த கதிரையில் தட்டுத்தடுமாறி உட்கார்ந்தேன்.

* * *

சித்தப்பா ஹோலில் கிடத்தப்பட்டிருந்தார். முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லை. சாதாரண மனிதர்களாயிருந்தால் அவர்களின் முகத்தில் கடைசி நேரத்தில் மரணத்தைக் கண்டு பயந்த அடையாளமேனும் தென்படும். ஆனால் சித்தப்பா உணர்ச்சிகளைக் கல்லாக்கி நெஞ்சில் அடக்கி வைத்திருந்தவர்.

நானும் அப்பிடித்தான் மரத்துப் போனவன். இனிக் கடமைக்காக வாழ்ந்து மரணம் வரும் போது பயமடையாமலும் சந்தோசப்படாமலும் அதை ஏற்றுக்கொண்டு என் அத்தியாயத்தை நிறைவுசெய்து கொள்ள வேண்டியதுதான். சித்தி அழுதாள். கதறிக்கதறி அழுதாள். அவளும் தன் கடமையைச் செய்து கொண்டிருந்தாள். ரேவதியும் அப்படித்தான் என் அத்தியாயம் முடியும்போது கதறிக் கதறி அழுவாள். அவளும் கடமையிலிருந்து தவறமாட்டாள். எனக்குத் தெரியும்.

சித்தப்பாவின் இறுதிப்பயணம் ஆரம்பமானது. அவரைச் சுமந்தவர்களில் நானும் ஒருவன். அவர் மனப்பாரம் என் தோள்களில் இறங்கியது.

* * *

சித்தப்பாவின் எட்டாம் நாள் காரியத்திற்கு நான் போனபோது அவர் மேசையில் எனக்கொரு கடிதம் எழுதி பாரம் வைத்திருந்தார். வாசித்தேன். ''அன்புடன் மகனுக்கு, என் இறுதி அத்தியாயத்தில் ஒரு கதை மட்டுமே எழுத எண்ணினேன். ஆனால் முடியவில்லை. தென்னை மரத்தைப் பற்றி எழுதிய உன்னால் இந்தக் கதையையும் எழுதமுடியும். நானும் நீயும் ஒரே உணர்ச்சியுடையவர்களாகி விட்டோம். எங்களிருவரையும் நெருப்புச் சுட்டபோது எங்களால் பாரதியாக இருக்க முடியவில்லை. எனவே எனக்காக இந்தக் கதையை எழுதி முடி. அப்போதுதான் என் ஆத்மா சாந்தியடையும்'' அவர் கதைக்கிட்டிருந்த தலைப்பைப் பார்த்தேன். ''கப்பற்கொள்ளை'' என்றிருந்தது. என்னையறியாமல் அவர் கடிதத்தில் கண்ணீர்துளிகள் விழுந்தன. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதுவன்கந்த சரதியல்

## வரலாறு செய்த குற்றம் 8

எம்.எச்.பதி-யுஸ்-ஸமான்

சிறையிலிருந்து தப்பிய சரதியல் உதுவன்கந்தைக்குத்தான் செல்வான் என்று எல்லோருமே எதிர்பார்த்தார்கள். ஆனால், அவன் அங்கு செல்லவில்லை. தன்னைப் பிடிப்பதற்கு உரிய ஏற்பாடுகளை பொலிஸார் உடனேயே செய்திருப்பார்கள் என்பது அவனுக்கும் தெரியும்.

சிறையிலிருந்து வெளியே வந்தவன் வெலுன் அப்புவை வழியனுப்பிவிட்டு வரும் வழியில் அகப்பட்ட மாட்டுவண்டியில் ஏறிக் கொண்டான். அது குருநாகலைக்குச் செல்வதாக வண்டிக்காரன் கூறினான். சரதியலுக்கும் அது நல்லதாகப்பட்டது.

குருநாகலைக்கு அடுத்த நாள் வந்து சேர்ந்த அவன் தனக்குப் பரிச்சயமான கலகெதர நகருக்கு அதுவும் கலகெதர சந்தியில் இருக்கும் தேநீர் கடைக்கு வந்து சேர்ந்தான்.

நடந்து களைத்து அலுத்துப்போன அவன் அக் கடையில் போய் நீட்டி நிமிர்ந்து படுத்து உறங்கினால் தன் களைப் பெல்லாம் போகும் என்று எண்ணிக் கொண்டவனாகவே அங்கு வந்தான்.

ஆனால் அவனை கடையே வரவேற்றது.

அந்தக் காலத்தில் அரேபியாவிலிருந்து முஸ்லிம் வர்த்தகர்கள் இலங்கைக்கு வந்து வாசனைத் திரவியங்கள், யானைத் தந்தம் போன்ற பொருட்களை இப்பொருட்கள் தாராளமாகக் கிடைக்கும் இடங்களுக்குச் சென்று வாங்கி, அரேபியாவுக்கு எடுத்துச் செல்லும் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இப்படி வரும் வியாபாரிகளில் இருவர் கோப்பி, ஏலம், கருவா போன்ற வாசனைத் திரவியங்களை வாங்குவதற்காக வேவுட, மாவத்தகம, நுகவெல, கலகெதர, கண்டி, ஹங்குரங்கெத்த போன்ற பகுதிகளிலுள்ள வியாபாரிகளிடம் சென்று வருவது வழக்கம்.

இப்படி வியாபாரத்திற்காக வரும் ஒவ்வொரு தடவையும் சில நாட்கள் கலகெதரயிலுள்ள தேநீர்க்கடையிலேயே தங்கிவிட்டுச் செல்வர். தங்குமிடம், சாப்பாடு எல்லாமே இங்கு இவர்களுக்கு வழங்கப்பட்டன.

அவர்கள் இங்கு கடனுக்குத்தான் சாப்பிடுவார்கள். தமது வியாபாரம் முடிந்து போகும்போது கணக்கு வழக்குகளைப் பார்த்து கடைக்காரருக்கு உரிய தொகையை கொடுத்துவிட்டுச் செல்வர்.

ஆனால் கடந்த மாதம்-

அப்படி வழமைபோல் வந்து ஒரு வாரத்திற்கு மேல் தங்கி உண்டு, குடித்து, உறங்கிவிட்டுச் சொல்லாமல் கொள்ளாமல் மாறிவிட்டார்கள். அவர்கள் கடைசியாகச் சென்று அடுத்தடுத்து இருதினங்கள் வராமல் போனபோதுதான் அவர்கள் தனக்குப் பணம் தராமலேயே கம்பிநீட்டி விட்டார்கள் என்ற செய்தி முதலாளிக்கு மண்டையில் உறைத்தது. பல இடங்களிலும் தேடிப் பார்த்து விட்டான். கையில் இருந்த பணமும் கரைந்ததுதான் மிச்சம்.

மொத்தமாக பணம் கிடைக்கப்போகின்றது என்று நம்பி பக்கத்து கடைகளிலெல்லாம் கடனுக்கு சாமான், சரக்குகளை வாங்கியே அவர்களுக்கு சாப்பாடு போட்டான் கடைக்காரன்.

இப்போது அவர்களுக்கு முன்னால் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த முடியாது அவமானப்பட வேண்டியதாயிற்றே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மானஸ்தனான அந்த கடைக்காரன் கவலைப்பட்டான். அவனுக்கு மாற்று வழிகள் எதுவுமே தென்படவில்லை. சித்தப்பிரமை பிடித்தவன் போலாகி விட்டான். கடையை இழுத்து மூடிவிட்டு வீட்டில் வந்து முடங்கி விட்டான்.

சரதியல் அங்கு வந்தால் அங்குதான் தங்கி, சாப்பிட்டுச் செல்வது வழக்கம்.

அவன்கூட சிலவேளைகளில் கடனுக்குச் சாப்பிட்டு விட்டுச் சென்றால் எப்போதாவது மீண்டும் அங்கு வரும்போதுதான் அந்தக் கடனை அடைப்பான். அவனாக கொடுக்கும்வரை அந்தக் கடைக்காரரும் எப்போதும் அவனை நச்சரித்தது இல்லை. பொறுமையாக இருப்பான். சரதியல் மீது அவனுக்கு அப்படி ஒரு நம்பிக்கை. நல்ல அபிமானம்.

அந்தக் கடைக்காரன் மீது சரதியலுக்கும் அனுதாபம் இருந்தது. பாடுபட்டு உழைப்பவன், நேர்மையாக பணம் சம்பாதிப்பவன். மக்களுக்கு வயிறார உணவு கொடுத்து அவர்களை திருப்திப்படுத்திய பின்னர் தானே பணம் வாங்குகிறான் என்று.

பூட்டிய கதவுகளைக் கண்ட சரதியல் முதலில் அதனை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் அக்கம் பக்கம் விசாரித்துவிட்டு, அந்த கடை முதலாளியைத் தேடி அவன் வீட்டுக்கே சென்று விசாரித்தபோதுதான் உண்மை புரிந்தது.

சரதியலுக்கு மிகவும் கவலையாகப் போய் விட்டது. ஒருவருக்கு அநீதி, அநியாயம், நடப்பதை அவன் சகித்துக் கொள்ளமாட்டான். அதுவும் பிச்சைக்காரனிடம் பணக்காரர்கள் வந்த சூரையாடி விட்டுச் செல்வதா? அவனுக்கு கோபம் தலைக்கேறி விட்டது.

அந்த அரபிக்காரன்கள் எங்கே நடமாடுவார்கள் என்று கேட்டுத் தெரிந்துகொண்டு அங்கெல்லாம் அவர்களைத் தேடி வெறியோடு சென்றான்.

அவர்கள் மாவத்தகம வேவுட பாதையில் உள்ள ஒரு தேநீர்கடையில் இருப்பதாக கேள்விப்பட்டு அங்கு விரைந்தான்.

அவர்களைக் கண்டவுடன் முதலாளி கூறிய அடையாளங்களின்படி அவர்களை எளிதில் இனங்கண்டு கொண்டான்.

அவர்களிடம் சென்ற அவன் ''நீங்கள் இருவரும் கலகெதர கடையில் தங்கி சாப்பிட்டுவிட்டு பணம் கொடுக்காமல் ஓடி வந்துவிட்டீர்களே இது நியாயமா?" என்று கேட்டான்.

''நீங்கள் இங்கு வியாபாரம் செய்யுங்கள். ஆனால் இப்படி ஏழைகளின் வயிற்றில் அடிக்கலாமா? உடனடியாக இப்போதே போய் முதலாளியின் கடனைக் கொடுத்துவிட்டு வாருங்கள்" என்று கூறினான்.

அதற்குள் ஒருவனுக்கு கோபம் மூக்கு நுனிக்கே வந்து விட்டது. ''நாம் அப்படித்தான் செய்வோம் அதைக் கேட்க நீ யார்?" என்றவாறு தம் செயலை நியாயப்படுத்தி பேசினான்.

சரதியல் அவர்களிடம் அந்த பதிலை எதிர்பார்க்கவில்லை. நியாயமான காரணம் எதுவும் கூறியிருந்தால் அதனை ஏற்றுக் கொள்ளும் மனநிலையிலேயே சரதியல் இருந்தான்.

ஆனால் அதற்குள் மற்றவன் கையை ஓங்கிவிட்டான். அவனை மடக்கி சரதியல் விட்ட குத்தில் அவன் தூரத்தில் வீசப்பட்டு விழுந்தான். மூக்குடைந்து இரத்தம் கொட்டியது.


அடுத்தவன் பெரிய தடியை தூக்கிக் கொண்டு வந்து ஒரே போடாக சரதியலின் தலையில் போட முயன்றான்.

அதற்குள் சரதியலின் கைத்துப்பாக்கி பேசிவிட்டது. துடிதுடித்து விழுந்தான் அந்த அரபி.

அடுத்தவன் தப்பித்தேன் பிழைத்தேன் என்று அந்த இடத்திலிருந்து ஓடித் தப்பி விட்டான்.

சுருண்டு விழுந்து கிடந்தவனின் நீண்ட அங்கியிலிருந்து ஒளித்து வைத்திருந்த பணத்தை தேடி எடுத்தான் சரதியல்.



... ... ...
*பெண்ணை*
*என்றும் பேதையாகவும்*
*ஆணை*
*வீரபுருஷ நாயகனாகவும்*
*நோக்கும் வரைக்கும்*
*எனது நேசமும்*
*பேதை ஒருத்தியின் நேசமாகவே*
*உனக்கும் தெரியும்.*
*அதை நான் விரும்பேன்*
*எனது நண்பனே*
*இந்த இடைவெளி*
*எமக்குள் இருப்பின்*
*எனது காதலை*
*உணரவே மாட்டாய்.*
*என்ன செய்வது?*
*நான் விடுதலை அடைந்தவள்*
*உன்னால் அந்த உச்சிக்கு*
*வரமுடியாதே!*

- அ. சங்கரி

அந்தப் பணத்தைக் கொண்டு வந்து அப்படியே அந்த கடை முதலாளியிடம் கொடுத்துவிட்டான்.

சரதியல் எங்கிருந்தோ திடீரென்று ஆபத்பாந்தவனாக வந்து முதலாளியின் பணத்தை மீட்டுக் கொடுத்தான். எங்கெல்லாம் அநீதியும் ஆக்கிரமும் நடக்கின்றதோ அங்கெல்லாம் சரதியல் வந்து நிற்பான் என்ற கதை இந்த பகுதி எங்கும் வீரதீர சாகசக் கதையொன்றாகப் பரவியது.

கலகெதர சம்பவத்திற்குப் பின் அவன் அங்கு தாமதிக்க விரும்பவில்லை. அவனால் கொலை செய்யப்பட்டது இலங்கை பிரசை அல்ல, வெளிநாட்டுப் பிரசை.

ஒருவேளை வெளிநாட்டுப் பிரசை ஒருவர் கொலை செய்யப்பட்டது இதுவே இலங்கையில் முதல் சம்பவமாக இருக்கலாம்.

ஆகவே, அந்த பணத்தை கடைக்காரரிடம் ஒப்படைத்த கையோடு தனது கடமை முடிந்து விட்டது என்று மீண்டும் குருநாகலைக்கே வந்தான்.

ஆனால் அவன் குருநாகலைக்குத்தான் போகின்றான் என்ற தகவல் பொலீஸ் அதிகாரிகளுக்கு எப்படியோ உடனே கிடைத்துவிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே உடனடியாக குருநாகல் பகுதியில் காவல் பணிகள் பலப்படுத்தப்பட்டன. குருநாகல் நகருக்கு உள்ளே வரும் எல்லை நுழைவாயில்களில் எல்லாம் சிவில் உடையில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பொலீஸார் ஒவ்வொருவரும் தாமே சரதியலை கண்டுபிடித்து ஒப்படைத்து விட வேண்டும் என்று துடியாய் துடித்தனர். இஷ்ட தெய்வங்களை வேண்டிக் கொண்டனர். ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் இரகசியமாக அவனைப் பிடித்துவிட குறி பார்த்திருந்தனர்.

சரதியலை பிடித்துக் கொடுப்பவர்களுக்கு பெரும் தொகை பவுண்களை சன்மானமாக வழங்குவதாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

அதேநேரம் குருனாகல் நகரம் விழாக் கோலம் பூண்டிருந்தது. அந்தகாலகட்டத்தில் குருனாகல் ஒரு வர்த்தக கேந்திர நிலையமாக விளங்கியது. இலங்கையினாகலூடாக செல்லக்கூடியதாக இருந்ததும் இதற்கு ஒரு காரணமாகும்.

முக்கிய விழாக்கள், கலை நிகழ்ச்சிகள் எல்லாம் இங்கு நடத்தப்பட்டன.

அப்படி ஒரு கலை நிகழ்ச்சி ஒன்று அப்போது குருனாகலையில் நடந்து கொண்டிருந்தது. அதற்கு நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும் கூட்டம் கூட்டமாக ரசிகர்கள் படையெடுத்திருந்தனர்.


கொழும்பிலிருந்தும் தனவந்தவர்கள், அவர்களின் பாரியார்கள் சகிதம் வருகை தந்திருந்தனர்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த நாடகக் கம்பனியொன்று தமது நாடகத்தை குருனாகலை நகர மத்தியிலுள்ள மைதானத்தில் பிரமாண்டமான அரங்கம் அமைத்து நடத்திக் கொண்டிருந்தது.

இதன் காரணமாக குருனாகல் சனக் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. அரங்கில் கொழும்பிலிருந்து வரும் பெண்கள் அமர்வதற்கென்று விசேடமாக முன்பகுதியில் ஓரமாக ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

இவ்வளவு பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு மத்தியில், காவல்துறையினர் மிகவும் உஷாராக இருந்த நேரத்தில் குருனாகலுக்குள் நுழைந்த சரதியல், ஹாயாக அமர்ந்து அந்த பிரான்ஸ் நாடகத்தை முதலிலிருந்து கடைசிவரை ரசித்து ரசித்துப் பார்த்துவிட்டுச் சென்றிருக்கின்றான் என்ற செய்தி சரதியலின் மூலமே கிடைத்து, அத்தனை பொலீஸாரும் தாம் ஏமாற்றப்பட்டதை அறிந்து வெளியில் சொல்ல முடியாதளவுக்கு வெட்கமும் அவமானமும் அடைந்தனர். அவர்கள் எல்லோரும் குசு குசுவென்று இதையே பேசிக் கொண்டார்கள். சரதியல் எப்படி வந்தான்? சரதிய ல் எப்படி தப்பிப் போனான்?...

இதுதான் அவர்களின் மண்டையைப் பொட்டு குடைந்தெடுத்த பிரச்சினை.



சரதியல் இசையிலும் நாடகத்திலும் ரசனைமிக்கவனாக இருந்தான். அக்காலத்தில் பிரபலமான பாடல்களை அப்படியே மனப்பாடத்தில் பாடிவிடுவான். அதேபோல நாடகங்கள் மேடையேற்றப்படுவதாக கேள்விப்பட்டால் முதல் ஆளாகச் சென்றுவிடுவான். அப்படி ஒரு 'கிறுக்கு' அவனுக்கு.

இந்த ஈடுபாடுதானா இவ்வளவு ஆபத்தான சூழ்நிலையிலும், பொலீஸார் கண்களில் எண்ணையை விட்டுக் கொண்டு விழிப்பாக இருந்த நேரத்திலும் அவனை அங்கே இழுத்து வந்தது என்று நினைக்கத் தோன்றுகின்றது.

அதற்காக அவன் எங்கே, எப்படி தன்னை தயார்படுத்திக் கொண்டான் என்பதை நினைக்கும் போதே ஆச்சரியமாகத்தான் இருக்கின்றது.

சரதியல் ஒரு பறங்கிப் பெண்ணைப் போன்று உடையலங்காரம் செய்து மாறுவேடத்தில் நாடகக் கொட்டகைக்கு வந்து, பெண்களுக்கென்று ஒதுக்கப்பட்ட அந்த இடத்திலிருந்து நாடகம் பார்த்திருக்கிறான்.

நாடகம் முடிந்துபோகும் போது ஒரு காகிதத்துண்டில் ***''நான் இந்த ஆசனத்தில் அமர்ந்துதான் நாடகம் பார்த்தேன் - சரதியல்''*** என்று ஒரு குறிப்பையும் எழுதி அந்த ஆசனத்தில் தெரியும்படியாக வைத்துவிட்டுச் சென்றுவிட்டான்.

இதனை நாடகக்கம்பனியைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் கண்டெடுத்து நிர்வாகத்தினரிடம் காணபித்தபோதுதான் எல்லோருக்கும் நடந்தது என்ன, என்ற உண்மை விளங்கியது.

(தொடரும்)

MARCH
08



*பென்குவின்களின்*
*அன்டார்டிகா*
*பனிப்பாறைகளின் கீழே*
*வெந்நீர் உலையிருக்குமே!*

*பெட்டிக்குள் உறங்கும்*
*தீக்குச்சி கூட*
*பிள்ளை எரிமலைதானே!*

*கூட்டுப் புழுவாயிருந்தாலும்*
*எச்சிலை எ.்.காக்கிக்*
*கொண்டிருக்கிறேன்.*

- இரா. மீனாட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சில ஆதார உணர்ச்சிகள் நம் மூதாதையரிட மிருந்துதான் நமக்கு வந்து சேர்ந்திருக்கின் றன என்பதில் சந்தேகம் கொள்வதற்கு ஒன்று மில்லை. சரிதான்! விளம்பரப் போஸ்டரில் இருக்கும் ஐஸ்வர்யா ராயை ஏக்கப் பார்வை பார்த்துக் கொண்டிருக்கிறது குரங்கு. (ஜொள் வழிகிறதா என்பது சரியாகத் தெரியவில்லை). டெல்லி நகருக்குள் மட்டும் சுமார் 7,000 குரங்குகள் நடமாடித் திரிகின்றனவாம் (உண் மையாகவே வாலுள்ள குரங்குகளைப் பற்றி யது தான் இந்தப் புள்ளிவிபரம்.)

நம் மூதாதையரைக் கௌரவிக்கும் முகமாக இந் தோனேசியாவில் ''குரங்குகள் உணவு விழா'' நடத் தப்படுகிறது. வருடா வருடம் வெவ்வேறு உணவு வகைகளையும் பானங்களையும் படைத்து அவர் களைத் திருப்திப்படுத்துகிறார்கள் மக்கள். குரங் குகள் தங்களுக்குப் பிடித்த படையலை ருசி பார்ப் பதை பார்த்து ரசிக்கிறார்கள் மக்கள்.






குளிர்கால ஒலிம்பிக் போட்டி சின்னத் திற்காகத் தன் தலையைத் தந்திரு க்கும் ஜப்பானிய விளையாட்டு வீரர்.




மும்பையில் நடந்த கலாகொட ஓவியக் கண்காட்சி விழாவில் நவீன விஸ்வாமித்திரருக்கு ஓவியம்.



பெண்ணை பறவைகளுக்கு ஒப்பிட்டதற்காக இப்படி நிரூபித்ததாக வேண்டுமா?

விண்ணையும் மண்ணையும் தன்னிஷ்டத் திற்கு விழுங்கிக்கொண்டு உலகம் அடைந் துவரும் நாகரீக வளர்ச்சியையும், பூமியை கொங்கீறீற் வனமாக்கி வரும் மனிதனை யும் நினைத்துக் கவலையோடு பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு ஸ்பெயின் குரங்கு.





''கூண்டுக் கிளி எடுத் துக் கொஞ்சினேன்'' என்று ஆணும் ''இதழ் கோவை என நினைத் துக் கொண்டதோ?'' என்று பெண்ணும் பாட வேண்டியதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமுது

மார்ச் -2002


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிரம்மி விருதை பெற்றுக்கொண்ட இந்திய சிதார் மேதை ரவிசங்கரும் அவரது மகள் அனௌஸ்கா சங்கரும் (இவரும் சிதார் கலைஞரே) மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் தருணம்.





உலகின் பிரபல மொடல் சிண்டி கிரா'.போட் காதல் களிப்பூட்டும் புதிய திரைப்படம் ஒன்றில் நடிக்கிறார். படம் The Simian Line. இங்கே கணவர் ராண்டே ஜேபருடன்.



52வது 'சான் ரெமோ' இசைவிழாவில் பாடிக் கொண்டிருக்கும் கொலம்பிய பாடகி ஷாகிரா.



'இந்தியாவின் நைட்டிங்கேல்' என்றழைக் கப்படும் லதா மங்கேஷ்கார் தனது புதிய இசை அல்பத்தை கடந்தமாதம் மும்பை யில் வெளியிட்டார். ''கபூட்டார் கபூட்டார்'' (புறாவே புறாவே) என்பது அல்பத்தின் பெயர். 1960களில் பாட ஆரம்பித்த லதா, இதுவரை 20 வெவ்வேறு மொழிகளில் 50,000க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி கின்னஸில் பதிவாகியிருப்பவர்.



சூடான் மக்கள் விடுதலைப் படைதளபதி ஜேம்ஸ் ஜல்பிமோன். முகத்திலிருப்பவை போரில் கிடைத்த விழுப்புண்களல்ல, அழ குக்காக ஏற்படுத்திய அழியா வடுக்கள்.



அஸாமிலும் அறுவடை விழாவின்போது ஜல் லிக்கட்டு மாதிரியே ஒரு போட்டி நடக்கிறது. பொங்கலைப் போலவே அங்கும் முன்பின் சேர்த்து மூன்று நாள் விழா. மாடுகளுக்கான பொங்கலின் போது எருதுகளைச் சண்டை யிட வைத்து வேடிக்கை பார்க்கிறார்கள்.



செம்மீனைப் போல இவை செம்மான்கள் (Red deer) சண்டைக்கு வளர்க்கப்படும் இந்த மான்களை ஸ்கொட்லாந்திலிருந்து கோலான் குன்றுப் பகுதிக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தயவு செய்து கணவனே கண்கண்ட தெய்வமென்று உங்கள் மகள்களுக்குக் கற்றுக் கொடுக்காதீர்கள். சிறுமிகளை வளர்ப்பதை நீங்கள் அளவுக்கதிகமாக வெறுக்கிறீர்கள் என்றால், அவர்களைப் பிறப்பதற்கு அனுமதிக்காதீர்கள். அப்போதுதான் பல சிறுமிகள் கொல்லப்படுவதற்குப் பதில் ஒரேயொரு பெண் மட்டும் இறந்து போவாள்!" என்று நீண்ட நெடிய பெண் வாழ்வின் அவலத்தை நான்கு வரியில் சொல்கிறார் ஷகீலா.

ஷகீலாவின் கதை என்ன?

அவரது சகோதரி வகிதா ஒரு மருத்துவர். அவளும், அவளது மூன்று மகள்களும் கணவனால் அமிலம் ஊற்றிக் கொல்லப்பட்டார்கள். வகிதாவின் குற்றம் என்ன? ஆண் வாரிசுக்குப் பதிலாகத் தொடர்ந்து மூன்று பெண் குழந்தைகளைப் பெற்றுக்கொண்டதும், அது குறித்து அடிக்கடி அடித்துச் சண்டையிடும் கணவனைச் சகித்துக்கொண்டு அவனோடு வாழ்ந்ததும்தான் அவளது குற்றங்கள்.

மருத்துவராகப் பணியாற்றும் ஒரு மேல்தட்டு இஸ்லாமியப் பெண்ணுக்கே இக்கதி என்றால் ஏழை எளிய பெண்களின் நிலை?

அமிலம் ஊற்றிக் கொல்லப்படுவதும் குதறப்படுவதும் வட இந்திய- பாகிஸ்தான்- வங்கதேச இஸ்லாமியப் பெண்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையாக இருக்கும்போது, 'இந்து'ப் பெண்களுக்கோ ஸ்டவ் வெடித்து எரிக்கப்படுவது என்று வேறுபடுகிறது.

உலகை உய்விக்க வந்தது தன் மதம்தான் என்று மார்தட்டும் இருமத அடிப்படைவாதிகளும், பெண்களை ஆசிட் ஊற்றியோ - மண்ணெண்ணெய் ஊற்றியோ 'அழகு' பார்ப்பதில் மட்டும் ஒன்றுபடுகிறார்கள். பெண்ணினத்திற்கு எதிராக ஆண்களும் கடவுள்களும் இணைந்து அமைத்த கூட்டணியில் மதம் ஒரு பொருட்டல்ல.

உத்தரப் பிரதேச மாநிலப் பெண்களின் வாழ்க்கையில் வன்முறை எப்படிப் பிரிக்க முடியாதபடி ஒன்றியிருக்கிறது என்பதை அரசு நடத்திய 'மக்கள் நீதிமன்றத்தில்' விளக்கிய பெண்களின் கதைகளை வைத்து 'தி இந்து' பத்திரிகையில் கல்பனா சர்மா என்பவர் எழுதியிருக்கிறார். அதிலொன்றுதான் முன்னர் கண்ட ஷகீலாவின் கதை....

சித்திரக்கோட் மாவட்டத்திலிருந்து வந்த 19 வயது கிஸ்மாத்தூன் பானோ கூறுகிறார்.

"ஏழு வருடங்களுக்கு முன்பு மணமுடிக்கப்பட்டேன். என் கணவன் மோட்டார் சைக்கிள் வாங்குவதற்காகப் பத்தாயிரம் ரூபாயை வரதட்சணையாகக் கேட்டு நச்சரித்தான். தொடர்ந்து அடித்துக் கொண்டுமிருந்தான். இதை எனது கிராமமக்களிடமும், பொலீஸிடமும் தெரிவித்தேன். எவரும் காது கொடுத்துக் கேட்பதாக இல்லை. ஆனால் கணவனுடன் சேர்ந்து வாழவேண்டும் என்பதை மட்டும் வலியுறுத்தினார்கள். அப்படி ஒவ்வொரு முறையும் திரும்பியபோதும் அடிப்பதை மட்டும் அவன் நிறுத்தவில்லை. இப்போ உடல்நலத்தையும் இழந்துவிட்டேன். ஆயினும் வயதான என் தாயையும், மூன்றுவயதுக் குழந்தையையும் காப்பாற்ற வேலை செய்ய வேண்டும். எனது கணவனும் அவனது குடும்பத்தாரும் தொடர்ந்து மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்."

லக்னோவைச் சேர்ந்த தீப்தி, கல்லூரிப்படிப்பு முடித்து கணினி ஆசிரியையாகப் பணிபுரிபவள். பெற்றோரால் சதீஷ் என்ற அறிவியல் ஆராய்ச்சியாளனுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டாள்.

"மணமான முதல் நாளிலிருந்தே எனது கணவனும், அவனது பெற்றோரும் வரதட்சணை கேட்டு நச்சரித்தும் பின்னர் அடித்துத் துன்புறுத்தவும் செய்தார்கள். மேலும் எனது கணவனுக்கு இரண்டாவது திருமணம் செய்யப்போவதாகவும் மிரட்டினார்கள்" என்று தன் மணவாழ்க்கை ஆயுள் தண்டனையாகத் தொடங்கியதை நினைவு கூர்கிறாள் தீப்தி.

இறுதியில் அவளது கணவன் ஏதோ கருத்தரங்கம் ஒன்றிற்குச் சென்றிருந்தபோது வீட்டைவிட்டுத் துரத்தப்பட்டாள். இந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு முன் அவளைத்தேடி விவாகரத்து வழக்கு வந்தது. பின்னர் மகளிர் அமைப்பு ஒன்றின் உதவியுடன் எதிர்வழக்குப் போட்ட தீப்திக்கு கடந்த 6 மாதமாக முடிவோ இல்லை அமைதியோ கிடைத்து விடவில்லை.

நிகழ்ச்சிக்கு வந்திருந்த கிராமப்புற தலித் பெண்கள், நகர்ப்புற நடுத்தரவர்க்கப் பெண்கள் அனைவரும் அரசு - அதிகாரவர்க்கம் - பொலீஸ் துறைகள் சாதி - பண பலத்தின் முன் மண்டியிட்டு தமது அவலங்களைப் பாராமுகத்துடன் நடப்பது குறித்து விளக்கினார்கள். ஏதோ ஒரு மகளிர் அமைப்பின் தொடர்பினால் இங்கு வந்த பெண்களின் எண்ணிக்கை நூற்றுக்கணக்கில் இருக்கும்போது வெளியுலகம் அறியாத பெண்களின் எண்ணிக்கை பல ஆயிரம் இருக்கும்...

இந்த வழக்குகளில் பாதி கற்பழிப்பு வழக்குகளாகவும் அதில் பாதி ஆதாரமில்லையென மூடப்படுவதாகவும் இருப்பது நடைமுறை உண்மை....

தற்போது ஓடிக்கொண்டிருக்கும் 'பவாந்தர்' எனும் இந்தித் திரைப்படத்தில் கதைக்குச் சொந்தக்காரரான பன்வாரிதேவி, ராஜஸ்தான் மாநிலத்தில் மேல் சாதியினரை எதிர்த்து நின்று அதனால் கற்பழிக்கப்பட்டு, நீதிமன்றத்திலும் நியாயம் கிடைக்காத ஒரு அப்பாவிப் பெண்.

'பண்டிட் குயின்' திரைப்படக் கதைக்குச் சொந்தக்காரரான பூலான் தேவி பாராளுமன்றம் வரை சென்றும் விடுதலை கிடைக்காமல் கொலை செய்யப்பட்ட மற்றுமொரு பெண்.

ரவுடிகள்-போதை- சிறை அதிகாரிகளால் மனநிலை சிதையுமளவு குதறப்பட்ட தமிழகத்தின் ரீட்டாவுக்கு 5 லட்சத்தைக் கொடுத்துவிட்டார்கள் என்பதைத் தவிர பன்வாரி தேவிக்கு நேர்ந்தது இவருக்கும் நேரிடும்.

இப்படிப் பெண்கள் மீதான வன்முறையின் புள்ளிவிபரம் சலிப்பூட்டும் ஒரு சடங்காக மாறிவிட்டது. அவர்களின் அவலங்களை பாலுணர்வைக் கிளப்பும் பரபரப்பான பத்திரிகைச் செய்திகளாக மாற்றிவிட்டார்கள். உழைப்பைச் செலுத்தும் பெண்களை வீட்டு வாழ்க்கையில் கூட சரிசமமாக மதிக்காமல் அடிமைகளாக நடத்தும் நாட்டில் அவர்களின் விடுதலையும் எளிதில் கிடைத்துவிடாது. அரசியல்-சக-பொது வாழ்க்கையில் அதிகம் பங்கேற்பதும், போராடுவதும்தான் விடுதலைக்கான தொடக்கமான இருக்கும். அப்போதும்கூட அரசு நடத்தும் 'மக்கள் நீதிமன்றத்தில்' துயரங்களைப் பகிர்ந்து கொள்வது என்பதைத் தாண்டிச் செல்வது கடினம்.

***நன்றி: புதிய கலாச்சாரம்***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் இங்கே?

வெருட்டும் பேய் மயானம்;
வரட்டுப் பூமி - அந்த
கார் வேண்டாப் பூமியை
காலடிகள் நோக்க,
பார் வேண்டாப் பாதையில்
பரிதாபப் பிரயாணம்!

ஈர்மூண்டு சயவொரு
அறிவுடை ஜீவன்கள்
வேர்விட்ட பாசத்தால்
வேதனை துறக்கிறது - நாம்
போர்மூண்ட வல வாழ்வில்
புதைந்து கிடக்கிறோம்.

*- இ. தனஞ்சயன்,*
*உடுவில்.*

## பாதையோரப் பரிதாபம்

அம்மா பிச்சை போடு!
அம்மா பிச்சை போடு! என்றே
அலுத்துவிட்டதம்மா!
சிலர் என்னைக் கண்டும்
காணாதவர் போல் செல்ல...
ஒருசிலர் ஒளிந்து கொள்ள...
மனமிரங்கி சில மனிதர்கள்
இருபத்தைந்து சதம் போட
என்வாழ்க்கை இப்படியே
கழியுதம்மா!
என் வயதினர் புத்தகம் சுமந்து
பள்ளி செல்ல...
நானோ, பாத்திரம் சுமந்து
பிச்சை எடுப்பதை எண்ணி
என்மனம் வருந்துதம்மா!
போரின் கொடுமையால்
பெற்றோர் பறிபோக
வாழ வேறு வழியின்றி
அநாதையாய்ப் பாதைக்கு
வந்தேனம்மா!
இரண்டு நாளாக என்வயிறு
சோற்றைக் காண
ஏங்குதம்மா!
பாதையோர என் படுக்கையிலும்
கல்நடைகள் படுத்துறங்க...
மழை வந்து என் ஒரே
சட்டையையும் நனைத்துவிட...
நித்திரையின்றி என் இரவுகள்
கழியுதம்மா!
பூமிக்குப் பாரமாக
ஏன் வந்து பிறந்தேனென...
என் இதயம் ஏங்கி
அழுகுதம்மா!

*- குணம்,*
*களுவாஞ்சிக்குடி.*

## உயிர்முகம்

உன் விடயத்தில்
எதுவும் நான்
எடுத்ததே
மெத்தச்சரியானதால்
உன் வன்மம் என்னில்
ஏகாதிபத்தியமாகவே
கோலோச்சியது.

உன் முகம் எனக்குள்
என்னவோவாக
இருந்தும்
என்னன்பு
மறுதலிப்புக்களால்தான்
மகத்துவப்படுத்தப்படுகிறது

துடிப்பாய்...
வலியாய்...
கடுப்பாய்...
கொதிப்பாய்...
அசதியாய்...
ஏன் மயக்கமாக கூட
ஏன் இருத்தல் நிஜத்தை
உரக்கச் சொல்லுவாய்.

எனக்குள் நீயா?
உனக்குள் நானா?
சொல்லத்தெரியாத சோகம்
நீ பிரிந்து செல்லும்போது
மட்டும்
சொந்தம் சொல்கிறது

எனக்கான உடல்
குழலாகி மீட்டும்
நீ ஒரு ராகமானால்

ஐம்புலனும்
உணர்வாகி - நாம்
பெற்ற
பெறுகின்ற
பெறுவிருக்கின்ற சுகங்கள்
சுமைகள் எல்லாமே - உன்
கதகதப்பு இருக்கும்வரை
ரசனைக்குரியன
அன்றில்
ரணத்துக்குரியன
ஆதலால்
நீ தான் நான்.

*- ஏ.எச்.எச்.ஹஸீன்,*
*புத்தளம்.*

## அவள்....

மென்துகிலால் திரையிட்டு
மூடி வைத்த புத்தகமோ?
மன்மதனின் அந்தப் புர
மயக்கம் தீர்க்கும் சுவைக்களமோ?
இன்ப வெள்ளம் ஊற்றெடுக்கும்
செந்தமிழின் கலிச்சரமோ?
பொன்தகட்டில் வார்த் தெடுத்த
புன்னகைக்கும் உயிர்ச் சிலையோ?

சந்தனத்தில் தோய்த் தெடுத்த
சரச விளையாட்டரங்கோ?
சுந்தரப் பூஞ்சோலைத் தேன்
சுமந்து வரும் பொற்குடமோ?
அந்த முனிபுல்கனை
அதிர வைத்த மேனகையோ?
கந்தர்வரும் மயங்கும்
காம ரசக கனியமுதோ?

- நெடுந்தீவு லக்ஸ்மன்

## பாலையில் பூத்த பூ!

அழகிய புன்னகையை
இதழ்களில் தீட்டி யாது பயன்
ராத்திரி வருபவனுக்கு
என்ன தெரியும்?

தசைத்துண்டுகளுக்குப் பாயும்
நாய்கள் போல்
வெறிகொண்டு பாயும்
அவர்களுக்கெங்கே என்
குமுறல்கள் விளங்கும்?

விலைபேசும் அவர்களுக்கு
விடலையின் உடல்தானே குறி

இறைவனுக்கு கூட என்னில்
எத்தனை வெறுப்பு
உயிரைப் பறிக்காமல்
பாவிகள் மத்தியில்
பரிதவிக்க விட்டுள்ளான்...

கட்டத் தயங்குபவர்களில்
கட்டியணைக்க தயங்குகிறவர்
யாருமில்லை
எனக்கு மட்டும் படுக்கை
நாளும் முள்ளாய்த்தான்...

காதலன் என்றப்பாவியால்
பாழாய்ப்போனது என் வாழ்வு
இறப்பதற்கும் கூட
உரிமையில்லை
ஆயிரம் காவலர்கள்
என்னைச்சுற்றி...

பாலையில் பூத்த பூவானேன்...
நாளும்
கண்ணிரில்தான் நனைகின்றேன்
தென்றலாய் வந்தவனே
தீயானபோது,
வாடைக்காற்றா என்னை
குளிர்கரங்களால்
வருடப்போகிறது.

*- ஸபீர் மொஹமட்,*
*புத்தளம்.*

## பேராசை வேண்டாம்

அந்தக் கணநேரக்
களிப்பின் இங்கிதத்தை
எண்ணிப் பார்க்கின்றேன்.
என்னுள் நீயாகி,
உன்னுள் நானாகி
இருவரும் ஒருவராகி,
உருவமே ஒருமையாகி,
சுகித்த அந்தக்
கணநேரக் களிப்பை
மறக்க ஒண்ணாதே!

எயிறில் ஊறிய
அமுதை மாந்தித்
திளைத்த வேளை
கொவ்வைக் கனிகள்
கொட்டிய போதை
உன்னுள் என்னை,
உகுத்து நானே நீயாகி
கண்ட களிப்பு
மறக்க ஒண்ணாதே!

புதையல் தேடிப்
பறந்து வந்த பின்னும்
நானும் நீயும்
பாலில் அமுதாக
கலந்த உணர்வு
கண்ணுள் கனவாகி
தொலைந்த இன்பம்
நிழலாடிய போது
மறக்க ஒண்ணாதே!

உயிருள் உயிராகி
உடலில் ஒன்றாகி
சுகித்த வேளை
இன்பக் கனவாகி
காலம் கடந்தாலும்
நினைவில் நிழலாடி
மறக்க ஒண்ணாதே!

கடந்ததோ மாதம்
ஒன்று. தொலைந்ததோ
உறக்கம் என்றும்
துயிலின் போழ்து
கரம் நீட்டித் தடவி
ஏமாந்த நாளோ பல
தலையணையே நீயாகி
அணைத்தணைத்த போது
கலையும் கனவோ பல.

போதும் போதும்
பொருள் தேடும் ஆவல்,
நான் பறந்தே வருவேன்,
பாசப் புறாவே
வேசம் போதும் இனி
என்னால் நடித்து
உருக முடியாது.
நாளை வருவேன்
பசுங்கிளியே உன்
பசுமை வதனம்
பார்க்காது என்னால்
பொருள் தேட
ஒண்ணாது. நாம்
ஒன்றாகி உய்வோம்
இருப்பது போதும்
பேராசை வேண்டாம்.

- கிண்ணியா சீலதரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைப்பெண்ணே உன்னுடனே!

அணுக்குண்டை விடவுமுந்தன்
அன்பின் சக்தி அதிகந்தான்
துணுக்காய் வந்து நினைவையூட்டி
தூரவிலகி ஏன் போனாய்?

மணக்கு முந்தன் கூந்தலது
மனதில் பரந்து கிடக்கிறது - நீ
இணக்கம் இன்றி இருப்பதனால்
இறந்து பிறக்கும் என்மனது!

வினாக்கள் நெஞ்சில் குவிகிறது
விளக்கம் கேட்க வரவில்லை
கனாக்கள் கண்டே வாழ்கின்றேன்
கவிதைப் பெண்ணே உன்னுடனே!

எதுகை மோனை எடுத்தியம்பி
எதிலும் இரசனை தந்துவிட்டு
மதுவைக் கையில் தான்திணித்து
மயக்கம் தந்த தெதனாலோ?

வாழும் இந்த சிலநாளில்
வளரும் உந்தன் நேசமதை
தோளில் சுமந்து வாழ்வதிலே
தோன்றும் சுகந்தான் எத்தனையோ!

உணர்வை வருடும் உத்வேகம்
உந்தன் உறவே தந்ததிங்கு
கணங்கள் கூட நூற்றாண்டாய்
காண வைத்ததும் உன்னுறவே!

கன்னந் தந்து தித்திப்பாய்
கனியாய் அன்று தித்தித்தாய் -இன்று
கன்னம் வைத்து என்னுயிரை
கலைக்க ஏன் நீ முயலுகிறாய்?

சினக்கக் கூட நேரமின்றி
சிரிக்க வைத்த உன் மொழிகள்
கனக்க வந்து என் மனதில்
கத்திகளாய் கீறுதின்று

மடியில் படர்த்திப் பாசமுடன்
மனதை வருட விட்டவள் நீ - உன்
பிடியிலிருந்து என் உறவை
பிரிக்கப் பார்ப்பது எதனாலோ?

கண்ணில் மணியாய் நீயிருந்து
காதல் காட்சி தந்துவிட்டு - என்னை
மண்ணுள் போட்டு மறைப்பதற்கு
மனதும் வந்தது எப்படியோ?

ஒழிவு ஏது எனக்கேட்டு
ஒளிர்ந்திருந்த உன்னதமே
அழிந்து போகும் என்னுயிர் மேல்
அமில மூற்ற ஏன் நினைத்தாய்?

எதிலும் எங்கும் உன் தொனியாய்
எழுந்து நிற்பேன் கவியவளே
மதியாய் உந்தன் நினைவுகளை
மடியில் ஏந்தி நான் வாழ்வேன்

*- ஆ. ஜென்சன் றொனால்ட்,*
*யாழ்ப்பாணம்.*

## மனிதம் வேண்டும்

மண்ணில் முளைக்கும்
விதைகள் - நாளை
மகிழ்ந்திட மனிதம் வேண்டும்
கண்ணில் விளையும்
நீர்த்துளி - நாளை
களித்திட மனிதம் வேண்டும்

உள்ளில் நிறைந்திடும்
கவிதை - மண்ணில்
உயர்ந்திட மனிதம் வேண்டும்
தேனை ஊற்றிடும் மொழி
நாளை திசைகள் காட்ட
மனிதம் வேண்டும்

பெண்கள் தலைமை நிறைந்திட
பெயருள் மனிதம் வேண்டும்
ஆண்கள் தேசம் காத்திட
ஆளுமையில் மனிதம் வேண்டும்

பதவிகள் சுமந்திடும்
கதிரைகள் - நல்ல
பணிகள் செய்திட வேண்டும்
உதவிகள் வழங்கிடும்
கரங்கள் - நாளை
உயர்ந்திட மனிதம் வேண்டும்.

*- நல்லை அமிழ்தன்*

## கல்விச் சாலையிலும் வீதியோரத்திலும்

பெண்ணைத் தெய்வமாகப்
போற்றிப் பாடியவர்
பண்பு கெட்டின்று நடக்கின்றார்
விண்வெளியில் ஆய்வு செய்யும்
நிலைமாறி
வீண்வார்த்தைக் கண்டுபிடிப்புகள்

தூய திருக்குறள் தனை
தீய வார்த்தை கோர்த்து
மாய வலையாகப் பின்னி
சாயம் கழற்றுதல் ஏனோ?

எண்பதிலும் பாட்டியிடம்
இன்பம் பெற்ற
பண்பு கெட்டவனையும் ஒரு
பெண்தானே பெற்றெடுத்தாள் என
எண்ண ரத்தம் கொதிக்கிறதே!

தறுதலைத்தனமாக பெண்ணை
ஏறுமாறாக பகிடிவதை செய்யும்
குறும்புத்தனமும் இன்று
மலிந்து விட்டது

மரத்துக்கு மரம் தாவும்
குரங்கினத்தார் என்பதனாலோ
மரத்துப்போன உணர்வுடன்
தரம் கெட்டுப் போகின்றனரோ?

*- திருமதி கி. தீப்திகா,*
*அல்வாய்.*

## அவசர அபிவிருத்தி

விரைவும் வேகமும்
விண்ணிலே பரவும்
கரையையும் விட்டே
கடும் ஆழம் உலவும்!

கடுகதி புகை கக்கிக்
கடும் பாரம் ஏறும்
படுமோசமாய் ஓடித்
தடம் புரண்டாடும்!

உலகெலாம் விஞ்ஞான
உறுதியே சாலும்
பலவழி மனிதர்கள்
பட்டுமே மாளும்!

பணமெலாம் ஒருவகை
மனிதரில் கூடும்
இனமெனக் கூக்குரல்
இட்டுமே சாகும்!

இடமிலா மனிதர்கள்
இடறியே ஓடும்
தடமிலாக் கூட்டமாய்த்
தடுக்கியே வீழும்!

இவர்கள்தான் மனிதராய்
எண்ணுதல் ஆகும்
தவறுகள் நீதியாய்த்
தடுமாறி வீழும்!

ஒருவரே வாழ்ந்திட
ஊரையே கூட்டும்
பறிமுதல் அழிந்ததும்
பாதாளம் சேரும்!

இதுவிதி யெனும் நிலை
இறுதியி லாகும்
பொது விதியாகியே
புகழ் பெற நாடும்!

மனிதனின் குறையினால்
மடமைகள் கூடும்
இனியவன் பொறுப்பெலாம்
அரசிதான் ஏற்கும்!

போலாக்கம் உலகினில்
பெருகியே குவியும்
மூலாக்கம் பெயரிலா
முடங்கியே நாறும்!

விதிமாற்ற மாதலால்
விளைவுகள் தாழும்
சதிமாற்ற மாதலால்
சார்ந்தவை வீழும்!

உலகாளும் மனிதனை
எவர் ஆளுவாரோ
நிலை தாழும் உலகினை
எவர் தாங்குவாரோ?

*- கவிஞர் ஏ. இக்பால்*
*தர்கா நகர்.*

## மனிதன் பல ரகம்

தனம் பெற்றவனோ உலகில்
தானம் செய்ய மறுக்கின்றான்
பணம் அற்றவனோ பருக
பானமேனும் கொடுக்க
நினைக்கின்றான்

விதி என்செய்வேனென்றே
வீதி வழி செல்கின்றான்
நிதி தேடியே அவனும்
நீதியை அவமதிக்கின்றான்
இவனும் ஒரு ரகம்

தடியைக் கையிலேந்தி
தாடியையும் நீளவிட்டு
படி பலவும் ஏறியிறங்கி
பாடிப் பணம் தேடுகின்றான்
இவனும் ஒரு ரகம்

சதி பல செய்து பிறர்
சாதி சமயத்தை தாக்கி
பரியாக
வாழ்ந்திடவே யெண்ணி
பாதியில் வீழ்கின்றான்
ஒருவன்
இவனும் ஒரு ரகம்

மனதில் முழு மதியாய்
மானத்தில் கவரிமானாய்
மனித
இனத்திற்கே என்றும்
ஈனம் விழையாது
காக்கின்றான்
இவனும் ஒரு ரகம்.

*- கே.எம். பரீனா பேகம்,*
*திகன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1639 மார்ச் 01 - சென்னையில் உள்ள கூவம் நதிக்கரையில் ஆங்கிலேயர்கள் ஒரு பண்டக சாலையைக் கட்டி சென்னை மாநகரை உருவாக்கத் தொடங்கிய நாள்.

1912 மார்ச் 01 - முதன்முதல் கப்டன் ஆல்ஸர்ட் பெர்ரி என்பவர் ஜெ.ஃப்பர்சன் பாராக்ஸ் என்ற இடத்தில் 1500 அடி உயரத்திலிருந்து பாரசூட்டில் குதித்த நாள்.

1954 மார்ச் 01 - அமெரிக்கா பசுபிக் பகுதியில் ஐதரசன் குண்டை வெடித்துப் பரீட்சித்தது.

1986 மார்ச் 01 - சுவீடன் பிரதமர் ஒல.ஃப் பால்மே ஸ்டாக்ஹோமில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1836 மார்ச் 02 - வோஷிங்டன் மாநாட்டில் அமெரிக்க விடுதலைப் பிரகடனம் ஏற்கப்பட்டது.

1949 மார்ச் 02 - சுதந்திர இந்தியாவின் முதல் பெண் கவர்னரான 'கவிக்குயில்' சரோஜினி நாயுடு காலமானார்.

1707 மார்ச் 03 - மொகலாய கடைசிப் பேரரசன் ஔரங்கசீப் காலமான தினம்.

1863 மார்ச் 03 - அமெரிக்காவில் கட்டாய இராணுவச் சட்டம் அமுலுக்கு வந்தது.

1923 மார்ச் 03 - நியூயோர்க்கிலிருந்து 'ரைம்' பத்திரிகையின் முதல் இதழ் வெளியிடப்பட்டது.

1945 மார்ச் 03 - அரபுலீக்கின் சட்டதிட்டங்கள் இன்று கையெழுத்திடப்பட்டது.

1978 மார்ச் 03 - ரொடீசியாவில் (இன்றைய சிம்பாப்வே) வெள்ளையர் அதிகாரத்தைக் கைமாற்றுவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்தான நாள்.

1993 மார்ச் 03 - போலியோ வாய்வழி தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்த டொக்டர் ஆல்பெர்ட் ஸாபியா காலமானார்.

1789 மார்ச் 04 - அமெரிக்க முதல் காங்கிரஸ் கூடியது.

1801 மார்ச் 04 - அமெரிக்காவின் தலைநகராக 1800ல் அறிவிக்கப்பட்ட வோஷிங்டனில் முதன் முதலாக மூன்றாவது ஜனாதிபதி தோமஸ் ஜெப்பர்ஸன் பதவி ஏற்றார்.

1849 மார்ச் 04 - அமெரிக்காவின் ஜனாதிபதியாக ஒரேயொரு நாள் மட்டும் (இன்று) டேவிட் ரைஸ் அட்கின்ஸன் இருந்தார்.

1861 மார்ச் 04 - அமெரிக்காவின் 16வது ஜனாதிபதியாக ஆபிரகாம் லிங்கன் பதவியேற்ற நாள்.

1918 மார்ச் 04 - ரஷ்யாவில் சுப்ரீம் சோவியத் இராணுவம் அமைக்கப்பட்டது.

1931 மார்ச் 04 - உப்பு வரியை ரத்துச் செய்யும் காந்தி - இர்வின் உடன்படிக்கை கைச்சாத்து.

1770 மார்ச் 05 - பொஸ்டனில் கிளர்ச்சி செய்த மக்களை வகைதொகையின்றி பிரிட்டிஷ் படைகள் சுட்டுக்கொன்ற நாள்.

1815 மார்ச் 05 - உலகிற்கு 'மனோவசிய' முறையை அறிமுகம் செய்த டொக்டர் பிரடெரின் அன்ரன் மெஸ்மர் - ஜேர்மனியில் காலமானார்.

1953 மார்ச் 05 - 'இரும்பு மனிதர்' என அழைக்கப்பட்ட சோவியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் காலமானார்.

1975 மார்ச் 05 - பாலஸ்தீனக் கெரில்லாக்கள் இஸ்ரேலியத் தலைநகர் டெல்அவிவ் ஹோட்டல் ஒன்றில் 30 பேரை பணயக் கைதிகளாகப் பிடித்தனர்.

1982 மார்ச் 05 - வெனீரா 14 விண்ணூர்தி வீனஸில் ஒரு சிறுகுன்றில் இறங்கியது.

1707 மார்ச் 06 - இங்கிலாந்தும் ஸ்கொட்லாந்தும் ஒரே நாடாக இணைந்த 'யூனியன் சட்டம்' நிறைவேறிய நாள்.

1943 மார்ச் 06 - 'சிந்துவெளி நாகரிகத்தை'க் கண்டுபிடித்த பிரிட்டிஷ் தொல்லியலாளர் மார்க் அவுரல் ஸ்டீன் காபூலில் காலமானார்.

1944 மார்ச் 06 - நூற்றுக்கணக்கான குண்டுவீச்சு விமானங்களின் உதவியுடன் அமெரிக்கா, ஜேர்மனியின் பெர்லின் நகரைத் தாக்கியது.

1953 மார்ச் 06 - ஸ்டாலினுக்கு பின்னர் ரஷ்யப் பிரதமராக மொலஸ்கோஸ் பதவி ஏற்றார்.

1967 மார்ச் 06 - முதன்முதலாக தி.மு.க அரசாங்கம் சி.என்.அண்ணாதுரை தலைமையில் பதவி ஏற்றது.

1917 மார்ச் 07 - அமெரிக்காவில் முதல் ஜாஸ் இசைத்தட்டு விற்பனை ஆரம்பமானது.

1941 மார்ச் 07 - பிரிட்டிஷ் படைகள் அபிசீனியாவை (எத்தியோப்பியா) கைப்பற்றின.

1981 மார்ச் 07 - கலிபோர்னியாவில் பேராசிரியர் நோர்மன் ஷம்வெ என்பவர் இதய நுரையீரல் ஒட்டு மாற்றுச் சிகிச்சையை முதன் முதலில் மேற்கொண்டார்.

1990 மார்ச் 07 - கவியோகி சுத்தானந்த பாரதி தமது 97வயதில் காலமானார்.

1950 மார்ச் 08 - அணுகுண்டு தயாரித்துள்ளதாக முதன்முதல் சோவியத் யூனியன் அறிவித்தது.

1963 மார்ச் 08 - சிரியாவில் பாத் கட்சி புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றியது.

1978 மார்ச் 08 - பாகிஸ்தான் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோவிற்கு லாகூர் உயர்நீதி மன்றம் தூக்குத் தண்டனை தீர்ப்பளித்தது.

1983 மார்ச் 08 - 'சர்வதேச மகளிர் தினம்' பிரகடனம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1851 மார்ச் 09 - மின்காந்தத்தை கண்டுபிடித்த ஹன்ஸ் கிறிஸ்டியன் ஓர்ஸ்டெட் டென்மார்க்கில் காலமானார்.

1876 மார்ச் 09 - அலெக்ஸாண்டர் கிரகம்பெல் தொலைபேசி செய்வதற்கு காப்புரிமம் பெற்றார்.

1932 மார்ச் 09 - அயர்லாந்தின் ஜனாதிபதியாக ஏமன்டிவேலரா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1942 மார்ச் 09 - ஜப்பான் ஜாவாவைக் கைப்பற்றியது.

1876 மார்ச் 10 - அலெக்ஸாண்டர் கிரகம்பெல் தான் கண்டுபிடித்த தொலைபேசி மூலம் முதன் முதல் உரையாடிய நாள்.

1920 மார்ச் 10 - அயர்லாந்து இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

1977 மார்ச் 10 - யூரேனஸ் கோளைச் சுற்றி வளையங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

1892 மார்ச் 11 - மின் அடுப்பில் சமையல் செய்வதுபற்றி செயல்முறை விளக்கம் முதன்முதலில் நடாத்திக் காண்பிக்கப்பட்டது.

1922 மார்ச் 11 - பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து 'யங் இந்தியா' பத்திரிகையில் எழுதியதற்காக மகாத்மா காந்தி நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டார்.

1980 மார்ச் 11 - ஸிம்பாப்வேயின் பிரதமராக ரொபேர்ட் முகாபே பதவியேற்றார்.

1925 மார்ச் 12 - சீனக்குடியரசின் தந்தை சன்யாட்சன் பீக்கிங்கில் காலமானார்.

1950 மார்ச் 12 - புகழ்பெற்ற ஜேர்மன் நாவலாசிரியரும் பாஸிச எதிர்ப்பாளருமான லூயிஸ் ஹென்றிக் மான் கலிபோர்னியாவில் காலமானார்.

1966 மார்ச் 12 - இந்தோனேஷியாவில் ஜனாதிபதி சுகர்னோ பதவி விலகினார். புதிய ஜனாதிபதி ஜெனரல் சுகார்ட்டோ இடதுசாரிக் கட்சிகளைத் தடைசெய்தார்.

1968 மார்ச் 12 - மொரிஷியஸ் சுதந்திரம் பெற்றது.

1781 மார்ச் 13 - பிரிட்டிஷ் வானிலையாளர் வில்லியம் ஹெர்ஷலினால் யூரேனெஸ் கோள் கண்டுபிடிக்கப்பட்டது.

1917 மார்ச் 13 - ரஷ்யாவில் 'இஸ்வெஸ்தியா' பத்திரிகையின் முதல் இதழ் வெளியானது.

1941 மார்ச் 13 - ரஷ்யாமீது படையெடுக்க ஹிட்லர் இரகசிய உத்தரவு பிறப்பித்தார்.

1959 மார்ச் 13 - திபெத்தில் கிளர்ச்சி தோல்வியடைந்ததையடுத்து தலாய்லாமா இந்தியாவுக்கு தப்பி ஓடினார்.

1988 மார்ச் 13 - உலகின் மிகநீளமான 53.9 கி.மீ நீளமான கடலடி சுரங்க ரெயில்பாதை ஜப்பானில் திறந்து வைக்கப்பட்டது.

1992 மார்ச் 13 - 80 ஆண்டுகளுக்கு மேலாக வந்து கொண்டிருந்த சோவியத் கம்யூனிஸ்ட் பத்திரிகையான 'பிராவ்தா' இன்றுடன் நிறுத்தப்பட்டது.

1883 மார்ச் 14 - 'கம்யூனிசத்தின் தந்தை' கார்ல் மாக்ஸ் காலமானார்.

1932 மார்ச் 14 - சுருள் பிலிம்மைக் கண்டுபிடித்த அமெரிக்கரான ஜியார்ஸ் ஈஸ்ட்மன் நியூயோர்க்கில் காலமானார்.

1938 மார்ச் 14 - ரஷ்யப் புரட்சித் தலைவர்களில் ஒருவரான ஜயனோவிச் புகாரின் மொஸ்கோவில் காலமானார்.

கி.மு 44 மார்ச் 15 - ரோமானியப் பேரரசனும், சர்வாதிகாரியுமான ஜூலியஸ் சீஸர் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

1892 மார்ச் 15 - நகரும் மாடிப்படிக்கட்டு தயாரிப்பதற்கு நியூயோர்க்கைச் சேர்ந்த ஜே.டபிள்யூ ரெனோ என்பவர் காப்புரிமம் பெற்றார்.

1939 மார்ச் 15 - ஹிட்லரின் படைகள் செக்கோஸ்லோவாக்கியாவைக் கைப்பற்றின.

1970 மார்ச் 15 - மிகப்பெரிய தொழிற் பொருட்காட்சி 'எக்ஸ்போ-70' ஜப்பா னில் ஆரம்பமானது.

1968 மார்ச் 16 - வியட்நாமின் மைலாய் கிராமத்தில் 504 பொதுமக்களை அமெரிக்க இராணுவம் படுகொலை செய்தது.

1950 மார்ச் 17 - சர்வதேச கப்பற் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

1993 மார்ச் 17 - அமெரிக்க நாடக அரங்கின் முதல் சீமாட்டி என்று பெயர் பெற்ற மிஸ் ஹெலன் ஹேயஸ் 92வது வயதில் காலமானார்.

1895 மார்ச் 18 - பெட்ரோலினால் ஓடும் முதல் பஸ் வடக்கு ரைன்லாந்தில் ஓடவிடப்பட்டது.

1930 மார்ச் 18 - புளூட்டோ என்ற கோள் அமெரிக்க வானிலையாளர் கிடைடோபாக் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

1965 மார்ச் 18 - அலெக்ஸி லினோஸ் என்ற விண்வெளி வீரர் வானவெளியில் முதன்முதல் நடந்து சாதனை புரிந்தார்.

1970 மார்ச் 18 - கம்போடிய அரசின் தலைவர் நோரோடம் சிஹனுக் வலதுசாரி இராணுவ சதியால் பதவி கவிழ்க்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நீலவானம் ஒரே லயத்தில் பளீரென்று விரிந்து கிடந்தது. துணுக்கு மேகமொன்று அபூர்வமாக தெளிந்த நீலத்தினுள் பளீச்சென்று அடையாளங் காட்டிற்று; முயற்குட்டியொன்று புல்வெளியொன்றினுள் இலக்கற்று ஓடிக் கொண்டிருப்பதனைப் போல.

பாரதிக்கு அந்த மனநிலையிலும் நிறைவான சிரிப்பொன்று இதயத்தினுள்ளே அவிழ்ந்து உதிர்ந்தது. தன் பூனைக்கண்களை இமைக்காமல் ஆகாயத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். வடிவம் மாறுகின்ற பிஞ்சு மேகம் இப்போது இரண்டாக உடைந்து வெள்ளைக்கோழிகளாக அவளின் கண்களுக்கு அடையாளம் சொல்லி ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டிருந்தன.

சரசரவென்று சத்தம் கேட்டது. மெல்லத் திரும்பிப் பார்த்தாள். காட்டுக்கோழியொன்று காரைப்பற்றைகளுக்கு ஊடாக வீரிட்டவாறு சென்றது. நெஞ்சைக் கவ்வி வேதனைப்படுத்திற்று அந்த வீரிடல்.

என்னைக் காப்பாற்றுங்கள் என்று அலறிய அந்தக் குரல் சட்டென்று ஒடுங்கிக் கரைந்தது. சிவஞானம் இப்போது அந்தக் கோழியின் கழுத்தை முறித்து, அதன் இறக்கைகளை உரிக்கத் தொடங்கியிருப்பான்.

ஆகாயத்தில் இரண்டு கோழிகளும் நூல்நூலாகக் கிழிந்து போயிருந்தன. பாரதி தன்னெதிரே பார்த்தாள். நாயுருவிச்செடிகளில் கொத்துக் கொத்தாய் பச்சைக்காய்கள், மஞ்சளும் சிவப்புமாய் சின்னச் சின்னப் பூக்கள்.
மெல்ல எழுந்துபோய் பூக்களையும் காய்களையும் உருவிப் பிடுங்கினாள். சின்னஞ்சிறு சருகுகளை உதறினாள். வாய்க்குள் போட்டு லேசாகக்கடித்து உமிழ்ந்தாள்.

சட்டென்று வீட்டின் பின்பக்கம் மனதினுள்ளே சித்திரம் தீட்டிற்று. செழுமையான சோலையாக அவளின் அக்கா கமலம் அதை வளர்த்திருந்தாள். அன்னமுன்னா, கொய்யா, ஒட்டுமாமரம், தோடை, எலுமிச்சை... எந்தநேரமும் பூவாய், காயாய், பழமாய் சொரியும் சோலை. செல்வக்குழந்தைகளிடையே கவனிப்பாரற்ற ஏழைச்சிறுவனாய் அந்த நாயுருவி... என்ன காரணத்தாலோ அதன் பூவையும் காயையும் பரிவோடு, தொட்டு ஒற்றைக்காயைப் பிடுங்கி மென்று தின்னுவாள் பாரதி. கமலத்திற்கு அது பிடிக்கவே பிடிக்காது. தங்கையை மென்மையாகக் கடிந்து கொள்வாள். அடுத்த காயைப் பிடுங்காமல் தடுப்பாள்.

பாரதிக்கு கண்களிலே நீர்முட்டிற்று. மனதினுள்ளே நெருஞ்சி முட்கள் ஊர்ந்தன. உதடுகள் நடுங்கின. உடலிலிருந்த பலமெல்லாம் வடிந்தாற்போல களைப்பு உண்டாகிற்று. நாயுருவிக்குப் பின்னே தெரியும் உடல் பழுத்து உயர்ந்து வளர்ந்த பாலை மரத்தைத் தொட்டு நின்றன கண்கள்.

அந்தச் சுற்றுமதில், அழகான நாற்சார் வீடு, வீட்டின் சாமான்கள், ஆசையாய் உறவு பாராட்டி வளர்த்த மரஞ்செடிகள்... எல்லாமே கமலத்தைப் போல சிதைந்து போய் விட்டன... எல்லாமே.

கமலத்தை எல்லோருமே மாதாளம் பழம் என்று சொல்வார்கள். முற்றிப் பழுத்து செக்கச் செவலென்று சிவந்த செழுமையான மாதாளம்பழம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மாதாளம் பழம், அவர்களின் வீட்டைப் போலவே உடைந்து சிதறி மணிமுத்துகள் பரவி கதை முடிந்து போயிற்று.

''அக்கா...''
''என்னடா?''
''உங்களினுடைய ஆசை என்ன?''
''உம்மை நான் டொக்டராகப் பார்க்கவேணும்...''

செல்லக் கோபம் பாரதியின் முகத்தில் வண்ணத்துப் பூச்சியாகச் சிறகடிக்கும். குரல் சிணுங்கலோடு அதட்டும்.

''உங்களின்ரை ஆசையைக் கேட்கிறேன்...''

கேள்வியோடு அவளைப் பார்ப்பாள் கமலம்.

''உம்முடைய ஆசைதான் என்னுடைய ஆசை. உம்முடைய ஆசைதான் என்ன?...''
''நான் டொக்டராகவே வரவேணும்...''
''நானுந்தான்...''

முகம் பூரிக்கத் தொடர்வாள் கமலம்:

''சாதாரண மக்களுக்கு இந்தத் தொழிலாலை நிறைய நன்மை செய்ய முடியும்...''
''உண்மைதான்...''

கையிலே சட்டென்று ஊசி ஏறிற்று. நினைவு கலைந்தது. பெரிய நுளம்பொன்று திக்குமுக்காடியவாறு விர்ரென்று பறந்தது.

தோல் சுணைத்து எரிந்தது. எரிச்சலோடு தோலை அழுத்தி உரஞ்சினாள்.

காலடியிலே மஞ்சளும் கபில நிறமும் கலந்த பாலை இலைச் சருகொன்று குருவியாகத் தாழ்ந்து பறந்து வந்து அமர்ந்து கொண்டது. அந்த சருகினை பூவொன்றினைப் போன்று மென்மையாக எடுத்தாள். மேற்புறம் பளபளவென்று மஞ்சளும் பச்சையும் கலந்திருந்தது. உள்ளங்கையில் படுத்திருந்த அடிப்புறம் சொர சொரப்பாக இருந்தது. தன்னையறியாமலே விரலில் தடவிவிட்டு ஓரமாக எறிந்தாள்.

இந்த இலையைப்போல, வாழ்வின் நினைவுகளிலே கசந்து போனவையெல்லாம் சருகாக உதிர்ந்து போனால் என்ன, உதிர்ந்துபோன சருகினை வீசி எறிந்தாற் போல மனதிலே கிடக்கும் கசப்பான காயங்கள் யாவற்றையும் எடுத்து எறிய முடிந்தால் எவ்வளவு நல்லதென்றெ நினைத்தபோதே சிரிப்பும் வேதனையும் கயிற்றுப் புரிகளென முறுகின.

அவர்களின் வீடு சிறியதுதான். ஆனால் அழகானது. தன்னுள் கால்வைக்கின்ற எவரையும் வசீகரித்து நெகிழ வைத்து திரும்பத் திரும்பப் பார்க்க வைத்து கவர்கின்ற அழகிய சித்திரம்.

வாசலில் நறுமணங்கமழும் பூக்களின் இதழ்களிலே, தண்ணீர் வார்க்கின்றபோது பூக்கள் மலர்ந்து புன்னகையை உதிர்த்துச் சிலிர்ப்பதாக கமலம் அடிக்கடி சொல்லி புளகாங்கிதமடைந்து அவளே பூவாகி மகிழ்வாள்.

பால்துளிகளாய் பூச்சொரியும் மல்லிகைப் பூக்களின் தாயான செடியை அவள் நேசித்தாள். அதனோடு தொட்டுத் தொட்டுப் பேசுவாள். ஷெல் விழுந்து எல்லாரும் 'பங்க'ருக்குள் தஞ்சம் புகுந்து விட்டு வெளியே வந்ததும் கமலம் ஓடிப்போய் முதன் முதலில் பார்த்தது மல்லிகைப் பந்தலைத்தான்.

எரிந்து சிதைந்து உருக்குலைந்த சடலமாய்க் கிடந்தது மல்லிகை. அதைக்கண்டு பேச்சுமூச்சற்று நின்றவளின் முகம் அதைத்துப் போயிற்று. அன்று பறிபோன அவளது புன்னகையும் மலர்ச்சியும் கடைசிவரை திரும்பி வரவில்லை. கற்பனையாகத் தொலைந்து போயிற்று. அதைப்பற்றி யார் அக்கறை கொண்டனர்?

''அக்கக்கா...''

வேப்பம்பூவின் மென்மையோடு தோளைத் தொட்ட குரலிற்காக இடதுபக்கமாகத் திரும்பினாள் பாரதி. வயிற்றைக் குமட்டும் நாற்றத்தினை அணிந்து கொண்டு காவிப்பற்[illegible] சுமதி.

''அக்கக்கா பசிக்குது... பசிக்குது...''

பாரதியின் இதயம் சூடு பொசபொசக்கும் தண்ணீர்ப்பானைக்குள் உடைந்து விழுந்து வெம்மையில் துடிதுடித்தது.

பெற்றோரைக் கண்முன்னே இழந்த கணம், அடுத்த கணத்தினை விழுங்கி முடிவதற்குள் தனது சுயத்தை இழந்து புலம்பத் தொடங்கினவள், ஜனவரி முதலாம் திகதி அதிகாலையில் சரியாகப் பிறந்தவள், பதினாறு வயதாகிவிட்டது.

''அக்கக்...''
''சரி பின்னலை வா..'' முன்னே நடந்தாள் பாரதி.

கைகளைத் தட்டி பரவசமாகத் துள்ளினாள் சுமதி. அவளையறியாமலே இடுப்புமுடிச்சு விடுபட்டு பாவாடை கழன்று பெரிய இலையாய் உதிர்ந்தது. விகற்பமின்றி வந்த அவளைப் பரிவோடு தொட்டன பாரதியின் கண்கள். அப்போதும் அவள் துள்ளியவாறு காட்டுக் கோழிபோல எந்தக் கூச்சமுமின்றி வந்து கொண்டிருந்தாள்.

''சுமதி...''

அவளின் பிடரியைத் தொட்டு அடித்தது பாரதியின் அதட்டல்.

புன்னகையோடு துள்ளலைக் குறைத்தவாறே, ''என்னக்கக்கா'' என்றாள்.

''பாவடையைக்கட்டும்...''

அப்போதே அவளின் கண்கள் பாவாடையைத் தேடின. சருகுத் தரையில் இழுபட்ட பாவாடையைத் தூக்கியபோது, மூக்கினுள் துர்நாற்றம் அறைந்து நுழைந்திட பார்வதி முகத்தைச் சுழித்துக் கொண்டாள்.

பாரதியின் மனம் தலையிலே கைவைத்துப் புலம்பிற்று. விம்மல் சுழித்துக் கரைந்தது.

இவளின் எதிர்கால வாழ்க்கை எப்படி ஆகப்போகிறது?

இவளும் கமலாவைப் போல கொதறக் கொதறச் சிதைக்கப்படமாட்டாள் என்பதற்கு எவரால் உத்தரவாதம் தரமுடியும்?''

''சுமதீ...''
''அக்கக்கா...''
''இந்தப் பாணைச்சாப்பிடும்...''

சந்தோஷமாக வாங்கிக்கொண்டாள்.

சுற்றிலும் பார்த்தாள் பாரதி.

MARCH 08



என்னோடு
பேசும் காற்று
தோட்டத்து மரத்தைச்
சாய்க்கவும் செய்கிறது.
- சல்மா

ஆறுதல் பரிசுக் கதை

NIPU அமுது படைப்பாற்றல் போட்டி

# நான் ஒரு தனி ஆள்

- செ. யோகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களும் செடிகளும் கைகோர்த்து மனிதருக்குப் பாதுகாப்பாம் வேலி கட்டி - நின்றன. அடர்ந்து விரிந்த மரக் குடைகளின் நிழலில் கிழிந்த பாய்களில் உதிர்ந்த கருகுகளாய் கிடக்கின்ற மனிதர்கள்.

குழந்தை ஒன்று கால் கைகளை உதறியவாறு வீசிட்டு அழுதது. எவரின் முகத்திலும் அந்த வீரிடல் சலனமெதையும் தோற்றுவிக்கவில்லை.

தானே களைத்து அழுகையை நிறுத்திற்று. அந்தப்பிஞ்சு.

பாரதி அதனருகே சென்றாள்.

இந்தக் குழந்தையின் பசியை எவரால் ஆற்ற முடியும்?

**குழந்தையின் அழுகை காட்டுக்குருவியாய் எங்கோ பறந்து போயிருந்தது. 'இந்தக் குட்டிப் பேய் எப்ப சாகப்போகுது' என்று மூர்க்கமாகச் சீறிய மனித சர்ப்பம் இப்போது ஒரு தாயாக மார்பகத்துள் அந்தக் குஞ்சினை அணைத்து வைத்திருந்தது. நெற்றியில் பொங்கிய வேர்வை நீராய்த் தெரிந்தது- உள்மன ஈரம்போல.**

மூளைக்காய்ச்சலால் இறந்து போன அந்த இளந் தாயை காட்டில் எறிந்து அந்த அழுகிய நாற்றம் எத்தனை தினங்களாகக் காட்டினை கவ்விப் பற்றி வயிறு குமட்டி அச்சம் கொள்ள வைத்தது.

குழந்தையைப் பார்த்தாள்.
சேற்றுள் அமுங்கி சிதைவுற்ற இளமொட்டாகக் கிடந்தது.
இதன் எதிர்காலம் சதுப்பு நிலமாகத் தெரிந்தது.

தலையை மெல்ல நிமிர்த்திய முகம் வார்த்தைகளை வக்கிரம் சொரியக் கொட்டிற்று:

''இந்தக் குட்டிப் பேய் எப்ப சாகப்போகுது...''

பாரதியின் நெஞ்சினுள் கூரிய அலகாகக் குத்தின அந்த வார்த்தைகள். இப்போது எந்தக் காயமும் நெஞ்சிலே ரணமாவதில்லை. கறையான் புற்றாகி விட்டது மனம்.

பாரதி எழுந்தாள்.

மலைவேம்பின் எற்றில் பாய்ந்த குரங்குகள் வயிற்றை ஒட்டியபடியே இருந்த குட்டியினை வெறுமையாகப் பார்த்தாள். நெஞ்சினுள்ளே அடுக்கடுக்காய் மேவியெழும் கறையான் புற்றுகள்.. பிரிக்கப்பிரிய கூடுகளாகும் துயரங்கள்..

காட்டின் உச்சந்தலையில் சூரியன் உட்கார்ந்தபடி வெய்யிலை உள்ளே கொட்டிற்று. பொறுக்கமுடியாத இலைகள் சட்டென்று கருகி கிரணங்களில் தொங்கியவாறே நிலத்திற்கு விரைந்து இறங்கின. காட்டினுள்ளே உறங்கிய காற்று, வெய்யிலைப் பார்த்ததும் புரண்டு படுத்தது மறுபுறமாக.

குழந்தை வீரிட்டு அழுதது. வெய்யில் தன் உடலுள் ஊசி கொண்டு துளைக்கிறதைச் சொல்லிற்று அந்தக் களைத்து நொந்து ஒலித்த பிஞ்சுக் குரல்.

அது எதனால் அழுகிறது?
பசியால், வேதனையால், தாகத்தால், தனிமையால், அல்லது இவையாவும் கலந்த ஒருமையால்.
யோசித்தபடியே குழந்தையை நோக்கி நடந்தாள் பாரதி.
குழந்தையின் அழுகை காட்டுக்குருவியாய் எங்கோ பறந்து போயிருந்தது. 'இந்தக் குட்டிப் பேய் எப்ப சாகப்போகுது' என்று மூர்க்கமாகச் சீறிய மனித சர்ப்பம் இப்போது ஒரு தாயாக மார்பகத்துள் அந்தக் குஞ்சினை அணைத்து வைத்திருந்தது. நெற்றியில் பொங்கிய வேர்வை நீராய்த் தெரிந்தது, உள்மன ஈரம்போல.

பாரதிக்கு நா வரண்டது. ஆலமரப் பக்கமாக வெட்டிய துரவுதான் தண்ணீரின் இடம். எல்லாரும் சேர்ந்து துப்பரவாய் பத்திரமாய் பொக்கிஷமாகக் காத்து வருகின்ற துரவு. தண்ணீர்த் தேக்கம்.

பிளாஸ்டிக் குடம் ஒன்றை எடுத்துக் கொண்டு நடந்தாள்.

தண்ணீர் குடிக்கிற வேளையிலெல்லாம் கமலம் சீறிப்பாயும் நீரூற்றாக நினைவினைத் தொட்டு சம்பவங்களால் நனைப்பாள்.

எந்த வேளையாயினும் சரி வீட்டில் இருந்தவேளையில் தண்ணீரை சூடாக்கி வடித்துத்தான் யாராயிருந்தாலும் குடிக்க வேண்டும்.

குரல் அருகிலே கேட்டது வீணையின் ஓசையாய்:

''பாரதி, நீ டொக்டராக வரவிரும்பினால் சில விஷயங்களைக் கேட்க வேண்டும். மனித உடம்பில் மூன்றில் இரண்டு பங்கு தண்ணீர். ஆனபடியால் நீ குடிக்கிற தண்ணீரை சூடாக்கி, 'பில்டர்' பண்ணிக் குடிக்க வேண்டும். எல்லாரை விடவும் டொக்டர் ஆரோக்கியமான இருக்க வேண்டும். நல்ல தண்ணீர் குடித்தால்தான் ஆரோக்கியமாக இருக்க முடியும்...''

பாரதியின் கண்கள் கலங்கின.
மனதுள் துயரம் கட்டியெழுப்பிய கறையான் கூடுகளில் நடுக்கம் துளிர்த்தது.

''அக்கா அக்கா ''
அழுதகுரலில் நினைவு கலைந்தாள்.
இராஜேஸ்வரி எட்டு வயதுக் குழந்தை.
''என்ன...''
பதறினாள் அவள்.
''அக்கா, அப்புவை பாம்பு, கறுத்தப் பாம்பு கடிச்சுப் போட்டுது. வாயிலை நுரை கக்குது...''
''எங்கினை?''
''துரவுக்குப் பக்கத்திலை...''
''வா... ஓடி வா...''
களைக்கக் களைக்க ஓடினாள் பாரதி.
துரவின் வாசலில், வாயில் நுரை கக்க மரக்கட்டையாய் கிடக்கும் சுப்பையா.
முதலில் துரவில் இறங்கி நீரைக்குடித்தாள். அவளுக்கே அவள் போக்கு ஆச்சரியமாக இருந்தது. பிறகு சுப்பையா அருகே வந்து, மூக்கருகில் கைவைத்து நாடி பிடித்துப் பார்த்தாள். மூச்சு இறந்து போயிற்று சற்று முன்னர்.

''பாரதி டொக்டருக்குத்தான் நாங்கள் படிக்கவேணும். அப்போதுதான் சாதாரண மக்களுக்கு நன்மை செய்யலாம்'' என்றாள் கமலா அருகே வந்து.

பாரதி தன்னை அறியாமலே அழத் தொடங்கினாள். தன்னிலை மறந்து கதறினாள். இதைப்பார்த்த இராஜேஸ்வரி பரிதாபமாக அலறினாள்:

''அப்பு, யாருமில்லாத என்னை இந்தக் காட்டுக்குள்ளை தனியாக விட்டிட்டுப் போயிட்டிங்களே...'' ●




*நாம் எல்லாம் இழந்தோம்*
*எனினும்*
*வேண்டவே வேண்டாம்*
*எங்களில் சிலரது விடுதலை*
*மட்டும்;*
*விலங்கொடு கூடிய*
*விடுதலை மட்டும்*
*வேண்டவே வேண்டாம்!*
*- சிவரமணி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஸ்ஸின் கதை

— ராமுகாவிஸ்

காலை எட்டு மணி.

வீட்டிலிருந்து மடிப்புக் கலையாத சட்டையும், காற்சட்டையும், கையில் சூட்கேசுமாகக் கிளம்புகிறார் ஒருவர். குளித்துப் பவுடர்பூசிய முகம் பளிங்கு போலத் தெளிவாகவும் பளிச்சென்றும் இருக்கிறது. ஒரு புஷ்பம் போல வீட்டிலிருந்து தெருவுக்கு வருகிறார் அவர். உற்சாகமாகவும் மலர்ந்த முகத்துடனும் அலுவலகத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறார் என்று புரிந்துகொள்கிறோம்.

காலை ஒன்பது மணி.

அலுவலகப் படிகளில் நைந்து நாராய்ப் போன ஓர் உருவம் தளர்நடையுடன் ஏறுகிறது. உடைகள் கசங்கி, தலை கலைந்து... முகத்தில் வழியும் வியர்வையை துடைத்தபடியும், தலைமுடியைக் கைகளால் சரிசெய்தபடியும், எங்கோ ஓட்டப் பந்தயம் முடித்து வருவதைப் போன்ற களைப்பான தோற்றத்துடன் மூச்சு வாங்க லிஃப்ட் வாசலில் போய் நிற்கிறது.

யார் இது?

அடடா! காலையில் பளிச்சென்று மடிப்புக் கலையாத உடைகளுடன் வீட்டிலிருந்து புறப்பட்ட அதே நபர்தான் இந்த அலங்கோலத்தில்.

இடையில் என்ன நடந்தது என்று ஆராய்ந்தால் - அந்த நபர், பஸ்ஸில் வந்து இறங்கியிருக்கிறார் என்று புரிந்துகொள்கிறோம்.

பஸ் பிரயாணம் குறித்து நம் ஒவ்வொருவருக்குள்ளும் சலிப்பு இருக்கிறது. அதிலும் அலுவலக நேரங்களில் பஸ்ஸில் ஏறிப்பயணம் செய்ய நேர்வது எல்லோர்க்கும் துரதிர்ஷ்டமானதாகவே தெரியும்.

பனங்கிழங்கை அடுக்குவது போல ஒவ்வொரு நிறுத்தத்திலும் ஆட்களை ஏற்றி உள்ளே அடுக்கி, அந்த மனித, நெரிசலில் பிதுங்கி மூச்சுத் திணற வைத்து, அலுவலக வாசலில் நம்மைத் துப்பிவிட்டுச் செல்லும் பஸ்ஸை நினைத்தால் நமக்குள் இனிய நினைவுகள் எழ வாய்ப்பில்லை.

ஆனால் தனியே வாகனம் வாங்கி வைத்துக் கொள்ள முடியாத ஒவ்வொருவருக்கும் பஸ்ஸின் தேவை தவிர்க்க முடியாதது. இவ்வளவு குறைந்த கட்டணத்தில் நம்மை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு ஏற்றிச் சென்று இறக்கி விடும் பஸ்களின் பயன்பாட்டை இன்று யாரும் நிராகரித்து விடவும் முடியாது.

பஸ்களின் தேவை நம் வாழ்வில் இரண்டறக் கலந்து விட்டது. அதேபோல் அவற்றின் எண்ணிக்கையும் அதிகரித்து விட்டிருக்கிறது. ''ஒரே பஸ்ஸையும் ஒரே பெண்ணையும் துரத்திக் கொண்டிராதே பின்னால் மற்றொன்று வரும்'', ''பஸ்ஸைத் தவற விடாதே'', ''கடைசி பஸ்ஸைத் தவறவிட்டான்'' என்று பொன்மொழிகள் சொல்லுமளவுக்கு பஸ்ஸும் நம் வாழ்க்கையில் இணைந்திருக்கிறது.

நம் பயணத்திற்கு வேண்டிய பஸ்களின் தேவையை நாம் எப்போது கண்டுபிடித்தோம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே வாகனத்திலேயே பலரின் பயணத் தேவையை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற எண்ணம் எப்போது உருவானது? யார் இந்த பொது மக்கள் வாகனத்தை உருவாக்கிய சிற்பி? அந்த வரலாற்றைத் தெரிந்து கொள்வது அவசியம் மட்டுமல்ல, சுவாரசியமும் ஆனது.

நான்கு நூற்றாண்டுகளுக்கு முன், இந்த மார்ச் மாதத்தில் தான் உலகிலேயே முதலாவது பஸ் போக்குவரத்து ஒரு விழாவாக ஆரம்பிக்கப்பட்டது. 17ம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டை ஆண்ட பதினான்காம் லூயி மன்னர் அந்த விழாவுக்குத் தலைமை தாங்கினார். பரீஸ் நகரின் இரண்டு ஆணையாளர்களும் அந்த நிகழ்வைத் தொடங்கி வைத்து உரையாற்றினார்கள்.

1966ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18ம் திகதி வரலாற்று முக்கியத்துவமுள்ள நாளாக அமைந்தது.

இந்தப் போக்குவரத்துத் திட்டத்தை முதன்முதலில் தனது எண்ணத்தில் உருவாக்கி வெளிப்படுத்தியவர் பிரபல கணித மேதையும் தத்துவஞானியுமான 'பிளே பாஸ்கல்' என்ற பிரெஞ்சுக்காரர். இவர் டக் டி ரோஹன் என்ற தொழிலதிபருடன் இணைந்து இந்த பஸ் திட்டத்தைச் செயற்படுத்தினார்.

வெள்ளோட்டம் நடைபெற்ற அன்று பயணம் நடைபெற்ற பரீஸ் நகர வீதியில் காலாட்படை வீரர்களும், குதிரைப்படை வீரர்களும் அணிவகுத்து நிற்க குதிரைகள் பூட்டிய இந்த பஸ்வண்டிப் பயணம் ஆரம்பமானது.

ஆமாம்! பஸ் என்றதுமே பாண் வடிவில் அமைந்த ஒரு வாகனம்தான் நமக்கு ஞாபகத்தில் வரும். அந்த வடிவில் இல்லாமல் சிறிதாக அமைந்த வாகனத்திற்கு 'மினிபஸ்' என்று பெயர் சூட்டியிருக்கிறோம்.

ஆனால் வாகனத்தின் வடிவத்தை வைத்து அழைக்கப்படுவதல்ல 'பஸ்' என்ற பெயர். ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குச் செல்லும் பலரையும் பொது நோக்கோடு ஒரே வாகனத்தில் ஏற்றி குறைந்த செலவில் பயணிக்க வாய்ப்புச் செய்து தருவதே 'பஸ்' என்பதன் அர்த்தம்.

'ஓம்னி பஸ்' என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து வந்ததே பஸ் என்ற இந்தச் சொல். லத்தீன் மொழியில் 'ஓம்னிபஸ் ஒம்னிபஸ்' என்றால் ''எல்லாம் எல்லோருக்கும்'' என்று அதற்குப் பொருள்.

எல்லோருக்கும் பொதுச் சொத்தாக அமைந்த இந்தப் பயண வாகனத்தை பஸ் என்று அழைக்கலாயினர்.

குதிரைகள் பூட்டிய வண்டியாக முதன்முதலில் ஆரம்பித்த இந்த பஸ் பயணத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பரீஸ்நகர ஆணையாளர்கள் இருவரும் இரண்டரைச் சதத்திற்கு ஒருவர் பிரயாணம் செய்ய முடிந்த இந்த அற்புத கண்டுபிடிப்பைப் பாராட்டிப் பேசினர். இந்தத் திட்டத்திலுள்ள நன்மைகளையும், அதே சமயம் பலரும் இணைந்து பயணம் செய்யவிருப்பதால் பிரயாணிகள் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்திப் பேசினர்.

முதல்நாள் நிகழ்வில், குதிரை பூட்டிய ஏழு பஸ் வண்டிகள் பிரயாணத்திற்கு விடப்பட்டன. ஒவ்வொரு பஸ்ஸிலும் எட்டுப் பயணிகளுக்கு ஆசனங்கள் இருந்தன. ஓட்டுனர்கள் அரச சின்னம் பொறித்த சீருடைகள் அணிந்திருந்தனர். பிரயாணிகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் குறித்த நேரத்தில்

MARCH 08

*எனது இதயத்தின் அடியாழங்களில்*
*எனது உருவப் படமொன்று*
*மாட்டி வைக்கப்பட்டுள்ளது.*
*கடவுளுக்குத்தான் தெரியும்-*
*அதை யார் எப்போது*
*தீட்டினார்களென்று.*
*அங்கிருக்கிறது அது*
*எனது கண்களுக்கும்*
*எனது நண்பர்களின்*
*கண்களுக்கும் படாமல்.*
*ஆனால் தற்செயலாக*
*நான் அதை ஒருகணம்*
*பார்க்க நேர்கையில்*
*எனது இதயம் நடுங்குகிறது*
*எனக்கும் அதற்குமுள்ள*
*வித்தியாசங்களைக் கண்டு.*

- ∴பெமிதா ரியாஸ்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பஸ் வண்டிகள் புறப்பட வேண்டும் என்று அப்போதே விதி வகுத்தனர்.

பரீஸ் நகரின் ஒரு முனையிலிருந்து மறு எல்லைவரை இந்த பஸ்வண்டி விடப்பட்டது. முதலாவது பயணத்தில் மேன்மை தங்கிய பதினான்காம் லூயி மன்னர் தாமே ஏறிப் பிரயாணம் செய்தார்.

அன்று முதல் முடி மன்னர்களும் வெகு சாதாரணர்களும் பஸ் பிரயாணத்தை சமரசம் உலாவும் இடமாக கண்டனர்.

1827ல் 'என்டர்பிரைஸ் ஜெனரல் தி ஓம்னிபஸ்' என்ற நிறுவனத்தினர் 15 முதல் 18 பேர் வரை ஏறிச் செல்லக்கூடிய பஸ் வண்டிகளைத் தயாரித்து பிரயாணத்திற்கு விட்டனர்.

பல பஸ் வண்டிகள் புழக்கத்திற்கு வந்ததும், அரசு பஸ் பிரயாணம் தொடர்பான சட்டங்களைப் பிறப்பித்தது. குதிரைகள் பூட்டிய அந்த பஸ் வண்டியில் லண்டன் நகரத்தின் ஒரு பகுதியில் இருந்து மறுபகுதிக்கு குறிப்பிட்ட வீதிகள் வழியே செல்ல ஒரே கட்டணமே அறவிடப்பட்டது. இதை எட்டு ஷில்லிங் என அரசு நிர்ணயித்தது. இடையில் பயணிகளை ஏற்றவோ இறக்கவோ கூடாது.

ஆனால் பஸ் முதலாளிகள் இச்சட்டத்தை அப்போதே இரகசியமாக மீறினர். சிறிது தூரம் செல்வோருக்கு நான்கு ஷில்லிங், அதிக தூரம் செல்வோருக்கு எட்டு ஷில்லிங் என அறவிட்டனர். பயணிகள் விரும்பிய இடங்களில் அவர்களை இறக்கிவிட்டனர்.

இவையெல்லாம் அப்போது சட்டவிரோதமாகக் கணிக்கப்பட்டன. இவ்விதமாக நடந்து கொள்ளும் பஸ் ஓட்டுனர்களை கைது செய்யலாம் என அரசு சட்டம் இயற்றியது. ஆனால் பஸ் முதலாளிகள் ஓட்டுனர்களை அவர்களது இருக்கையுடன் சங்கிலியால் பிணைத்துப் பூட்டிவிட்டு சாவியை கையில் எடுத்து வைத்துக்கொண்டனர். இதனால் இடைநடுவில் பொலீசாருக்கு ஓட்டுனர்களைக் கைது செய்ய முடியாமல் போனது.

இந்த இடர்ப்பாடுகளையெல்லாம களைந்து புதிய சட்ட மூலம் ஒன்றைக் கொண்டுவர வேண்டியிருந்தது. பஸ்களில் பிரயாணம் செய்பவர்கள் ஒரு வருக்கொருவர் தொடர்பில்லாத வெவ்வேறு நபர்கள். இவர்கள் நலனைக் காத்துக் கொள்ள வேண்டியது அரசின் கடமை என்னும் வகையிலே 'ஓம்னி பஸ் மசோதா' ஒன்று சட்டமன்றத்தில் கொண்டுவரப் பட்டது.

இதன்படி பஸ் போக்குவரத்தில் பல ஒழுங்குமுறைகள் ஏற்படுத்தப்பட்டன. இந்த பஸ் போக்குவரத்தை ஆரம்பத்தில் பல தனியார் நிறுவனங்களே நடத்திவந்தால் ஒவ்வொரு போக்குவரத்துச் சேவைக்கும் வெவ்வேறு விசித்திர விசித்திரமான பெயர்கள் வர ஆரம்பித்தன.

இப்போது 'சொகுசு பஸ் சேவை', 'குளுகுளு பஸ் சேவை', 'டீலக்ஸ்', சுப்பர் டீலக்ஸ்' என்றெல்லாம் அழைக்கப்படுவதுபோல அப்போது இங்கிலாந்து பஸ் சேவை நிறுவனம் ஒன்று தனது சேவைக்கு 'உல்லாசப் பணிப்பெண்' என்று பெயர் வைத்திருந்தது.

மற்றொரு நிறுவனத்தின் பஸ் வண்டிகளின் பின்புறத்தில் ''என் பெயர் டால்போர்ட் காவலியர். என்னை வாடகைக்கு அமர்த்த ... என்ற எண்ணுக்கு தொலைபேசியில் அழையுங்கள்'' என்று எழுதியிருந்தது.




ஒரு ஆடுகுதிரையின் மீது
ஒரு குழந்தை ஆடுகிறது.
அது மரக்குதிரை
குழந்தையின் ஸ்பரிசம் அறியாதது.
குழந்தை குதிரையை அடிக்கிறான்.
தனது திறமையைக் கண்டு
தன்னையே மெச்சிக் கொள்கிறான்.
அவன் வளர்ந்து பெரியவனாகிறான்.
மரக்குதிரையில் மீண்டும்
சவாரி செய்கிறான்.
ஒரு சடங்கின் மூலம்
தன் இளமையை அறிவிக்கிறான்.
இரவு கழிந்ததும்
குதிரை உருமாறுகிறது.
குதிரையை அடிப்பவன்
தன்னைத் தானே
மெச்சிக் கொள்கிறவன்
மாறாமலேயே இருக்கிறான்:
எஜமானனாக
சவாரி செய்பவனாக
கணவனாக.

- கிஷ்வர் நஹீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கல்கத்தாவில் ஓடிய பஸ் வண்டிகளுக்கு 'புஷ்பரதம்', 'டூபான் மெயில்', 'தேசபந்து' என்றெல்லாம் பெயர்கள் இருந்தன.

1825-1905ல் வாழ்ந்த ஜுல்வெர்ன் ஐரோப்பாவில் பிரபலமான எழுத்தாளர். ''உலகைச் சுற்றி எண்பது நாட்கள்'', ''பலூனில் ஐந்து வாரம்'' என்பன அவர் எழுதிய நூல்களில் சில. ஒல்லாந்தில் உள்ள ஒரு பஸ் சேவை, தனது மிகச் சிறந்த உல்லாச பஸ்ஸுக்கு ''ஜுல் வெர்ன்'' என்று பெயரிட்டிருந்தது.

அந்நாளைய அமெரிக்காவில் ''ஓடும் வேட்டைநாய்'', ''ஐந்து நட்சத்திரங்கள்'' என்றெல்லாம் பஸ் சேவைகள் இருந்தன.

துருக்கியில் ஓடிய எல்லா பஸ்களுக்கும் பெயர் 'அர்ஸ் லான்' அதாவது 'சிங்கம்' என்று அர்த்தம்.

பஸ் சேவை விரைவிலேயே உலகெங்கும் பிரபலமானது. 1895 மார்ச் 18ல் முதன் முதலில் பெட்ரோலினால் ஓடும் பஸ் வண்டி வடக்கு ரைன்லாந்தில் அறிமுகம் செய்யப்பட்டது. ''பஸ்ஸைத் தவறவிடாதே'', ''கடைசி பஸ்ஸைத் தவறவிட்டான்'' என்றெல்லாம் சாதாரண நடைமுறையில் ஆங்கிலப் பழமொழிகளும் உருவாகிவிட்டன.

இன்று பஸ் சேவை இல்லாத நாடுகளே இல்லை எனலாம். பொதுமக்களின் பிரணாயத்திற்கு அத்தியாவசியம் என்று ஆகிவிட்டது. நகரத்திற்குள் ஓடும் பஸ்களில் தான் நெரிசலும், உடம்பைக் கூனிக் குறுக்கி வைத்துக் கொண்டு சேர்க்கஸ் செய்ய வேண்டிய தேவையும் இருக்கிறது.

தூரப்பயணம் என்றால், ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து பின்னோக்கி ஓடும் காட்சிகளையும், புதுப்புது இடங்களையும் பார்த்தபடி செல்லும் அனுபவம் அலாதியானது. முகத்தில் மோதும் எதிர்க்காற்றை அனுபவித்தபடி உறங்கிப் போவோரும் உண்டு. அந்த இன்ப லயிப்பில் பலருக்கு கவிதைகளும் கதைகளும் கூட சாத்தியமாகின்றது.

என்னதானிருந்தாலும் மனிதக் கண்டுபிடிப்புகளின் மற்றுமொரு உன்னதம் பஸ்!







உலக வர்த்தகக் கழகத்தின் நான்காவது அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு கட்டார் நாட்டின் தலைநகரான டோஹாவில் கடந்த நவம்பர் மாதம் நடைபெற்றது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு அமெரிக்காவின் சியாட்டி நகரில் நடந்த மூன்றாவது மாநாடு தோல்வியில் முடிவடைந்தது போல இந்த நான்காவது மாநாடும் தோல்வியில் முடிவடைந்துவிடுமோ என்ற பயம் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஏற்கனவே இருந்து வந்தது.

எனவே இந்த நாடுகள், ''வர்த்தக முதலீடு; வர்த்தகப் போட்டி; வர்த்தக வரிகள்; அரசாங்க கொள்முதல்'' என்ற நான்கு புதிய அம்சங்கள் குறித்து இம் மாநாட்டில் தீர்மானித்துவிட வேண்டும் என்பதில் வெகு அக்கறையாக செயல்பட்டன.

ஆனால் ஏழை நாடுகள், ''ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களையே இந்த ஏகாதிப்த்திய நாடுகள் முறையாக அமுல்படுத்தவில்லை. இந்த நிலையில் புதிய தீர்மானங்கள் போடத் தேவையில்லை'' என அறிவித்தன.

டோஹா மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னரே உலக வர்த்தகக் கழகம் ஒரு நகல் தீர்மானத்தைத் தயாரித்து, உறுப்பு நாடுகளுக்கு கையளித்திருந்தது.

ஆனால் இந்த நகல் வரைவை இந்தியா உட்பட பெரும்பான்மையான நாடுகள் நிராகரித்துவிட்டன. இதனால் நவம்பர் 13ல் முடிவுபெற இருந்த மாநாடு மேலும் ஒருநாள் நீடிக்கப்பட்டு, இரண்டு விளக்கங்களோடு அனைத்து உறுப்பு நாடுகளாலும் நவம்பர் 14ல் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

டோஹா மாநாட்டிற்குச் சென்ற ஏழை நாடுகளின் அமைச்சர்கள், ''உலக வர்த்தகக் கழகத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஏகாதிபத்திய நாடுகள் நாணயமாக நிறைவேற்ற வேண்டும்; ஐரோப்பிய நாடுகள் விவசாயத்திற்குக் கொடுத்துவரும் மானியத்தைக் குறைத்துக் கொண்டு, விவசாயப் பொருட்களுக்கான ஐரோப்பியச் சந்தையை ஏழைநாடுகளுக்குத் திறந்துவிட வேண்டும்; ஏழை நாடுகள் அமெரிக்காவிற்குத் துணி ஏற்றுமதி செய்வதற்கு இருக்கும் அளவுக் கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும்'' என வலியுறுத்திய போதிலும் காமராஜர் பாணியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆகட்டும் பார்க்கலாம்'' என்ற உப்புச் சப்பற்ற பதிலே அந்நாடுகளிடமிருந்து ஏழை நாடுகளுக்குக் கிடைத்தது.

ஏழைநாடுகள் விவசாயத்திற்கு 1000 கோடிரூபா மானியம் கொடுத்தால் அதை நிறுத்த வேண்டும் என உத்தரவிட்டு மிரட்டும் உலக வர்த்தகக் கழகம் ஐரோப்பிய நாடுகள் விவசாயத்திற்கு 15 இலட்சம் கோடி ரூபா மானியம் ஒதுக்கி வருவதைக் குறைப்பது பற்றி ஏழைநாடுகள் பேசினால் ''2003ம் ஆண்டுக்குப் பிறகு பேசித் தீர்க்கலாம்'' என கடத்திவிட்டது.

இப்பொழுது ஏகாதிபத்திய நாடுகள் முன்வைத்துள்ள நான்கு புதிய அம்சங்கள் ஏழைநாடுகளின் சுதந்திரம், சுயாதிபத்தியம், இறைமை என்பனவற்றை அழித்தொழிக்கும் மிகவும் அபாயகரமான மறு காலனியாதிக்க கொள்கைகளாகும்.

''வர்த்தக முதலீடு'' என்பது ஏழை நாடுகளில் அந்நாடுகளின் உள்நாட்டு (தேசிய) மூலதனத்திற்கும் வெளிநாட்டு மூலதனத்திற்கும் இடையிலான பாகுபாட்டை முற்றாக நீக்கிவிடும். அத்துடன் கேந்திரமுக்கியத்துவம் உள்ள இராணுவத்துறை உட்பட அனைத்து துறைகளிலும் 100 வீதம் முதலீடுகளை ஏழைநாடுகளில் பன்னாட்டு நிறுவனங்கள் இட் வழிகோலும்.

''வர்த்தக வரிகள்'' என்பது பன்நாட்டு நிறுவனங்கள் மீது வரிவிதிக்கும் ஏழை நாடுகளின் இறையாண்மை உரிமையை அவற்றுக்கு வசதியாக வரிகுறைப்புச் செய்வதற்காக உலக வர்த்தகக் கழகத்திற்கு கைமாற்றுவதாகும்.

''அரசு கொள்முதல்'' என்பதைப் பொறுத்தவரையில் ஏழைநாடுகளில் விவசாயிகளிடமிருந்து அந்த நாட்டு அரசு விளைபொருட்களை கொள்வனவு செய்யும் உரிமையை நீக்கிவிடும் சதியாகும். இனிமேல் அந்நாட்டு கொள்வனவு டென்டர்களில் பன்னாட்டு நிறுவனங்களும் கலந்துகொள்ளும் ஏற்பாட்டை உலக வர்த்தகக்கழகம் ஏற்படுத்தி ஏழை நாடுகளின் முழு வளங்களையும் ஏகாதிபத்திய நாடுகள் சூறையாடிச் செல்ல வழிசமைத்துள்ளது.





சுருக்கமாகச் சொன்னால் இந்தப் புதிய விஷயங்கள் குறித்து உலக வர்த்தகக் கழகத்தில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகள், ஏழை நாடுகளிடம் இருக்கும் அற்பசொற்ப அரசியல், பொருளாதார, கலாசார, சுற்றுச்சூழல் உரிமைகளையும் இல்லாதொழிப்பதற்கு ஏகாதிபத்திய நாடுகளுக்கு வழிசமைத்துக் கொடுப்பதே தவிர வேறல்ல.

ஆனால் அதே நேரத்தில் ஏகாதிபத்திய நாடுகளின் இந்தச் சதித்திட்டங்களை எதிர்த்துப் போராடுவதில் உலக மக்களின் அக்கறையும் உணர்வுகளும் அகதிகரித்துச் செல்வதையும் காணமுடிகிறது.

ஐரோப்பிய அரசியல் அறிஞர் அண்மைக் காலத்தில் குறிப்பிட்டது போல,

''ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் கோபம் கொண்ட அகதிகளால் ஐரோப்பிய நாடுகள் நேரடியாகவே கைப்பற்றப்படுவதிலேயே வளரும் நாடுகளின் இத்தகைய செயல்கள் முடியும் போலத் தோன்றுகிறது''.

- எஸ். சண்முகம்



## உலக வர்த்தகக் கழக டோஹா மாநாடு

# மறுகாலனியாதிக்கத்திற்கு செங்கம்பளம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மற்றுமொரு நடிகையின் மரணம்

**ஷோ**பா, சிலுக்கு ஸ்மிதா, ராணி பத்மினி, படாபட் ஜெயலட்சுமி, விஜி என்று தொடரும் நடிகைகளின் மர்மமான மரணப்பட்டியலில் மற்றுமொரு மரணம்!

கடல்பூக்கள், மனுநீதி, தவசி போன்ற தமிழ்ப்படங்களில் நடித்த பிரதியுஷா இறந்துவிட்டார்.

தற்கொலையா, கொலையா என்ற விசாரணைகள் தொடர்கின்றன. உண்மை என்ன என்பதை அறியமுடியாமல் நாளுக்கு நாள் வரும் செய்திகள் மாறி வருகிறது. கடைசியில் இதுவும் தற்கொலையாகவே அறிவிக்கப்பட்டு பொலிஸ் விசாரணை முடிக்கப்பட்டு விடலாம்.

மர்லின் மன்றோவில் ஆரம்பித்த நடிகைகளின் மரணம் குறித்துத் தொடரும் இந்த மர்மம், இதோ இன்றைய பிரதியுஷா வரை, அதிலுள்ள புதிர் விடுவிக்கப்படாமலேயே அவர்கள் உடலோடு சேர்ந்து அதுவும் புதைந்து கொண்டிருக்கிறது.

இதற்கு முந்திய நடிகைகளின் தற்கொலை தனியாகவே நிகழ்ந்திருக்கிறது. பிரதியுஷாவின் மரணம் அவரது காதலருடன் நிகழ்ந்திருக்கிறது.

ஆந்திராவைச் சேர்ந்த பிரதியுஷா ஹோட்டல் மனேஜ்மெண்ட் படித்துக் கொண்டிருந்தவர். கல்லூரியில் சித்தார்த்த ரெட்டிக்கும் இவருக்குமிடையில் காதல் மலர்ந்திருக்கிறது.

ஹைதராபாத்தில் அழகிப் போட்டியில் 'மிஸ் ஸ்மைல்' அதாவது அழகான புன்னகைக்குரியவராக இவர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இவரது அழகிலும் புன்னகையிலும் மயங்கி பணக்காரவீட்டு வாலிபனான சித்தார்த்த ரெட்டி காதல் வயப்பட்டு இவரைச் சுற்ற ஆரம்பித்திருக்கிறார்.

பிரத்தியுஷா வீட்டில் இந்தக் காதலைக் கேள்விப்பட்டு மகளைக் கட்டிவைத்து அடித்திருக்கிறார்கள். வீட்டிற்குள் அடைத்துப் பலநாட்கள் பூட்டி வைத்திருக்கிறார்கள். இருந்தும் பிரதியஷாவின் பிடிவாதம் வென்று, அவரது பெற்றோர் இறுதியில் அவர்களது கல்யாணத்திற்குச் சம்மதம் தெரிவித்திருந்தார்களாம்.

இதற்கிடையில் பிரதியுஷாவுக்கு தெலுங்குப்படம் ஒன்றில் நடிக்க அழைப்பு வந்தது. முதலில் நடிப்பதில் விருப்பமில்லாததால் உறுதியாக மறுத்திருக்கிறார். ஆனால் ஆண் நடிகரைத் தொடாமலே நடிக்கும் கதாபாத்திரம் என்று எடுத்துச் சொல்லி அவரைச் சம்மதிக்க வைத்திருக்கிறார்கள்.

தமிழில் சத்யராஜ், மீனா, ரோஜா ஆகியோர் நடித்த 'வள்ளல்' படத்தில் சங்கீதா நடித்த பாத்திரத்திலேயே தெலுங்குப் படத்தில் பிரதியுஷா அறிமுகமானார். படம் வெற்றிபெற பிரதியுஷாவை சினிமா பிடித்துக் கொண்டுவிட்டது.

சினிமாவில் தனக்கென ஓரிடத்தைப் பிடித்துக் கொண்டுவிட்ட நிலையில் இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. காரில் வெளியே சென்ற பிரதியுஷாவும், காதலரும் ஒரு குளிர்பானக் கடைக்கு முன்னால் காருக்குள்ளேயே உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர். பிரதியுஷா இறந்துவிட்டார். சித்தார்த்த ரெட்டி பிழைத்துக் கொண்டார்.

தற்கொலையோ, கொலையோ நடிகைகள் பிரபலமாக இருக்கும்போது அவர்களை மரணம் துரத்தக் காரணம் என்ன?

இவர்கள் மனதளவில் கோழைகளாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது.

மிக இளவயதிலேயே அனுபவமில்லாத சினிமாத் துறைக்குள் நுழைந்து, ஆதிக்கம் மிகுந்த ஆண்களின் உலகுக்குள் முட்டி மோதி, நடிகையாகத் தன்னை ஸ்தாபித்துக்கொள்வது சுலபமான காரியமல்ல. மன உறுதியும், பிரச்சினைகளைச் சமாளித்து முன்னேறும் திடமும் கொண்டவர்களே நடிகைகளாக மேலுக்கு வருகிறார்கள்.

தவிரவும் சினிமாவில் கிடைக்கும் பணக்கார வாழ்க்கைக்கு முன்னால், வறுமையான ஒரு காலகட்டத்தையும் இவர்கள் கடந்திருக்கிறார்கள்.

அங்கிருந்து உறுதியோடு வாழ்க்கையை எதிர்கொண்டு முன்னுக்கு வந்தவர்கள் கோழைத்தனமான தற்கொலை முடிவுக்குப் போவது ஏன்?

திருமணத்துக்கு முன் அல்லது காதலுக்கு முன் அவர்களிடமிருந்த மன உறுதி, திருமண வாழ்க்கை

MARCH 08

குசினித் தேனீர்க் கோப்பைக்குள்
ஊறிப் பருத்துக் கிடக்கும் உன் தலையையும்
அம்மன் கோயிலில் சரணாய்க் கிடக்கும் - உன்
கால்கள் ஒரு சோடியையும் உடலில் பொருத்தி,
ஊருக்கு வெளியே வந்து பார் -
குட்டி இளவரசிகளின் கண்களை ஒருக்கால்.
அவை மொழிந்து தீர்க்கும்
நம்மில் சிலரின் அடிப்படைத் தேவைகள்
போதும் போதுமென சிறிது அதிகப்படியாகவே
பூர்த்தியாகி விட்டதைப் பற்றி.

- ஆழியாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது காதலுக்குப் பின் குலைந்து போவதையே இது வரைக்குமான நடிகைகளின் மரணத்திலிருந்து நாம் பொது வாகக் கண்டுகொள்ள முடிகி றது.

பெரும்பாலும் நடிகைகளில் திருமண வாழ்க்கை மூன்று விதங்களில் அமைகிறது.

1. விருப்பப்பட்டவர்களுடன் அமைத்துக் கொள்ளும் காதல் திருமணம் (இது பெரும்பாலும் பெற்றோரை எதிர்த்துக் கொண்டு வீட்டைவிட்டு ஓடி நடை பெறுவது)

2. சினிமாத் துறையைச் சார்ந்த ஒருவரை இஷ்டப்பட்டுத் திருமணம் செய்து கொள்ளுதல். (பெரும்பாலும் வயதில் மூத்தவராக, ஏற்கனவே திருமணம் செய்து கொண்டவராக அவர் இருப்பார்.)

3. யாராவது ஒரு தொழிலதிபருடனான நிச்சயிக்கப்பட்ட திருமணம்.

இந்த மூன்று நிலைகளிலுமே ஒரு நிச்சயமற்ற தன்மை இருப்பதைப் பார்க்கலாம். அதனாலேயே இவற்றில் பெரும்பாலான திருமணங்கள் விவாகரத்திலும், தற்கொலையிலும் முடிந்து விடுகிறது.


நடிகை, தான் தெரிவு செய்துகொண்ட தொழிலின் மூலம் பகிரங்கமானவராகி விடுகிறார். அவரது தொழில் நிமித்தம் வெவ்வேறு ஆண்களுடன் தொட்டு, உரசி, ஆடிப்பாடி நடிக்க வேண்டியிருக்கிறது. இது பல்லாயிரம் கண்கள் பார்க்க நடக்கிறது.

ஆனால் சமூகத்தில், திருமணம் செய்து கொள்ளப்போகும் பெண் ஒழுக்கமானவளா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பாதவர்கள் கிடையாது. இது உலக நடைமுறை.

நடிகைக்கோ தன் ஒழுக்கத்தைப் பற்றிப் பேசவே முடியாத நிலைமை. பேசினாலும் நமது சமூக அமைப்பில் யாரும் காது கொடுத்துக் கேட்கப் போவதில்லை. அக ஒழுக்கம் என்பதெல்லாம் கண்ணுக்குத் தெரியாத சங்கதி.

எனவே நடிகையானவள் சமூகத்தின் கணிப்பில் ஒரு சராசரித் திருமண வாழ்வுக்குத் தகுதியில்லாதவள் ஆகி விடுகிறாள்.

இப்படி உடையணிந்து உரசி நடித்து, உலகத்தின் பார்வைக்கும், பல்வேறு ஊகங்களுக்கும் தன்னைத் தந்துவிட்ட நடிகைக்கு சாதாரண திருமண வாழ்க்கை சாத்தியமில்லாமல் போய்விடுகிறது.



இதையெல்லாம் தாண்டி இவர்களை மணக்க ஒரு ஆண் வரவேண்டுமென்றால் அவன் அந்தத் தொழிலைப் பற்றி நன்றாக அறிந்தவனாக இருக்க வேண்டும். அவளது நடிப்பு சார்ந்த நடவடிக்கைகளையெல்லாம் அந்தத் தொழிலின் தேவை என்று அறிந்து கொண்டு, அதற்கும் அப்பால் அவள் மனதைப் புரிந்து காதலிப்பவனாக வேண்டும்.

ஆனால் நாமறிந்த கதையெல்லாம் தலைகீழாகவே புரிந்த, சினிமாவை நன்கு புரிந்த பிரபலஆண்களும் நடிகையின் வாழ்வையும், அவளது நிர்க்கதியான நிலைமையையும் ஏமாற்றிச் சூறையாடியவர்களாகவே இருக்கிறார்கள்.

நடிகையாக வருகிறவர்களுக்கு, முதலில் சினிமாத் துறையானது வறுமையை வெல்லக் கிடைத்த அதிர்ஷ்டச் சீட்டாகவே தெரிகிறது.

மெல்ல மெல்ல அத்துறையிலிருக்கும் ஆண்களால் சுரண்டப்பட்டு, வழுக்குப் பள்ளத்தின் விளிம்பில் கால் வைத்துவிட்டவர்களாகத் தங்களை அந்தச் சூழலுக்கு இழந்துவிட வேண்டியவர்களாகிறார்கள்.

அதன்பின், அவளை நம்பியிருக்கும் குடும்பத்தினரைச் சந்தோஷமாக வைத்திருக்க வேண்டிய பொறுப்பு அவள் தலையை அழுத்த ஆரம்பிக்கும். வீட்டினரும் அவளை அந்தச் சூழலிருந்து விலகவிடாமல் முழுதுமாகச் சுரண்டப்பார்கள்.

மனம் விரும்பாமலே வெயில், மழை, குளிர், இரவு, பகல், விதவிதமான எண்ணங்களைக் கொண்ட ஆண்களின் சூழலில் மாட்டிக் கொள்ளுதல் என எல்லாவற்றுக்கும் ஒத்துழைத்துப் போக வேண்டி வரும். உள்ளம் மட்டும் தனக்கென ஒரு நிம்மதியான வாழ்வைத் தேடி அலைபாயும்.

இந்த நேரத்தில் சினிமாத் துறையிலேயே அவர்கள் பழகும் யாராவது ஒரு ஆணின் பழகும் முறையால் ஈர்க்கப்பட்டு இரண்டாம் தாரமாகவேனும் அவர்களோடு சேர்ந்திருக்க இசைந்து விடுகிறார்கள்.

இது அமையாதவர்கள் முதிர் கன்னிகளாகும் வரை சுற்றத்தாருக்கென உழைத்துவிட்டு, அவர்களை அவர்களத அழகுக்காகவும், பணத்திற்காகவும் புகழுக்காகவும் மணக்க முன்வரும் தொழிலதிபர்களுக்கு மணமுடித்து வைக்கப்படுகிறார்கள். இந்தத் திருமணங்கள் பெரும்பாலும் மனம் ஒன்ற முடியாமல் விவாகரத்தில் முடிகின்றன.

இந்தவகை திருமணங்களில் உள்ள அனுகூலம், இவற்றின் விளைவாக நடிகைகள் தற்கொலை முடிவுக்குப் போவதில்லை.

தனது தொழிற்துறையைச் சேர்ந்தவராலும், விரும்பிக் காதலித்தவராலுமே நடிகைகளின் தற்கொலைகள் நடந்திருக்கின்றன. இந்த உறவுகள் பொய்த்துவிடும் போதுதான் அவர்களுக்கு வேறு வாழ்க்கையைக் கற்பனை செய்ய முடியாமல் சாவை நோக்கித் தள்ளப்பட்டுவிடுகின்றனர்.

மர்லின் மன்றோவிலிருந்து இன்றைய பிரதியுஷா வரை எல்லா மரணங்களிலும் உள்ள ஒற்றுமை, இந்த அனைவருமே நிம்மதியான வாழ்வை எதிர்பார்த்து, அது கிடைக்கப் பெறாமல் அவர்கள் நம்பிய ஆண்களால் வஞ்சிக்கப்பட்டு இறந்ததுதான்.

நாமெல்லோரும் இந்தச் செய்தி முடிந்து அடுத்த பரபரப்புச்செய்திக்காகக் காத்திருக்கிறோம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதுக்க(வி)தை

# (தற்)கொலை ஒன்று

சி. சாரங்கா

இவன் தலைகுனிந்திருந்தான். முன்னால் இருப்பவர் ஏழு வருடங்கள் பழக்கமுடையவர். வயதிலும் காசிலும் மூப்பு இவனைக் காட்டிலும். கிழப்பருவம் நோக்கிய வயதின் சாய்வை வெறுத்து நடுத்தர வயது பேணும் பிரயத்தனம் அதிகமான அவர்.

இவனது நடையிலேயே அவருக்கு விஷயம் புரிந்து விட்டிருந்தது.

நடக்கையில் வலதும் இடதுமான கால்கள் ''நான் மாட்டேன்'' என முணுமுணுத்ததை இவன் மட்டும் கேட்டது போல தொடைகளுரசத் தயங்கியிருந்தான்.

அவருக்குள் கோபம் பற்றிற்று. கடன்கள் இப்படித்தான். கொடுக்கப்படாதபோது அவை காற்றாகும். மனதோரத்தில் எங்கோ முடங்கியிருந்த கோபமுனை கண்டுகொண்டு அருகில் போய் ''ப்பூ... ப்பூ...'' என ஊதும். விசிறும்.

இங்கும் விசிறியிருக்க வேண்டும்.

''எதிர்பார்த்த இடத்திலையிருந்து வரேல்லை.''

இருபது வயதுக்குரிய ஆண்குரலாய் இல்லை அவனது. குற்றவுணர்வில் தழைந்து பலவீனமாகி பெண்ணாயிற்று அது.

''வழமையாய்ச் சொல்லுறது தானே...''

அவரது குறுக்கறுப்பு இவனது மெய்யை இருகூறாக்கி வீசிற்று. தொடர எத்தனித்த வார்த்தைகள் நினைவுலகில் சடுதியாய் அழிந்தன. ஊமையானான்.

உடல் குறுகிற்று. அவமானத்தில் சிறுத்ததாய் உணர்ந்தான்.

''மாமா...''

சிறுகுரல் வீணையின் மென்தந்தி மீட்டலாய். சின்னப்பெண்.

வறுமையை ஏய்த்த அழகு.

சுருள்முடி ஒற்றையாய் உச்சியில் ஆடிற்று. வயது ஆறின் தொடக்கமாகலாம்.

''வாறன்.... சைக்கிளோடை அங்க நில்லம்மா...''

குரலுக்குத் திரும்பியவர் பார்த்துக்கொண்டே இருந்தார்.

கோபத்தை வீசியெறிந்துவிட்ட முகம். மிருதுவாக்க முயற்சித்தது புரிந்தது. குரல் தழைந்தது.

''இங்கை... வாம்மா...''

பெண் கண்ணில் மிரட்சி.

அவள் கண்பாவிய பொம்மை எடுத்துக் கொடுத்தார்.

வாங்கியவள் விரல் பற்றிய போது விடுவிக்க சிரமப்பட்டார்.

உட்கார்த்தப்பட்ட பெண் பொம்மையில் தீவிரப்பட்டது.

நெற்றியில் விழுந்த சுருள்முடி நீவினார். நிற்க மறுத்தது.

தடித்த விரல்கள் கன்னத்தில் பதிந்தன. வழுவழுத்த கழுத்தை வருடின. அவரது விழிகள் இரையில் தீவிரப்பட்ட ஓநாயது.

அவஸ்தையாய் உணர்ந்தான்.

கோபத்தின் சாயலே அவரில் இல்லை. கழிக்கப்படாது கடன் அழியுமா? போவதாய் எழுந்தான்.

அவளை வெறியோடு இழுத்து முத்தமிட்டார்.

வலிந்துரிமை கொண்டதில் சடுதியாய் போடப்பட்ட பொம்மையை மீண்டும் எடுக்காதிருந்தாள் அவள்.

மாமாவோடு ஒண்டினாள். ஒருவித நடுக்கம் பரவிய மென்னுடல் இவனில் படிந்தது. பெண்மையின் விழிப்போ?

எதுவும் சொல்லாது போகப்புறப்பட்டான்.

''ஆறுதலாய்த் தரலாம் வட்டி வேண்டாம்''

அவர் குரல் துரத்திற்று திரும்பினான். நாவால் உதடு தடவினார்.

''வாற பொழுதிலை குட்டியைக் கூட்டிட்டு வாவன்'' கண்சிமிட்டினார்.

மனதில் ஏதோ ஒருவகை மிருகத்தின் நினைப்பு. ஓராயிரம் பேர் இவனைச் சூழ்ந்து ஒரே கணத்தில் காறி உமிழ்ந்தார்கள்.

எதிர்க்கும் தகைமையில்லை. எச்சில் வழிய நடந்தான்.

மறுநாள் கணவனற்ற அக்காவின் குடும்பத்தைக் காக்கத் திராணியற்ற காரணமாம்...

தூக்கில் தொங்கியிருந்தான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்பவை மட்டுமல்ல சும்மா இருப்பவையும் அழிக்கப்படும்

மாதாந்த பௌர்ணமி நாளில், நூல்களை வெளியிடுவதன் மூலம் வாசகர்களிடையே 'புத்தகப் பண்பாட்டை' வளர்ப்பதற்கு உழைத்துவரும் தேசிய கலை இலக்கிய பேரவையைச் சேர்ந்தவர்களை பாராட்டுதல் வேண்டும்.

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான். அருகிவரும் வாசிப்புப் பழக்கத்தை தமிழ்ச் சமூகத்திடையே விதைத்துவரும் தேசிய கலை இலக்கிய பேரவையின் பணி இன்றைய சூழலில் இன்றியமையாதது.

இன்று புத்தகம் ஒன்றை வெளியிடுவதால் எழுத்தாளனும் சரி, நூல்களை வெளியிடும் அமைப்புக்களும் சரி பாரிய நிதி நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். ஆயினும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் தரத்தினை கவனத்திற் கொள்ளாமல் பல நூல்கள் வெளிவந்து கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

உலக வங்கியின் திட்டத்தின் கீழ் கல்வி, உயர்கல்விஅமைச்சினால் புதிதாக வெளிவரும் நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. அந்த நூல்கள் அவர்களின் சட்ட அமைப்புக்குள் உள்ளடங்கியதாக இருக்க வேண்டும் அவ்வளவுதான். மற்றும் நூல்களை கொள்வனவு செய்வதில் இந்து கலாசார அமைச்சு, தேசிய நூலகம் ஆகியன ஈடுபட்டாலும் போதுமான ஊக்குவிப்பு எழுத்தாளனுக்கும் சரி, நூல்களை வெளியிடும் அமைப்புகளுக்கும் சரி கிடைக்கவில்லை என்றே கூறவேண்டும்.

இவ்வாறான இக்கட்டுகளுக்கு முகம் கொடுத்து முன்னேறிக் கொண்டிருக்கும் சில அமைப்புக்களில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் பணி முக்கியத்துவமானது என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

எனினும், அவர்கள் தெரிவு செய்து வெளியிடும் நூல்கள், அவற்றினது கருத்துக்கள், நூலாசிரியர்கள் பற்றி பலருக்கு முகச்சுளிப்புகள் இருக்கின்றன என்பது உண்மையே.

தெரிந்தோ தெரியாமலோ தொடர்ந்து ஒரு கருத்தையே வலியுறுத்தும் நூல்களை வெளியிடுவதும், நூலாசிரியரை வாழ்த்துவதும் என்ற பாணியையே தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகிறார்கள். இந்நூல்கள் வலியுறுத்தும் கருத்துக்களை மறுக்கின்ற அல்லது மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட நூல்களும் ஆசிரியர்களும் புறக்கணிக்கப்பட்டு விடுகின்றனர். இன்னொரு வகையில் இவ்வாறானவர்களை இருட்டடிப்புச் செய்வதானது எந்த நோக்கத்துக்காக 'புத்தகப் பண்பாட்டை' தோற்றுவித்து உழைத்து வருகிறார்களோ அதன் எதிர்வினையையே சந்திக்க நேரிடும்.

மாற்றுக் கருத்தினை கொண்டிராத ஒரு சமூகம், அதாவது முழுச் சமூகமுமே ஒரு கருத்தினைமட்டுமே கொண்டிருந்தால் அது பாசிசத்தினால் ஆளப்படுகிறது அல்லது அச்சமூகம் பாசிசப் படுத்தப்பட்டிருக்கிறது என்பதே உண்மை.



'தக்கன பிழைக்கும்' என்பது இயற்கை விதி. ஆனால் 'எதிர்ப்பவை மட்டுமல்ல சும்மா இருப்பவையும் அழிக்கப்படும்' என்ற மனித விதி 20ம் நூற்றாண்டில் கிடைத்த புதுக்கோட்பாடு.

தேசிய கலை இலக்கியப் பேரவையினால் மேற்கொள்ளப்படும் பணியானது, நல்ல பலனை எதிர்காலச் சந்ததி அறுவடை செய்துகொள்ள உதவ வேண்டும். அதைநோக்கி அவர்கள் முன்னேற வேண்டும். சுயவிமர்சனம் செய்து கொண்டு வளர்ச்சி பெற வேண்டும்.



'ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும்' என்ற இ. முருகையனின் கவிதைத் தொகுதி, 'மணல்வெளி அரங்கு' என்ற இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் சிறுகதைத் தொகுதி ஆகியவற்றின் வெளியீட்டு விழா கடந்த 27.2.2002 அன்று வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் கருத்தரங்கு மண்டபத்தில் பேரவையின் தலைமைச் செயலர் ந. இரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

தேசிய கலை இலக்கியப் பேரவை நிகழ்ச்சியிலிருந்து சிலகாலம் விலகியிருந்த(?) திரு. ந. இரவீந்திரன் மீண்டும் பேரவையின் நிகழ்வொன்றுக்கு தலைமை தாங்கியதும் சில கருத்துக்களை புட்டு வைத்ததும் பங்குபற்றியவர்களின் கடந்தகால ஊகங்களுக்கு அங்கீகாரம் அளிப்பதாக இருந்தது.

''நமது சமூகம் ஒருவரை கடவுளாக்கிக் கொண்டாடும் அல்லது அசுரனாக்கி சாக்கடையில் வீசி எறிந்துவிடும். அமிர்தலிங்கத்தை ஒரு காலகட்டத்தில் கடவுளாக கொண்டாடினார்கள். கால ஓட்டத்தில் சாக்கடையில் வீசப்பட்டார். இலங்கையில் எழுந்த தமிழ்த் தலைமைகளுக்கு இதுதான் நடந்தது...

ஒரு மனிதனின் இரு பக்கங்களையும் அனுசரித்துப் போகக்கூடியதாக நாம் இல்லை. இந்தக் கடவுள் - அசுர வேறுபாடு இந்துமத பாரம்பரியத்தில் இருந்து வந்ததாகவே நான் கருதுகிறேன். இவற்றை நாம் விமர்சன ரீதியாக பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது" என்று தலைமை உரையில் சொன்னார் ந. இரவீந்திரன்.

கலை இலக்கியத் துறையினை விமர்சன ரீதியாக அணுகுகிறவர்களைக்கூட உண்டு இல்லை என்று ஒரு வழி பண்ணிவிடுகிறார்கள். அரசியலை விமர்சன ரீதியாக அணுகியவர்களையும் செல்லமாகத் 'தட்டி'வைத்தார்கள் என்பது வரலாறு.

'ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும்' கவிதைத் தொகுதியினை ஆய்வுசெய்த ஒலிபரப்பாளர் இ. தயானந்தா, முருகையனுக்குரிய எள்ளல், மரபினை உள்வாங்கி புதுக்கவிதை வடிவில் எழுதக்கூடிய வல்லமை கவிஞருக்கு கைவந்த கலை என்றார். அதேபோல யாரையும் மிகச் சாதாரணமாக விமர்சிக்கிற துணிவு அவரிடம் இருக்கிறது என்றார். ஆனால் அதனுள் இன்னொரு பொருளும் பொதிந்திருக்கும். அவர் வலியுறுத்தும் கருத்து இதுதான் என்று எப்பொழுதும் அறுதியிட முடியாது. அப்படி இருப்பதால்தான் அவர் இருக்க முடிகிறதோ என்னவோ?

'மணல் வெளி அரங்கு' நூலை ஆய்வு செய்த ஆசிரியர் திரு. கு. இராகவராஜன் அவர்கள் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தத்ருபமாக படைப்பையும் பாத்திரங்களையும் கையாண்டிருக்கிறார். தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இந்நூலை கையில் வைத்திருக்க வேண்டும் என்றார். ஆனாலும் அங்கிருந்த பலரின் கைகளில் அப்புத்தகம் இருக்கவில்லை, அவர்கள் தமிழராகவே இருந்தும் கூட.

- எஸ். ஜே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தப்ப முடியாத கனவுலகு

- அ. ராமசாமி

சமீபத்திய தமிழ்சினிமா தனது மந்தைத்தனத்தினால் பிரக்ஞையுள்ள தமிழ் உயிரியின் அடிமனத்தில்கூட காயடிப்புச் செய்யும் ஆற்றல் வாய்ந்ததாக விளங்குகிறது. குறிப்பிட்ட இடைவெளிகளில் களிப்பூட்டும் அம்சங்களை நிரப்பி விட்டாலே திரைப்படம் எனும் பண்டம் அல்லது கலை வெற்றி பெற்றுவிடும் என்ற கணிப்பில் அயராது பாடுபடும் தமிழ்சினிமா உலகம் கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது.

நமது தமிழ்சினிமா உற்பத்தியாளர்களுக்கு களிப்பூட்டும் அம்சங்கள் என்பது பெரும்பாலும் பெண் உடல்கள்தான். பெண் உடலை வண்ணங்கள் சிதறும் நீர்க்குமிழிகளாக அலையவிட்டு, பார்வையாள மனங்களைக் கிறங்கடிக்கும் உத்தி இடம்பெறாத படங்களே இல்லை எனலாம். பெண் உடல்கள் நீர்க்குமிழிகள் என்றால் ஆண் உடல்கள் பயமுறுத்தும் நிணச்சதைகள், ரத்தமும் சிவப்பேறிய கண்களும், இலக்கற்ற அலைவுமாய் பீதியூட்டும் களிப்பை அள்ளித்தருகின்றன.

களிப்பூட்டும் பெண் உடல்களும் பீதியூட்டும் ஆண் உடல்களும் தாய்மை, தியாகம், அவமானம், குரூரம், அன்பு, வெறுப்பு எனும் பண்புகளினூடாக அலைந்துகொண்டிருக்கின்றன. தமிழ்ச் சினிமா நூறு வருடத்தைத் தாண்டியும் இவற்றையே 'கலை' என்ற பெயரில் பரப்பிக் கொண்டிருக்கிறது. ஆனால், இவையெல்லாம் சரக்குகள்தான். இந்தச் சரக்குகளின் பண்ட மதிப்பும் லாப எதிர்பார்ப்பும் நிச்சயமற்றது என்பதுதான் ஒரே வித்தியாசம்.



சி
னி
மா

நினைவிற்குள், அடங்கா லாபநோக்கம் கொண்ட 'பண்டங்கள்' என்று தெரிந்து கொண்டே தமிழ்ப் பத்திரிகைகள் சினிமாவை ஒழுங்குபடுத்தி விட முடியும் என நடிக்கின்றன. கலையின் கூறுகள் தேவையென ஆலோசனை கூறி கதிமோட்சம் காட்டிடக் காத்திருக்கின்றன. ஆலோசனை கூறும் இந்த அச்சு ஊடகங்கள், சினிமாவை எப்படிப் பயன்படுத்துகின்றன என்று கவனித்தால் இவைகளின் நோக்கமும் வியாபாரம்தான். சினிமா, பத்திரிகைகளின் லாபத்தை உயர்த்தும் - விற்பனையைப் பெருக்கும் ஒரு கச்சாப் பொருளாக - உத்தியாகவே - பயன்படுகின்றது என்பது புலனாகும்.

திரைப்படத்துறைக்கேயென வெளிவரும் திரைச்சுவை, வண்ணத்திரை, திரைக்கதிர், சினிமா எக்ஸ்பிரஸ் போன்றவை அதிகம் விமிசனம் செய்யாமல் திரைத்துறையின் 'மேம்பாட்டிற்கு' வழி கூறுவதோடு நின்றுவிடுகின்றன. இந்தப் பத்திரிகைகள் சினிமாவை ஒரு தொழிலாக நினைத்து அதனுள் உள் முரண்பாடுகள் களையப்பட வேண்டும். போட்டிகள் இருந்தாலும் அடுத்தவரை ஒழித்துவிடும் அளவிற்குப் போய்விடக்கூடாது என்ற அக்கறைகளை வெளிப்படுத்துகின்றன.

இந்தப் பின்னணியில் இவைகள் கடுமையான திரைப்பட விமரிசனங்களை எழுதுவதில்லையென்றும் சொல்லலாம். இந்தப் பத்திரிகைகள் பெரும்பாலும் நடிக, நடிகையர் நேர்காணல்கள், புகைப்படங்கள் தொழில்நுட்பத்துறையினர் - இயக்குநர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் பற்றிய தகவல் குறிப்புகள் போன்றவற்றைத் தந்து, தற்போதைய சந்தையில் யாருடைய பண்டங்கள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன என்ற நிலவரத்தை தருவதையே நோக்கமாகக் கொண்டவை.

இதே தன்மையோடு தனியொரு நடிகனின் பிம்பக் கட்டமைப்பிற்கும் உதவும் நோக்கத்தோடு விஜயகாந்த், ரஜினிகாந்த், கார்த்திக், கமல்ஹாசன், விஜய் பெயர்களைத் தாங்கிய திரைத்துறைப் பத்திரிகைகளும் வந்து கொண்டிருக்கின்றன.

இவைகள் திரைப்படத் துறையைக் குறித்து உண்டாக்கும் கருத்துக்களைவிட, பொதுநிலைப் பத்திரிகைகளான ஆனந்தவிகடன், குமுதம், குங்குமம், சாவி வகையறாக்களும், புலன்விசாரணை மற்றும் அரசியல் பத்திரிகை வகையறாக்களான ஜுனியர் விகடன், நக்கீரன், நெற்றிக்கண், தராசு, துக்ளக் போன்றன உண்டாக்கும் கருத்துக்களுக்கு பலம் அதிகம் என்று சொல்லலாம்.

பொதுநிலைப் பத்திரிகைகளின் பக்கங்களில் குறிப்பிட்டவீதம் சினிமாவிற்கென்று ஒதுக்கப்படுகின்றன. சினிமாசெய்திகள், புகைப்படங்கள், விமர்சனங்கள், நேர்காணல்கள் இடம்பெறாத தமிழ்ப்பருவ இதழ்களே இல்லையென்று சொல்லலாம். இடம்பெறும் விதம் வேண்டுமானால் மாறுபடலாம்.

தெலுங்கிலிருந்து தமிழுக்கு வந்திருக்கும் அனிதாவுக்கு 'சாமுராய்'தான் அறிமுகம் என்று பார்த்தால் அதற்கிடையில் அவர் ஒப்பந்தமான சூப்பர்குட் பிலிம்சின் 'வருஷமெல்லாம் வசந்தம்' முந்திக்கொண்டு விட்டது. மனோஜ், குணால் நாயகர்களாக நடிக்கும் இப்படத்தை இயக்குபவர் பாடலாசிரியர் ரவிசங்கர். சூரியவம்சம், பிரியமுடன், பாரதி கண்ணம்மா படங்களில் பாடல்கள் எழுதியிருப்பதுடன் விக்கிரமனிடம் உதவி இயக்குனராகவும் இருந்தவர். சூரியவம்சத்தில் 'ரோஜாப்பூ சின்ன ரோஜாப்பூ...' இவரது பாடல்தான். அதுமட்டுமில்லாமல் பாக்கியராஜிடம் உதவியாளராகவும் அவரது 'பாக்யா' பத்திரிகையில் உதவி ஆசிரியராகவும் இருந்தவர் ரவிசங்கர்.

அனிதா நடிக்கும் சாமுராய் படத்தை இயக்குபவரும் அறிமுகம் தான். சங்கரிடம் உதவியாளராக இருந்த பாலாஜி சக்திவேல். மற்றொரு புதுமுகம் 'ஸ்ரேயா'வும் நாயகியாக அறிமுகமாகிறார். முழுக்க முழுக்க தொழில்நுட்பத்தை நம்பியே எடுக்கப்பட்டு வரும் சாமுராயில் இன்னொரு நாயகியாக ஜெயாசீலும் நடிக்கிறார். நாயகன் விக்ரம். வருஷமெல்லாம் வசந்தமும் சாமுராயும் ஒரே நாளில் அதாவது தமிழ் புத்தாண்டு அன்று வெளியாகிறது.



'வருஷமெல்லாம் வசந்தம்'
அனிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகைகள் கருத்துருவாக்கத்தைக் கவனமாகச் செய்கின்றன என்பதற்கு அவை வெளியிடும் விதங்களே சான்றுகளாக உள்ளன. சினிமாச் செய்திகளை ஆசிரியர் குழு உறுப்பினர் அல்லது சினிமா நிருபர் மூலம் தரும் இப்பத்திரிகைகள், திரைப்பட விமரிசனத்தை நடுநிலையான - வெளியாள் அல்லது குழு செய்வதாகக் காட்டிக் கொள்ள முயல்கின்றன. 'விகடன் விமரிசனக் குழு' தரும் மதிப்பெண்கள், குமுதத்தில் 'சென்சார் மாமி' எழுதும் கடிதம், துக்ளக்கில் டாக்டர் செய்யும் 'போஸ்ட் மார்ட்டம்' போன்றன சில உதாரணங்கள்.

இன்னும் சில பத்திரிகைகள் பிரபலமான எழுத்தாளர்களைக் கொண்டும் வாசக/வாசகியர்களைக் கொண்டும் விமரிசனங்களை எழுத வைக்கின்றன. இப்படிச் செய்வதன் மூலம், தங்கள் பத்திரிகையின் விமரிசனத்திற்கு - கருத்துக்களுக்கு - ஒருவித 'நடுநிலை'த் தன்மையை - மதிப்பை - உண்டாக்கிக் கொள்கின்றன எனலாம்.


தங்கள் பத்திரிகை விமரிசனங்களில் நல்ல திரைப்படத்துக்கு 'செய்தியுள்ள கதை, ஈடுபாடுள்ள நடிப்பு, அறிவுக்கு இடம் தரும் திருப்பங்கள், பொருத்தமான இசை, ஆபாசமற்ற - விரசமற்ற காட்சிகள்' ஆகியன அவசியம் என்று வலியுறுத்தும் பத்திரிகைகள், இவையில்லை என்பதற்காக எந்தத் திரைப்படத்தையும் வன்மையாகக் கண்டித்ததில்லை; நட்போடு கூடிய ஆலோசனைகளையே வழங்குகின்றன.

இன்னொருபுறம் அந்தப் படங்களில் இடம்பெறும் ஆபாசம் - விரசம் ஆகியவற்றைத் தனது பக்கங்களில் அச்சிட்டு அவற்றிற்கு நிலைத்த தன்மையை உருவாக்குகின்றன. திரைப்படத்தில் சடுதியில் மறையும் விரசக் காட்சி, பத்திரிகைப் படங்களாக வரும் பொழுது உண்டாக்கும் சலனம் அதிகமாக இருக்கிறது; இருக்கும்.

குமுதம், குங்குமம் போன்றவை வெளியிடும் நடுப்பக்கப் படங்களும் குறிப்புகளும் அசரடிக்கும் விதமாக உள்ளன. ஒரு நடிகையின் அருகாமை (குளோஸ்-அப்) படத்திற்குத் தரப்படும் விமரிசனக் குறிப்பு விரசத்தை அதிகமாக்கிடவே உதவுகின்றன. மிகக் குறைவான ஆடையுடன் நிற்கும் நடிகையின் படத்தருகே 'முனுல ஒரு பங்கு கூட கொடுக்காட்டி எப்படிங்க?' என்று குமுதம் எழுதிய குறிப்பு கேட்கிறது.

'அதோ.. யாரோ கூட்டணிக்கு வர்றா மாதிரி தெரியுதே?' என்றும் (குமுதம்), 'கால்பந்து விளையாட இந்த டிரஸ் போறாதா' (குங்குமம்) என்றும் எழுதும்பொழுது, குறிப்பில் இடம்பெறும் மொழி குறிக்கும் அர்த்தம் வேறு தளத்திற்கு வாசகனை அழைத்துச் செல்கிறது. நடிகை தன்னுடலைக் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும், 'கூட்டணி' சேர விரும்புவதாகவும், 'பந்து' விளையாடிடக் கோருவதாகவும் வாசகமனம் கருதி, குதூகலிக்கிறது. குதூகலிக்கும் மனத்தை 'கொடுத்தல்', 'கூட்டணி', 'பந்து' என்ற வார்த்தைகளின் நேரடி அர்த்தத்திலிருந்து விலக்கி, உடலுறவு சார்ந்த அர்த்தத்திற்கு மாறிக் கொள்ளும்படி தூண்டுவது அந்தப் பக்கங்களில் இடம்பெறும் படங்கள்தான்.

திரைப்படத்தின் கச்சாப் பொருட்களான நடிக, நடிகைகளைத் தங்கள் வியாபாரத்திற்குமான கச்சாப் பொருட்களாக மாற்றும் போக்கில் அவர்களுக்கு குணச்சித்திர நடிகன், 'ஆக்ஷன் ஹீரோ' 'கனவுக்கன்னி', க்ளாமர் ஆர்ட்டிஸ்ட், 'குடும்பப் பாங்கு' முதலான கூடுகளைத் தயாரித்து அளிக்கின்றன. இந்தக் கூடுகளுக்குள் அவர்களை அடைத்துவிடும் நோக்கத்தில் பத்திரிகைகள் அவர்களின் 'திரைப்பட வெளி'யையம் தாண்டி, 'பிரத்யேகவெளி'க்குள்ளும் நுழைகின்றன.




மென்மையாகவும் அப்பாவியாகவும் இருந்த சூர்யா, 'நந்தா' படத்திற்கு பின் கரடு முரடான நாயகர்கள் வரிசைக்கு வந்து விட்டார். 'ஸ்ரீ' படத்திலும் தாடியும் பீடியுமாக முரட்டு வேடம்தானாம். ஆனால் நந்தாவில் நாயகி லைலாவை நெருங்கிக்கூட இருக்காத நான் இதில் வேறுமாதிரி என்று கண் சிமிட்டுகிறார். போதாகுறைக்கு முதலில் அப்படி நடிக்க மாட்டேன் இப்படி நடிக்க மாட்டேன் என்று அடம்பிடித்த தேங்காய் சீனிவாசனின் பேத்தி ஸ்ருதிகா, பத்தாம் வகுப்பு பரீட்சை முடிந்த பிறகுதான் படம் வெளியாகும் என்பது தெரிந்துகொண்ட பின் கூச்சம் எல்லாவற்றையும் கைவிட்டு தூள் கிளப்பி வருகிறாராம். இப்போ படத்தின் விசேஷமே சூர்யாவோ கதையோ அல்ல ஸ்ருதிகாவின் கவர்ச்சிதான் என்றாகிவிட்டது.

படத்தில் புடவை கட்டிய பாத்திரங்களில் நடிக்கும் நடிகை, 'ஜீன்ஸ் பேண்ட்' போட்டால் ஆச்சரியம் அடைவார்கள். சிம்ரன் 'சேலை' கட்டினால் சினிமா நிருபர் சங்கடப்படுகிறார். கதாநாயகநடிகன் மட்டுமே 'மது விலக்கை' பின்பற்ற வேண்டியவன் என நினைத்துக் கொண்டு உ.பா. (மது) சாப்பிட்டுவிட்டு தடுமாறினார் என எழுதுவார்.

அரசியல், சமுதாயம், காவல்துறை ஆகியவற்றில் நடக்கும் சீர்கேடுகளைத் தட்டிக் கேட்கப் புறப்பட்டுள்ள புலனாய்வுப் பத்திரிகை (மோட்டுவளைத் துப்பறிதல்தான்)யில் சினிமாவைப் பயன்படுத்தும் விதம் எதிர்மறையானது என்பதை அந்தப் பக்கங்களுக்கு, தரும் பெயர்களே வெளிப்படுத்துகின்றன. 'ஜு.வி ஷோ' (வெளிச்சம் போட்டுக் காட்டுதல் - படங்கள் மூலம்) நக்கீரனில் 'சினிக்கூத்து', வாரமலரின் 'துணுக்கு மூட்டை' என்ற வார்த்தைகள் ஒருவித எதிர்மறை மனநிலையோடு சினிமாவைப் பார்க்கின்றன. இந்தப் பத்திரிகைகளுக்குச் சினிமா ஒரு அருவெறுப்பான விசயம். ஆனால், அதேசமயம் தங்கள் வாசகர்களுக்கு கிளுகிளுப்பையும் தர வேண்டும்.

இந்த மனநிலையில் இயங்கும் புலனாய்வுப் பத்திரிகைகளும் பொதுநிலைப் பத்திரிகைகளும் கட்டுரைகளையும் செய்திகளையும் எழுதும் முறை எந்தவிதத்தில் இருக்கின்றன என்று வாசகன் நினைத்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். ராத்திரி ரவுண்ட் அப்... டயலாக்... (ஜு. விகடன்) போன்ற அம்சங்கள் முழுவதும் ஒருவித மொழி சார்ந்த பாலின்பத்தையே பேசுகின்றன.

ஒரு பக்கத்தை, கதையல்லாத கதைகள், அபலையின் கண்ணீர்க்கதைகள், சாமியார்களின் காமக்களியாட்டங்கள், இருட்டுலக மறைவுப் பிரதேசங்கள் பற்றியெல்லாம் எழுதும் பத்திரிகைகள் வார்த்தைகளுக்கு வன்முறைச் சாயத்தையும் உடலுறவுத் தேனையும் தடவி விடவே செய்கின்றன. ஆனால் இந்தப் பத்திரிகைகள்தான் சினிமாவை விமரிசிக்கும் பொழுது தங்களது உள்ளடக்கத்தையும் வெளிப்பாட்டு முறையையும் மறந்துவிட்டுப் போதனைகளில் இறங்கி விடுகின்றன.

பத்திரிகை படிப்பவனாகவும் சினிமா பார்ப்பவனாகவும் இல்லாத தமிழ் உயிரி சாபங்களிலிருந்து தப்பித்து ஓடும் தெப்பம் கைவரப் பெற்றவன்தான். ஆனால் அப்படி யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. அதற்குமாறாக, இவ்விரண்டும் தரும் கனவுலகில் - கருத்துலகில் - தமிழ் உயிரிகள் மிதந்து கொண்டிருக்கின்றன. தப்பித்தல் யார்க்கும் எளிதன்று.




- தாமிரபரணி - 1998.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நான் பார்த்த முதல் தமிழ்ப்படமே கமலுடையதுதான். அவ்வைசண்முகி. கொமெடிப்படங்கள் நடிக்கிறது ரொம்பக் கஷ்டம். நிறைய டைமிங்சென்ஸ் வேணும். கமலின் உதவியால் நானும் அதில் தேறிவிட்டேன் என்பதில் சந்தோஷம். என்னால் நல்லா நடிக்க முடியும் என்று நிருபித்த முதல் படம் வாலி. அதன்பிறகு பார்த்தேன் ரசித்தேனிலும் நல்ல வேடம். பிறகு பாலச்சந்தர் படம், மணிரத்னம் படம், கமல் படம் என்று எல்லா நடிகைகளுமே பொறாமைப்படும் அளவுக்கு எனக்கு வாய்ப்புகள் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அந்தக்காலத்தில் ஸ்ரீதேவி மட்டும்தான் கமலோடு தொடர்ந்து இரண்டாவது படத்திலும் நடித்ததாகச் சொல்வார்கள். இப்போது அந்த வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது. ரொம்ப உற்சாகமாக இருக்கிறேன்" என்று மகிழ்ச்சிப் பிரவாகத்தில் பேசுகிறார் சிம்ரன். ஆனால் திரையுலகில் மிக அதிகமான வதந்திகளுக்குப் பேரெடுத்த இவரைப் பற்றி இப்போதைய கதை கமலோடு தனி வீட்டில் வாழ்ந்து வருகிறார் என்பது. இதை உண்மையா பொய்யா என்று உறுதிப்படுத்திக் கொள்ள முடியாவிட்டாலும் கமல் சிம்ரன் மேல் நல்ல அபிப்பிராயத்தில் இருக்கிறார் என்பதும், இல்லாவிட்டால் அடுத்தடுத்து இரண்டு படத்தில் ஒரே நடிகையை போட மாட்டார் என்பதும், கமல் பங்கு கொள்ளும் நிகழ்ச்சிகளிலெல்லாம் அழைப்பில்லாமல் கூடவே வாலாக சிம்ரனும் ஒட்டிக்கொள்கிறார் என்பதெல்லாம் என்னவோ நிஜம்.




படத்தின் ஆரம்ப விழாவின்போதே அந்தப்படம் வெளியாகும் திகதியையும் அறிவித்துவிடுவது ஏ.வி.எம்.மின் வழக்கம். ஆனால் அவர்கள் தயாரிப்பில் சரண் இயக்கும் 'ஜெமினி' படத்தில் சிறு மாற்றம். சித்திரை 14ம் திகதி வெளியாக வேண்டிய படம் இரண்டு நாட்கள் முன்னதாகவே வெளியாகுமாம். படம் முழுதும் முடிந்துவிட்டது. இரண்டே இரண்டு பாடல் காட்சிகளை எடுப்பதற்காக விக்ரம், கிரண் உள்ளிட்ட சரண் குழுவினர் சுவிட்சர்லாந்து போயிருக்கிறார்கள். படப்பிடிப்பு காலத்திலேயே அடிக்கடி எடைகூடிக் கொண்டிருக்கும் நாயகி கிரணை ஒவ்வொரு முறையும் இளைக்க வைத்தே படப்பிடிப்பை முடித்திருக்கிறார் சரண். பார்த்தாலே தெரிகிறது!



இருபத்து மூன்றே வயதான ரோஜாக் கூட்டம் நாயகன் ஸ்ரீகாந்த் கம்ப்யூட்டர் சயன்ஸில் பி.எஸ்.சி முடித்திருக்கிறார். கிரிக்கட் வீரராக வர எண்ணம் கொண்டிருந்த ஸ்ரீகாந்தின் முயற்சி பலிக்காது போய்விட அமெரிக்காவில் கம்ப்யூட்டர் என்ஜினியராக இருக்கும் அண்ணன் சுதீரிடம் போய் விடும் நோக்கத்திலேயே படித்துக் கொண்டிருந்தார். இடையில் கல்லூரி பாஷன் ஷோக்களில் பரிசுகள் கிடைக்க, மொடலிங்கில் நாட்டம் வந்து, பின்னர் நடிகனாகி விட்டார்.

ஸ்ரீகாந்தின் தந்தை கிருஷ்ணமாச்சாரி பாங்க் மனேஜராக இருந்தாலும் சொந்தமாக நாடகக்குழுவெல்லாம் வைத்திருந்த நாடக நடிகர். பாலச்சந்தரின் ஜன்னல் தொடரிலும் நடித்திருக்கிறார். இப்போது ஏ.வி.எம்.மின் 'ஜெமினி' படத்தில் கதாநாயகி கிரணின் அப்பாவாக நடித்து வருகிறார்.

கன்னடத்தில் நம்பர் 1 நடிகை பிரேமாதான். மலையாளத்திலும் மம்முட்டியோடு ஒரு படத்தில் நடித்து பிரபலமானார். தமிழில் மட்டும்தான் நாகதேவதை, நாகவள்ளி என்று எல்லாம் பாம்பு பக்திப் படங்களாகவே நடித்ததால் அவர் கண்டுகொள்ளப்படவில்லை. இப்போது 'ஆடி 18' படத்தில் நடித்து வருகிறார். இதிலும் பாவம் அவருக்கு அம்மன் வேடம் தானாம்!






இயக்குனர் கஸ்தூரி ராஜாவும் தன் மகனை களத்தில் இறக்குகிறார். அவரது 'துள்ளுவதோ இளமை' யில் மூன்று மாணவ ஜோடிகள். அதில் ஒருவர் இப்போது பத்தாம் வகுப்பு படித்துவரும் அவரது மகன் வெங்கடேஷ் பிரபு. மற்றைய இரு மாணவர்கள் அபிநய், ரமேஷ். மாணவிகளாக ஷில்பா, ஷெரீன், கங்கேஸ்வரி. மாணவர்களின் கதையில் மகனை நடிக்க வைக்கப்போய் அவரது படிப்பையே நிறுத்தும்படியாகி விட்டது. படிப்பதா நடிப்பதா ஏதாவது ஒன்றை மட்டும் பாருங்கள் என்று அந்தப் பள்ளி நிர்வாகிகள் கறாராகச் சொல்ல, நடிப்புதான் என்று முடிவு செய்துவிட்டார்கள் தந்தையும் மகனும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியன், முதல்வன், நட்புக்காக, குஷி போன்ற பிரமாண்ட படங்களைத் தயாரித்த ஏ.எம். ரத்னம் அதே பிரமாண்டச் செலவில் தயாரிக்கும் புதிய படம் 'எனக்கு 20 உனக்கு 18' தமிழிலும் தெலுங்கிலும் ஒரே நேரத்தில் தயாராகிறது. படத்தை இயக்குகிறவர் ஏ.எம். ரத்தினத்தின் மகன் ஏ. எம். ஜோதிகிருஷ்ணா. இசை ஏ.ஆர். ரகுமான். 'புன்னகை தேசம்' தருண்குமார் கதாநாயகனாக நடிக்கிறார். சென்னை அழகியாக வந்தவரும் பிரபல மொடலும் எத்திராஜ் கல்லூரியில் பட்டப்படிப்பு படித்து வருபவருமான திரிஷா கதாநாயகி. சோவியத் கலாசார மையத்தில் ஏழு வருடங்கள் பாலே நடனம் கற்றிருக்கிறார் திரிஷா. (தமிழ் திரைக்கு வரும் மூன்றாவது பாலே நடனமணி. ஏற்கனவே லைலாவும் காயத்ரி ஜெயராமும் இருக்கிறார்கள்.)
'12B'தயாரிப்பாளர் விக்ரம்சிங் தயாரிக்கும் அடுத்த மூன்று படங்களிலும் திரிஷாதான் கதாநாயகி. பிரியதர்ஷன் இயக்கத்தில் 'கண்மணி நீ வர காத்திருக்கிறேன்' படப்பிடிப்பு ஆரம்பமாகிவிட்டது. கதாநாயகன் ஷாம்.




☛ 'தமிழன்' படத்திற்காக நடிகர் விஜய்யும் பிரியங்கா சோப்ராவும் இமான் இசையில் ஒரு பாடலைப் பாடியிருக்கிறார்கள். படத்தின் இயக்குனர் மஜீத். பாடல் எழுதியிருப்பவர் வைரமுத்து.
*''நான் உந்தன் பெயரை திருடிக்கொண்டேன், நாவுக்குள் பச்சை குத்திக்கொண்டேன், யாரோடும் சொல்லாமல் சென்சாரே இல்லாமல், சூப்பர் காதல் சொல்லித்தரவே வந்தேன்''* என்று பிரியங்கா பாட பதிலுக்கு விஜய் *''லவ்வுக்குள் ஏனடி கண்ணே டென்ஷன், சொல்லாமல் தெரியும் காதல் ரீஸன், மூக்கோடு உரசி என்னை முத்தாடும்போது நெஞ்சில், பாகிஸ்தான் போடர்போலே டென்ஷன்''* என்று பாட ஒலிப்பதிவு செய்யப்பட்டது. பாடிமுடித்து வெளியே வந்த பிரியங்கா ''கல்லூரியில் படிக்கும் போதே நான் மேற்கத்திய, இந்துஸ்தானி இசைகளைக் கற்றுக்கொண்டவள். மேடைகளில் பாடி பரிசுகளும் வாங்கியிருக்கிறேன். எனக்கு இதெல்லாம் ஜுஜுபி'' என்றார்.




☛ 'ஷாஜகான்' தோல்விக்குப் பிறகு விஜய் புதிய தீர்மானத்திற்கு வந்திருக்கிறார். சூப்பர் ஸ்டார் பாணியில் இனி வருடத்திற்கு ஒரு படம்தான் நடிப்பார். இப்போது அவர் நடித்து வருவது தமிழன் படம் மட்டுமே. அதிலும் திரும்பத்திரும்ப ஏகப்பட்ட மாற்றங்களைச் செய்கிறார். ஏ.வி.எம். தயாரிப்பில் அவர் நடிக்க ஒப்புக்கொண்ட படத்திற்கான கதையில் திருப்தி வராமல் திருப்பி அனுப்பிக் கொண்டே இருக்கிறாராம். இத்தனைக்கும் அந்தக் கதைகள் பழம்பெரும் தயாரிப்பாளரான ஏ.வி.எம். சரவணனால் ஓகே செய்யப்பட்டவை.

☛ தர்மா, மாதங்கள் ஏழு போன்ற படங்களை தானே இயக்கி நடித்து தோல்வியால் கையைச் சுட்டுக்கொண்டவர் யூகிசேது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு தொலைக்காட்சியில் நையாண்டி தர்பார் நிகழ்ச்சியின் மூலம் வெற்றி பெற்றார். அதன் பின் கமலின் 'பம்மல்Kசம்பந்தம்' மீண்டும் 'பஞ்சதந்திரம்' என்று நடிப்புக்கு வந்திருக்கிறார். இப்போது பழையபடி தைரியம் பெற்று ஒரு படத்தை இயக்க முடிவு செய்திருக்கிறார்.




☛ இயக்குனர் கே. ராஜேஸ்வர் சொன்ன கோவில்பட்டி வீரலட்சுமி கதையைக் கேட்டு மெய்சிலிர்த்துப் போனாராம் சிம்ரன். விளைவு ரவிக்கையில்லாமல் நடிக்க ஒப்புக்கொண்டு விட்டார். முன்பு பாரதிராஜா நவநாகரீக நடிகைகளையெல்லாம் கிராமத்திற்கு கூட்டிப்போய் ரவிக்கையில்லாமல் நடிக்கவைப்பார். இப்போ இடையழகி தன் இடைக்கு மேலும் தரிசனம் தந்து குளிரவைக்கப் போகிறார். ஆனால் கையில் வாள் கவனம்.

☛ அர்ஜுனின் ஏழுமலை படத்தை தெலுங்கிலும் எடுப்பதால் அங்கு பிரபலமான சௌந்தர்யாவை முதலில் ஒப்பந்தம் செய்தார்கள். ஆனால் ரவிக்குமார் தெலுங்கிலும் தமிழிலுமாக எடுத்த 'ஹலோ மாமா' படத்திற்கு பிறகு அங்கேயும் சிம்ரனின் மார்க்கெட் எகிறிவிட்டது. அவ்வளவுதான் ஏழுமலையில் சௌந்தர்யாவை தூக்கிவிட்டு சிம்ரனைப் போட்டுவிட்டார்கள்.

☛ கடைசியாக இயக்குனர் சூர்யாவுடன் கிசுகிசுக்கப்பட்டவர் பூமிகா. ஆனால் சூர்யாவோ தான் இயக்கும் படங்களின் பாத்திரங்கள் மீது மிகுந்த ஈடுபாட்டுடன் இருப்பதால் அதை ஏற்று நடிக்கும் நடிகைகளிடமும் எனக்கு ஈர்ப்பு உண்டாகி விடுகிறது. வேறு காதல் கத்தரிக்காய் எதுவும் இல்லை என்று மறுத்திருந்தார். இப்போது அதே அஸ்திரத்தை திருப்பியடிக்கிறார் பூமிகா. ரோஜாக்கூட்டம் படத்தில் ஒன்றிப்போய் நடித்ததால் அந்தப் படத்தின் புதுமுக நாயகனுடன் தனி ஈடுபாடு வந்துவிட்டதாக சொல்கிறார். படப்பிடிப்பு ஒழிந்த நேரங்களில் இருவரும் தனியே ஓரம்கட்டி பேச்சு.. பேச்சு.. ஒரே பேச்சுதான்.

☛ 'தமிழ்' படத்தைத் தொடர்ந்து பிரசாந்த் ஒப்புக்கொண்டிருக்கும் புதிய படம் சூப்பர்குட் பிலிம்சின் 'நீ நான் காதல்'.

☛ துணிச்சலாக சேது படத்தை தயாரித்த கந்தசாமி தயாரிக்கும் புதிய படம் 'கும்மாளம்'. நடிகர்கள், தொழிநுட்பக் கலைஞர்கள் எல்லோருமே புது முகங்கள். நான்கு பதின் வயது வாலிபர்கள் ஒரு பதின்வயதுப் பெண். இவர்களைச் சுற்றும் கதை. அலைகள் ஓய்வதில்லை, பன்னீர்புஷ்பங்கள், அழியாத கோலங்கள் வரிசையில் கலக்கப்போகும் படமாம்! இயக்குனர் சுகி மூர்த்தி. கதாநாயகியாக ரதி. இசைக் கல்லூரி மாணவர் காந்தி தாசன் இசையமைக்கிறார்.



☛ நடன இயக்குனர் ராஜுசுந்தரமும், புதுமுகம் வானதியும் நடிக்கும் 'கொலம்பஸ்' படத்தில் வில்லனாக நடிக்கிறார் இயக்குனர் கே. சுபாஷ். படத்தை இயக்குபவர் பரதன்.

☛ 'ரெட்' படத்தைத் தொடர்ந்து அஜித் நடிக்கவிருக்கும் புதிய படத்தை இயக்குபவர் அஜித்தின் பூவெல்லாம் உன் வாசம் படத்தை இயக்கிய எழில்.



சினிமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



☛ 'பஞ்ச தந்திரம்' படத்தில் ரமேஷ் அரவிந்துக்கு ஜோடி சங்கவி. ''ஒரு நிகழ்ச்சியில் பாக்கியராஜ் சாரைப் பார்த்தேன். 'படத்தில நடிக்கிறியா?' என்று கேட்டார். அப்போது ஒன்பதாம் வகுப்புதான் படிச்சிட்டு இருந்தேன். அப்பா 'பத்தாம் கிளாஸ் படிச்சிட்டுப் போ' என்று சொல்லிவிட்டார். முதல்படம் அஜீத்தோட 'அமராவதி'. சரியாகப் போகவில்லை. அடுத்த 'ரசிகன்' பட்டிதொட்டியெல்லாம் என் பெயரைப் பறக்க வைத்தது. 'பொற்காலம்' படத்தில் நல்ல ரோல். எனக்கு அதிகம் நல்ல ரோல் தந்தது தெலுங்கு சினிமாதான். தேவர் மகன், ஆஹா எல்லாம் தெலுங்கில் பண்ணினேன். காதலில் விழுவது தப்பேயில்லை. நல்ல ஆளாக இருந்தால் உடனே கல்யாணம் பண்ணிக்கலாம். ஆனால் வரணுமே... மீண்டும் பொற்காலம் போல ஒரு படம் கிடைத்து விருதும் வாங்கணும்...'' - சங்கவி.

☛ நடிகர் சங்கத் தலைவராக நாட்டாண்மை வேலைகளைப் பார்த்துக்கொண்டே நான்கு படங்களிலும் நடித்து வருகிறார் விஜயகாந்த். படப்பிடிப்பு முடிய இருப்பவை மனோஜ்குமாரின் ராஜ்ஜியம், அருண்பாண்டியனின் 'தேவன்' ஆகியவை. அடுத்து விஜயகாந்த் ஒப்புக்கொண்டிருக்கும் படங்களை இயக்குபவர்கள் 'தீனா' முருகதாஸ், 'பத்ரி' சிவராமகிருஷ்ணா.



☛ சின்னத்திரை விளம்பரங்களுக்கு இசையமைத்து பின்னர் பெரிய திரைக்குச் சென்ற ஏ.ஆர். ரகுமான் மீண்டும் சின்னத்திரைக்கு வருகிறார். கல்கியின் 'பொன்னியின் செல்வன்' நாவலை தொடராக தயாரிக்க இருக்கிறது சிங்கப்பூர் நிறுவனம் ஒன்று. அதற்கு இசையமைக்கிறார் ரகுமான்.

சி
னி
மா

☛ கமலும் சரிகாவும் பிரிந்துவிட இருக்கிறார்கள். கடந்த மூன்று வருடங்களாக இருந்த பிரச்சினையாம். மும்பையிலிருந்து வந்த ஓம்புரி மற்றும் ரஜினிகாந்த் ஆகியோர் இருவரிடமும் பேசிப் பார்த்திருக்கிறார்கள். ஊஹூம்... விவாகரத்து முடிவாகிவிட்டது.

☛ சதிலீலாவதியில் கமலுடன் நடித்த ரமேஷ் அரவிந்த், தெனாலியில் நடித்த ஜெயராம், பம்மல்Kசம்பந்தத்தில் நடித்த யூகிசேது ஆகியோரோடு இதுவரையில் கமலுடன் நடித்திராத சீமனுமாக ஐந்துபேர் இணைந்து அடிக்கும் லூட்டிதான் 'பஞ்சதந்திரம்'. இதுவரை வேறு யாரிடமும் கதைகளை வாங்கி இயக்கி வந்த கே.எஸ். ரவிக்குமார் இந்தப் படத்தின் கதையை தானே எழுதி இயக்குகிறார். அவரும் நடிக்கிறார். கூடவே கமலின் மனம் கவர்ந்த சிம்ரனும், ரவிக்குமாரின் மனம் கவர்ந்த ரம்யாகிருஷ்ணனும் நடிக்கிறார்கள். வசனம் கிரேஸி மோகன். இசை தேவா. படத்தின் ஆரம்பவிழா மேடையில் ''இந்தப் படத்தின் மூலம் என்ன சொல்லப் போகிறீர்கள்?'' என்று நிகழ்ச்சித் தொகுப்பாளர் கேட்க ரவிக்குமார் மைக்கை வாங்கி சிரித்துவிட்டு ''கமல் சொல்வார்'' என்று அவரிடம் மைக்கை கொடுத்தார். அவரும் வாங்கி பெரிதாகச் சிரித்துவிட்டு ஜெயராமிடம் கொடுக்க அவரும் சிரிக்க இப்படியே மேடையில் இருந்த ரமேஷ் அரவிந்த், யூகிசேது, சீமன், தேவா, கிரேஸி மோகன், சிம்ரன், ரம்யா கிருஷ்ணன் எல்லோரும் சிரிக்க கடைசியாக மீண்டும் மைக்கை வாங்கிய ரவிக்குமார் ''இதைத்தான் சொல்ல விரும்புகிறோம்'' என்று முடித்து வைத்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயற்ற

மனித உடம்பு ஒரு காற்ற டைத்த பை என்றார் பட்டி னத்தார். அந்த பெரிய பைக் குள்தான் ஓவரி, கருப்பை, கிட்னி என்று ஆண் பெண் உடம்பைப் பொறுத்து ஏகப் பட்ட சின்னச்சின்ன பைகள் அமைந்துள்ளன.

சினைப்பையிலும், கருப்பையி லும், வஜினாவிலும் கட்டிகள் வரும் சந்தர்ப்பங்கள் இருக் கின்றன. வஜினாவில் வரக்கூ டிய கட்டிகளைப் பார்ப்போம்.

# 'கருப்பை'யில் வளரும் கட்டிகள்

- டாக்டர் பிரேமா கிருஷ்ணசாமி (இந்தியா)



வஜினாவை ஈரத் தன்மையுடன் வைத்தி ருக்க வேண்டும் என்பதற்காக வஜினாவின் உட்சுவர்களில் வழுவழுப்பான திரவத்தைச் சுரந்தபடி இருக்கும் சுரப்பிகளுள் ஒன்று ஏதாவது காரணங்களால் அடைபட்டுப் போகும்போது அது சுரக்க வேண்டிய விட யங்கள் எல்லாம் உள்ளே சேர்ந்து கட்டி யாக (Bartholin cyst) மாற ஆரம்பிக்கிறது.

வஜினாவின் வெளிப்புற இதழ்களில் நெல்லி க்காய் அளவிலிருந்து எலுமிச்சம்பழம் அளவு வரையில் இந்தக்கட்டி வளர்ந்து தொந்தரவு கொடுக்கும். சிலசமயம் தொற்று (infection) ஏற்பட்டு சீழ்கட்டியாகவும் மாறிவிடும். நோய் எதிர்ப்பு மருந்து (antibiotic) கொடுத்து அறுவை சிகிச்சை மூலம்தான் இந்தக் கட் டியை அகற்ற முடியும். வஜினாவின் உட்சு வர்களில் சின்னச்சின்ன கட்டிகளாக தோன் றும் வளர்ந்துவரும் (Developmental) கட்டி கள் பெரிய பாதிப்பை ஏற்படுத்துவதில்லை.

கருப்பையின் வாய்ப்பகுதியான செர்விக் ஸில் தொற்று ஏற்படும்போது, சின்னக்கட்டி தோன்றலாம். இது அதிகமாகத் தொந்தரவு தரக்கூடியதாக இருக்காது. தேவைப்பட்டால் மின்சார வெப்பம் மூலம் அந்தக் கட்டிகளை அகற்றிவிடலாம்.

Fybroid கட்டிகள்தான் கருப்பையில் முக் கியமாய் வரக்கூடியவை. தசைகளிலேயே உருவாகும் தசைக்கட்டிகள். வயிற்றுவலி, அதிகமான ரத்தப்போக்கு என்று ஸ்கேன் எடுக்கும்போது இந்தக் கட்டிகள் இருப்ப தைக் கண்டுபிடிக்க முடியும்.

கருவிலிருக்கும் குழந்தையைப் பாதிக்காத விதத்தில் அக்கட்டி அமைந்திருந்தால் அத னை உடனடியாக அறுவைசிகிச்சை செய்து நீக்கும் அவசியம் ஏற்படாது. குறிப்பாக குழ ந்தைப்பேறு முடிந்து மெனோபாஸ் வரும் சமயத்தில் சின்னக்கட்டிகள் என்றால் அறு வைச் சிகிச்சை அவசியமில்லை.

ஆனால், கட்டிகள் பெரிதாக இருந்தாலோ அல்லது பீரியட்ஸின் போது அதிக ரத்தப் போக்கு, வயிற்றுவலி இருந்தாலோ அறு வைச்சிகிச்சை செய்வதுதான் நல்லது.

சிலசமயங்களில் இதுபோன்ற கட்டிகள் மிக வேகமாக வளர்ந்துகொண்டே போகும். அவ்வாறான வளர்ச்சி இருப்பின் அந்தக் கட்டிகள் கான்ஸர் கட்டிகளாக (Sarcoma) மாறும் சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. மிக மிகக் குறைந்த எண்ணிக்கையில் அதாவது 2%தான் இதுபோன்ற கான்ஸர் கட்டிகளாக மாறும் வாய்ப்புகள் இருக்கும்.

**ஓவரியில் வரும் கட்டிகள்:** தீவிரமில்லாத கட்டிகள், கான்ஸர் கட்டிகள் என்று ஓவரி யில் இரண்டுவிதமான கட்டிகள் வர சந்தர்ப் பங்கள் இருக்கின்றன.

**தீவிரமில்லாத கட்டிகள்:** டெவலப்மெண்டல் கட்டிகள், தண்ணீர் கட்டிகள், சொக்லெட் கட்டிகள் என்று பல்வேறு விதங்களில் இவை இருக்கும்.
டெவலப்மெண்டல் கட்டியில் முடி, பல் என்று பலவித விடயங்கள் இருக்கும்.

**தண்ணீர் கட்டி:** தண்ணீர் கட்டி தன் இயல் பான அளவிலிருந்து மாறி முறுக்கிக்கொள் ளும்போது பயங்கரமாக வலிக்கும். அது போன்ற நேரங்களில் உடனடியாக இந்தக் கட்டிகளை அறுவைச் சிகிச்சை செய்து நீக்க வேண்டும்.

**சொக்லெட் கட்டிகள்:** ரத்தத்தை உள்ளே கொண்ட சொக்லெட்கலர் கட்டிகள். இக்கட் டிகளை மருத்துவ ரீதியாக endometriotic cyst என்று சொல்வார்கள். கருப்பையின் உள்ளே இருக்கும் மேற்புற லைனிங் மாதி ரியான விசேட லைனிங் இதனுள்ளும் இரு ப்பதால், இந்தக் கட்டிகளுக்குள்ளேயே அவ் வப்போது ரத்தக் கசிவு (பீரியட்ஸ்) ஆகும்! தவிர, இந்தக் கட்டி உடம்பின் எந்த பாகத் தோடும் ஒட்டிக்கொள்ளும் பிசுபிசுப்பான தன்மை கொண்டது என்பதால், பக்கத்தில் இருக்கும் குடல், கருப்பை என்று எதனுட னாவது போய் ஒட்டிக்கொண்டு, பிரச்னை தரும். அப்படிப்பட்ட நேரத்தில், மருந்தின் மூலம் சரியாகவில்லை என்றால் அறுவை சிகிச்சை செய்துதான் நீக்க வேண்டும்.

**ஓவரி கான்ஸர்:** கான்ஸர் பரவிய பின்னர் வெளியே அறிகுறிகள் தெரியும். அதனால் நடுத்தர வயதை அடைந்த பெண்கள் அவ் வப்போது இதுகுறித்து ஒரு செக்கப் செய்து கொள்வது நல்லது.

**கருப்பை கான்ஸர்:** கருப்பையின் தசைச் சுவர் தடிப்பாக இருக்கும் என்பதால், கருப் பையில் கான்ஸர் சற்று மெதுவாகத்தான் பரவுகிறது. கான்ஸர்தான் என்று உறுதியா கத் தெரிந்துவிட்டால், கருப்பையை எடுத்து விடலாம். அப்போதுதான் மற்ற பகுதிகளு க்கும் பரவாமல் தடுக்க முடியும்.

ஓவரி போல அல்லாமல், கருப்பையிலோ, கருப்பையின் வாய்ப்பகுதியான செர்விக்ஸி லோ கான்ஸர் என்றால், அது வந்ததற்கான அறிகுறிகள் சுலபமாகத் தெரியும்.

மிகுதியான ரத்தப்போக்கு, ரத்தப்போக்கின் போது கெட்டவாடை வீசுவது, அதிகமாக வெள்ளைப்படுதல், கணவனும் மனைவியும் உடலுறவில் இணையும்போது ரத்தப்பெரு க்கு ஏற்படுதல் என்று பல அறிகுறிகள் இரு க்கின்றன. கான்ஸர் என்று சந்தேகம் வந் தால், உடனடியாக கருப்பையின் லேயரை யும் செர்விக்ஸ் பகுதியையும் சுரண்டி எடு த்து பயொப்ஸி செய்வது அவசியம்.

கருப்பை மற்றும் செர்விக்ஸில் முற்றிய கான்ஸர் என்பது வெளிநாடுகளில் அதிகம் இருப்பதில்லை. காரணம், நம்மவர்கள் யூரின் டெஸ்ட் செய்வதுபோல வெளிநாட்டு பெண் கள் அடிக்கடி கான்ஸரைக் கண்டுபிடிக்கும் pap smear பரிசோதனை செய்து கொள்வ துதான்.
pap smear என்பது நாம் சாதாரணமாக அணுகமுடியாத ஏதோ ஒரு சிக்கலான செல வுமிகுந்த பரிசோதனை என்று நினைத்து விட வேண்டாம். செலவு மிககுறைந்த ஒரு எளிய பரிசோதனையே இது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# மலையக இலக்கிய தளங்கள்




**– சு. முரளிதரன்**

மலையகத்தைச் சேர்ந்த இளம் கல்வியாளரும் எழுத்தாளருமான சு. முரளிதரன் அவர்களின் எட்டு அத்தியாயங்களைக் கொண்ட கட்டுரைத் தொகுதி இது. நூலாசிரியர் மலையக மக்களின் வரலாற்றையும் சமூக கட்டமைப்பு முறையையும் நன்கு விளங்கிக் கொண்டு இக்கட்டுரைகளை எழுதியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

எழுத்தாளனாகப் புகழப்படுவதை விட வரலாற்றுப் பங்களிப்பை வழங்கியமைக்காகப் போற்றப்படுவது பெருமைக்குரியது. இதில் இரண்டாவது வகையைச் சேர்ந்தவர் இந்நூலாசிரியர் எனத் துணிந்து கூறலாம்.

இன்று பொதுவாகத் தமிழ் சமூகமும் குறிப்பாக மலையகத் தமிழ் சமூகமும் வேண்டிநிற்பது இத்தகைய புத்திஜீவிகளையே. வடக்கு கிழக்கு தமிழ் சமூகத்தில் அரசியல் தனத்தின் போலித்தன்மையை தோலுரித்தது மக்கள் இலக்கியமே.

அத்தகைய ஒரு வரலாற்றுத் தேவையை மலையகத்திலும் நிறைவு செய்ய இத் தொகுதி ஆசிரியர் போன்றவர்கள் மேலும் மேலும் தோன்ற வேண்டும்.

பக்கங்கள் : 106 விலை: 130/-

**வெளியீடு : சாரல் வெளியீட்டகம் 7, ரொசிட்டா பல்கூட்டுத்தொகுதி, கொட்டகலை.**

# சுடுகின்ற மலர்கள்

(குறும்பா - கவிதைகள்)

- ஒலுவில் எஸ். ஜலால்டீன்




மரபுக்கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூ பாக்கள் என் பதுபோல குறும்பா என்பதும் தமிழ் கவிதை விருட்சத்தின் ஒரு கிளையே. நாலைந்து வரிகளில் மிக அழகான சந்தத்துடன் ஒரு கருத்தை வெளிப்படுத்துவதே குறும்பாவின் சிறப்பு.

குறும்பா என்றதும் ஈழத்தில் 'மஹாகவி' என்று அழைக்கப்படுகின்ற உருத்திரமூர்த்தி அவர்களே நினைவுக்கு வருவார். அவரைத் தவிர சில்லையூர் செல்வராசன், எஸ். பொன்னுத்துரை போன்றோரும் இதில் ஈடுபாடு காட்டியுள்ளனர். அந்த வரிசையில் இப்பொழுது ஒலுவில் எஸ். ஜலால்டீன் அணி சேர்ந்துள்ளார். அவரது இத் தொகுதியில் பெரும்பாலும் காதல் உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற இக்குறும்பாக்கள் வாசிப்போர் மனதைக் கிளறிவிடுகின்றன.

பக்கங்கள் : 71 விலை : 100/-

**வெளியீடு: அட்டாளைச்சேனைப் பிரதேச கலை இலக்கியப் பேரவை, ஒலுவில் 04.**

# புதைந்த உண்மைகள்




(கவிதை நூல்)

தொகுப்பு – ஜீவகவி

நான்கு இளம் கவிஞர்களான முகைதீன்சாலி, பீர்.எம். நாபிக், ஏ.எஸ்.எம். நவாஸ், ஜீவகவி க. அமிதலிங்கம் என்போரின் 38 கவிதைகளடங்கிய சிறு தொகுதி. பேராசிரியர் சோ. சந்திரசேகரம் முன்னுரை எழுதியுள்ளார்.

நமது சூழலின் நாளாந்த தரிசனங்களையும் அதனால் எழுகின்ற மன உணர்வுகளையும் இத்தொகுதிக் கவிஞர்களும் பிரதிபலித்து நிற்கின்றனர். ஈழத்தில் மற்றெல்லாத் துறைகளையும் விட கவிதைத் துறையே மனிதவாழ்வின் அவலங்களையும் ஆனந்தங்களையும் எடுத்துக்காட்டுவதில் அதிக அளவில் தன்முனைப்பானது என்பதை இந்நூலும் நிலைநாட்டத் தவறவில்லை.

வெளியீட்டுத்துறையைப் பொறுத்தவரையிலும் கூட இவ்வாறான கூட்டு முயற்சிகள் எழுத்தாளர்களினதும் வாசகர்களினதும் சுமையை குறைக்க பெரிதும் உதவும் என்பதற்கு இந்நூலும் எடுத்துக்காட்டு.

பக்கங்கள்: 71 விலை: 50/-

**வெளியீடு : சினிலேண்ட், 13, சென் ஜோசப் வீதி, கொழும்பு-14.**

# ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும் (கவிதைகள்) – முருகையன்



நாடறிந்த முற்போக்கு கவிஞர் முருகையன். அவர் 1952-1957 காலகட்டத்திலும், 1994-1998 காலகட்டத்திலும் எழுதி அச்சேறாமல் இருந்த கவிதைகள் தற்போதைய சூழல் தேவை கருதி நூலுருப்பெற்றுள்ளன. அத்தனையும் தமிழ் தேசியவாத உணர்வூட்டும் கவிதைகள். இக்கவிதைகள் ஒருவகையில் கவிஞரின் தொடக்கமும் முடிவுமாகவும் உண்மையான உள்ளக்கிடக்கையாகவும் இருக்கவும் கூடும். ஏற்கனவே வெளிவந்த அவரது இடைப்பட்ட காலத்து முற்போக்கு கவிதைகள் முலாம் பூசப்பட்டவையா என்ற கேள்வியும் எழ நியாயமுண்டு. எது எப்படியிருப்பினும் தமிழ் தேசியவாதப் போராட்டம் தீவிரமடைந்த காலத்தில் எழுதப்பட்டு பெரும் சர்ச்சையையும் 'துரோகி'ப்பட்டத்தையும் ஏற்படுத்திய கவிஞரின் 'பாக்குவெட்டி' உவமைக்கவிதை கவிஞரின் மனசாட்சியின் பிரதிபலிப்பாக எதிர்காலத்திலும் தொடர்ந்திருக்குமா என்ற கேள்விக்கு கவிஞரின் எதிர்காலச் சிருஷ்டிகள்தான் பதில் கூறவேண்டும். இப்போதைக்கு இத்தொகுதி பதிப்புரையில் கூறியவாறு 'துரோகி'ப்பட்டத்திற்கு ஓரளவு பிரயச்சித்தம் செய்யப்பட்டுள்ளது என்றுதான் கூறவேண்டும்.

பக்கங்கள் : 100 விலை : 150/-

**வெளியீடு : தேசிய கலை இலக்கியப் பேரவை**




**- மாணிக்கவாசகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினகரன்

තිනකරන් THINAKARAN

உங்கள் தினகரன் பல்வேறு பயன்மிக்க அம்சங்களைத்
தாங்கி வருகின்றது.
அதிகளவு செய்திகள், சமகால விடயதானங்கள்
அர்த்தபுஷ்டியான கட்டுரைகள்...
தமிழ் பேசும் மக்களின் தேசியக் குரலான தினகரன்
வாசகர்களுக்குப் புதிய தரிசனங்களைத் தருவதில்
தொடர்ந்தும் முன்னிலையில் நிற்கின்றது.
வாசிப்புக் கலாசாரத்தை வளர்த்தெடுப்போம்!
நிறைவுபெற்ற மனிதர்களாக வாழ்ந்திடுவோம்!
வாழ்வதற்காகவே வாசிப்போம்!

## செந்தூரம்

SENTHOORAM

*Entertains You...*

தினகரன் வாரமஞ்சரியின் இலவச இணைப்பிதழ்!
தொலைக்காட்சி கையேட்டுடன்
வயது, பால் வித்தியாசமின்றி உளமறிந்து சகலரையும்
அரவணைத்துச் செல்லும் ஒரு பல்சுவை விருந்து!

சகல லேக்ஹவுஸ் முகவர்களிடமும்,
புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமுது

## சந்தா விபரம்
### உள்நாட்டு சந்தா
### (ரூபாவில்)

| | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|
| நேரடி விநியோகம் கொழும்பு நகருக்குள்) | 360.00 | 180.00 | 90.00 |
| தபால்மூல விநியோகம் | 552.00 | 276.00 | 138.00 |

### வெளிநாட்டு சந்தா
### (அமெரிக்க டொலரில்)

| நாடு | | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|---|
| இந்தியா | $ | 10.00 | 5.00 | 3.00 |
| பாகிஸ்தான் | $ | 10.00 | 5.00 | 3.00 |
| மாலைதீவு | $ | 10.00 | 5.00 | 3.00 |
| சிங்கப்பூர் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| மத்திய கிழக்கு | $ | 12.00 | 6.00 | 3.00 |
| ஹொங்கொங் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| இங்கிலாந்து | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அவுஸ்ரேலியா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| ரஷ்யா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அமெரிக்கா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| கனடா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| மேற்கிந்தியா | $ | 16.50 | 8.25 | 4.25 |

**காசோலைகள், அனுப்பப்படவேண்டிய பெயர்:**
The Associated Newspapers of Ceylon Ltd.

**முகவரி:**

Marketing Manager,
The Associated Newspapers of Ceylon Ltd,
P.o. Box 1198,
Lake House,
Colombo, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org